181

# ஜகன்மோகினி


ஆசிரியை: வை. மு. கோதைநாயகி அம்மாள்.

181

மகாத்மாகாந்தியடிகளே!
இன்னும் ஒரு நூற்றாண்டிரும்.

31 OCT 1944
MADRAS
21-10






தாரண
புரட்டாசி



OCTOBER
1944

JL
ꭤ2"N1225m
N44:21.10.
183094

இதழ் 10

ESTD 1923

# Jagan Mohini

4 ANNAS

The only ONE Big Monthly that has A SPECIAL APPEAL EXCLUSIVELY TO WOMEN

# கடவுளின் சித்தப்படி நிறைவேறும்

அவனன்றி ஓரணுவும் அசையாது ; அவன் தனது திட்டங்களைத் தன் சித்தப்படியே நிறைவேற்றிக்கொள்கிருன். நமக்கு எது நன்மை என்பது அப் பரந்தாமனுக்கே தெரியும்.

நாம் எதிர்பார்த்தபடி சம்பவங்கள் நிகழாவிடில்—பிரச்னைகள் தீராவிடில்—கடவுளின் சித்தம் சரியானபடி செல்லவில்லையென்று நாம் குறை கூறமுடியுமா ?

ஒரு சின்ன விஷயத்தைப் பாருங்கள். சுமார் பத்து தினங்களுக்கு முன், காந்தி—ஜின்னு சம்பாஷணை சம்பந்தமாக வெளிவந்துள்ள போடோக்களிலிருந்து ஒரு சிறந்த படத்தை மோகினி மேலட்டைக்கு எழுதும்படி நமது சித்திர நிபுணரிடம் தெரிவித்தோம். அவர் எழுதி முடித்த படம், முகத்தில் சந்தோஷமின்றி கவலையையும் அதிருப்தியையுமே காட்டியது. ப்ளாக்கூட வழக்கம்போல் திருப்திகரமாய்மையவில்லை! "இதென்ன இப்படி ஒவ்வொன்றும் எதிர்பாராவிதமாய் நடக்கின்றதே ! பின்னே வரும் செய்திக்கு இதெல்லாம் சூசகமோ?" என்றுகூடத் தோன்றியது. சம்பாஷணை வெற்றிபெருவிட்டால்கூட காந்திஜியின் புகழும் பெருமையும் இன்னும் ஒரு படிக்கட்டு ஏறுமே தவிர, குறைவேற்படாது : முறிவுக்கு அவர் ஒருபோதும் காரணமாயிருக்கமாட்டார். சலிப்பிலாத பொறுமைக்கும், ஸத்திய சேவைக்கும் உதாரண புருஷராய் விளங்கும் உத்தமன் முழு முயற்சிசெய்தே தீருவார் !" என்று மனதைத் தேற்றிக்கொண்டோம்: படமும் அச்சாகியது...சம்பாஷணைகளும் முடிந்தன : முறிந்தன ! ஆனல் மகாத்மாவின் மணிவாக்கென்னவோ : "அஹிம்ஸா தர்மத்திலும், சத்திய நெறியிலும் பக்தியுள்ள எவரும், தனது முயற்சி எதிர்பார்த்தபலனை அளிக்கத்தவறியது என்பதற்காக மனச்சோர்வையடையக் கூடாது. தோல்வியே புது முயற்சியைத் தூண்டும் கருவி எனக் கொள்ளுதல் வேண்டும். யாவும் கடவுளின் சித்தப்படியே நிறைவேறும்." என்பதுதான்.

பத்திரிகை தர்மத்தை மீறி சில பத்திரிகைகள் முன் கூட்டியே விஷயங்களை எவ்வாருே தெரிந்துகொண்டு, அனுமதியும் அங்கீகாரமுமின்றி தற்காலிகமாக ரகஸ்யமாகவிருந்த விஷயங்களைப் பகிரங்கப்படுத்தி வெளியிட்டதைக் குறித்து "இது சகிக்கமுடியாத விஷயம்" என்று தமது அதிருப்தியைத் தெரிவித்தார். பத்திரிகை தர்மத்தை மீறியவர்களிடமுள்ள அதிருப்தியைத்தான் நமது சைத்திரிகர் முன்திருஷ்டியுடன் சித்திரித்தார் போலும் !

கடைசியாக வந்துள்ள செய்திகளிலிருந்து பெயரளவில்தான் பேச்சுகள் முறிந்ததென்றும், தேதி குறிப்பிடாமல் சம்பாஷணைகளை ஒத்திவைத்திருப்பதாகக் கருதலாமென்றும் தெரிய வருகிறது. பொது மக்கள் முன்னிலையில் நிலைமையை விளக்க முற்படுவோமென மகாத்மா தெரிவித்துள்ளார். ஏற்கெனவே ஸ்ரீ ஜின்ன "மனக்கசப்பு வேண்டாம். இது எங்கள் முயற்சியின் இறுதி முடிவல்லவென நம்புவோம்" என்று கூறியிருப்பது சிறிது நம்பிக்கைக்கு இன்னமும் இடமளிக்கிறது. என்ருவது ஒரு நாள் இந்த ப்ரச்னை தீர்ந்துதான் ஆகவேண்டும். நல்லகாலமும் பிறக்கவேண்டும், இப்புண்ணிய பூமியில்,

75-வது பிறந்த தினத்தன்று உலகம்போற்றும் உத்தமனுக்கு உலகத்தாரோடு நாமும் வாழ்த்துக் கூறுவோம். "மகாத்மா காந்தியடிகளே ! இன்னம் ஒரு நூற்ருண்டிரும் ! உமது லக்ஷயத்தில் வெற்றிபெற்று இந்தியத்தாயின் புகழ் இவ்வுலகம் உள்ளளவும் பிரகாசிக்கும் வண்ணம் செய்வீராக ! கீதாசாரியன் அருளுக !"

—வை. மு. ஸ்ரீ.





# ஜகன்மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. -திருவள்ளுவர்

ஜகன்மோகினியென்னுஞ் சஞ்சிகையைக்
காக்க ஜகன்மோகினி! மனத்தைச் சார்ந்து.
-வீரராகவ கவி

Vol. 21. No. 10. தாரண
Oct. 1944 புரட்டாசி

182094
600 005

## முக்கிய அறிவிப்பு

1. வழக்கமாக நாம உபயோகிக்கும் 40''×30'' என்ற அளவுக்குப் பதிலாக 40''×27'' என்ற அளவில் தப்பிதமாக நியூஸ்ப்ரின்ட் அனுப்பிவிட்டதால், இவ்விதழில் சில பக்கங்களின் உயரமோ அல்லது அகலமோ பாதிக்கப்பட்டிருக்கிறது. மார்ஜின் இல்லாமலே சில பக்கங்கள் அச்சாகியிருக்கின்றன. வாசகர்களுக்கு விஷயமே ப்ரதானமாகையால் இதைப்பொருட்படுத்த மாட்டார்களென்று நம்புகிறோம். அடுத்தஇதழ் முதல் சரியான அளவிலேயே வெளிவரும்.

2. மோகினி 22-வது ஆண்டு மலர் விஷயமாக ஏன் இன்னும் ஒருவித அறிவிப்பும் வெளியிடவில்லையென்று வாசகர்கள் மிக்க ஆர்வத்துடன் கேட்கிறார்கள். எந்த அளவில், எவ்வளவு பக்கங்களுடன் வெளியிடலாமென்பதைக் குறித்துச் சர்க்காரிடமிருந்து இன்னும் பதில்வரவில்லை; மலரின் அளவும் அழகும் அவர்கள் விதிக்கப்போகும் உத்திரவைப் பொருத்திருக்கிறது. அடுத்த இதழிலாவது விவரம் வெளியிடமுடியும் என்று எதிர்பார்க்கிறோம்.

3. அடுத்துவெளிவரவிருக்கும் மோகினி பிரசுரங்களைக்குறித்தரிஸர்வேஷன்கூபன் உள்ளேஇருக்கிறது. உடனேமுந்துங்கள்.

# காதலால் உய்ந்தவர் பரவை நாச்சியார்

"பூமியை வென்று அடிமைப்படுத்தினோம்!" என்று சிலம்புகள் ஒலி செய்ய, அந்த வெற்றி முழக்கத்தை மேகலையும் உறுதிப்படுத்த, மேகத்தையும் வென்றோமென்று கூந்தல் உல்லாஸமாக அசைந்தாட, "ஆம், விண்ணும் பணிந்தது!" என்று, அவள் அணிந்திருந்த பூக்களையும், பூமாலைகளையும் சுற்றிக்கொண்டே சென்ற வண்டுகள் ரீங்காரம்செய்ய, அடியிட்டு வந்துகொண்டிருந்தார் பரவையார். அப்படிச் சிங்காரித்துக் கொண்டு வந்தவர் கோவிலில் ஸ்வாமி தரிசனத்திற்குப் புறப்பட்டவர்தான்.

அதே சமயம் சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் சிவதரிசனம் செய்துவிட்டு, வந்துகொண்டிருந்தார். இருவர் கண்களும் சந்தித்தனவென்று சொல்லவும் வேண்டுமா?

"கற்பகத்தின் பூங்கொம்போ?
காமன்தன் பெருவாழ்வோ?
பொற்புடைய புண்ணியத்தின்
புண்ணியமோ? புயல்சுமந்து
விற்குவளை பவளமலர்
மதிபூத்த விரைக்கொடியோ?
அற்புதமோ! சிவனருளோ!
அறியேன்" என்(று) அதிசயித்தார்.

[பொற்பு=அழகு; புயல்=மேகம்; விற்குவளை=வில்லும் நீலமலரும்; விரை=வாசனை.]

சாதாரணமான காதலர் போலவே தம்பிரான் தோழர் என்று பிரசித்தி பெற்றிருந்த சுந்தரமூர்த்தியும் தமது உள்ளம் கவர்ந்த அந்தப் பெண்மணியைக் குறித்து எண்ணத் தொடங்கினர்.

"கற்பகத்தின் பூங்கொம்போ? காமன்தன்பெருவாழ்வோ?" என்று தெய்விக அழகாக அவள் அழகைக் கருதினர், மற்றக் காதலர்



களைப் போலவே. கூந்தலை மேகமாகவும், புருவத்தை வில்லாகவும், கண்களை நீல மலராகவும், முகமண்டலத்தைச் சந்திர மண்டலமாகவும், பெண்கொடியைப் பூங்கொடியாகவும்தான் கருதினர்.

எனினும் தம்பிரான் தோழர் அல்லவா? "புண்ணியத்திற்குப்புண்ணியமாக இருப்பதொன்றே இப்படி அழகுபெற்று வருகிறதோ?" என்று தமக்குள் தாமே சொல்லிக்கொண்

பி. ஸ்ரீ



31 OCT 1944

டார். பிறகு "அற்புதமோ! சிவனருளோ இவ் வடிவம் தான்!" என்று அதிசயத்தாராம்.

சிவனருள் நிறைந்து ததும்பிய அந்த நெஞ்சு காதலையும் காதலியையும் அந்த அருளாகவே நோக்கியதில் அதிசயமில்லை.

இப்படி அதிசயித்துக்கொண்டே சுந்தரமூர்த்தி நின்றதும், இவருக்கும் பரவையாருக்கும் நடுவே வேருெருவரும் வந்து நின்ருர்; அவர் ஆயுதபாணியாகவே வந்து நின்ருர் என்று அதிசயமாகக் குறிப்பிடுகிருர் பெரிய புராண ஆசிரியரான சேக்கிழார். அந்த ஆசாமி யாரென்று சொல்லவும் வேண்டுமா!

நடு நின்ருர்
படைமதனுர்

[படைமதனுர் — ஆயுதபாணியாகி நின்ற மன்மதனுர்.]

இந்தப் போரில் படையோடு தோன்றிய மன்மதனுருக்குத்தான் வெற்றி என்பது வெளிப்படை. அதுவும் அனாயாச வெற்றி. இவர்கள் இருவரும் கருத்தொருமித்து அந்த வெற்றியை அவ்வளவு சுலபமாக்கி விட்டார்கள்!

பரவையாருக்கு, கண்கொள்ளாத சௌந்தரியமே அப்படி ஓர் ஆணுருவம் கொண்டு கதிர்வீசி நின்றதென்று தோன்றியது. அந்த அழகு விண்கொள்ளாத பேரொளியாகவும் அவர் உள்ளத்தைக் கூசச் செய்தது.

"முன்னேவந் தெதிர்தோன்றும்
 முருகனே ? பெருகொளியால்
தன்நேரில் மாரனே ?
 தார்மார்பின் விஞ்சையனே
மின்நேர்செஞ் சடைஅண்ணல்
 மெய்யருள் பெற்றுடையவனே?
என்னே ! என் மனம்திரித்த
 இவன்யாரோ ?" என நினைந்தார்

[பெருகொளி = பெருகுகின்ற ஒளி; தன் நேரில் = தனக்கு நிகரில்லாத; தார் = மாலை; விஞ்சையன் =

வித்யாதரன்; மின் நேர்=மின்னலை ஒத்த; செஞ்சடை அண்ணல்= சிவந்த ஜடையோடு கூடிய சிவ பெருமான்; திரித்த=மாறுபடச் செய்த.]

இப்படி நினைத்துக்கொண்டே பரவையார் கோயிலுக்குள் போய் விட்டார். அப்போது சுந்தரர், "அந்த இளம் பெண் யாரோ?" என்று அருகே இருந்தவர்களை மெள்ள விசாரித்துத் தெரிந்துகொண்டார். மறுபடியும் கோவிலுக்குள்ளே சென்றார். பரவையார் சிவதரிச னம் செய்துவிட்டு ஒரு பக்கமாகப் புறப்பட்டார். சுந்தரர் தமது நோக் கம் நிறைவேறவேணுமென்று அப் பெருமானை அடிபணிந்துவிட்டு, "ஈசன் அருள் எங்கே சென்றது? என் உயிர் எங்கே நின்றது?" என் றெல்லாம் அவளைத் தேடுவாராயி னர்.

மாலையும் வந்தது; வானமும் இருண்டது. பரவையாரின் புன் சிரிப்பைப்போல் வெண்ணிலாவும் அரும்பியது, சுந்தரமூர்த்தியின் கண்முன்பு. நீண்ட நிலாக்கதிர்கள் அந்தச் சிவபக்தர்களின் கண்முன்பு திருநீற்றின் பேரொளிபோன்று பரவி வந்தன. சிவநேசக் காதலர் களும் மற்றக் காதலர்களைப்போல் விரக தாபத்தினால் வருந்தினார்கள்; நிலாவைப் பழித்தார்கள்; தென்ற லைப் பழித்தார்கள்; மன்மதனைப் பழித்தார்கள். இந்தப் பழிப்பிற்கெல் லாம் அஞ்சுகிறவனா மன்மதன்! தன் வில்லின் வலிமைகாட்டி மல ரம்புகளைச் சொரிந்துவிட்டானாம்.

பரவையாருக்கும் சுந்தரமூர்த்தி களுக்கும் திருமணம் வெகு விமர் சையாக நடைபெற்றது. இவர்களு டைய காதல் பக்திக்காதலுக்கு இடையூறாகவில்லை.

தன்னையா ளுடைய பிரான்
சரணார விந்த மலர்
சென்னியிலுஞ் சிந்தையிலும்
மலர்வித்துத் திருப்பதிகம்
பன்னுதமிழ்த் தொடைமாலை
பலசாத்திப் பரவையெனும்
மின்னிடையா ளுடன்கூட
விளையாடிச் செல்கின்றார்.

[சென்னி=சிரசு; தொடை மாலை=தொடுத்த மாலை.]

என்று சேக்கிழார் வர்ணிக்கிறாரல்லவா!

திருத்தொண்டர் தொகை என்ற பதிகம் இயற்றி, சிவநேசச் செல் வர்கள் இன்னார் இன்னாரென்று அறிவித்த பெருமை சுந்தரமூர்த்தி களுக்கே உரியது. தேவாரம் பாடிய மூவருள் இவர் ஒருவர் என்பதும் பிரசித்தம். தமிழ் நாட்டில் சிவபக்தி என்ற விதை சிவபோகமாக முதிர்ந்து சிறந்து விளைந்ததற்கும் சுந்தரமூர்த்தி ஒரு முக்கியமான காரணமாவர். இத்தகைய செயற் கருஞ் செயல்களையெல்லாம் செய்த சுந்தரமூர்த்தி சுவாமிக்கும் பரவை யாரின் காதல் அருந்துணையாக அமைந்ததென்றால், பரவையாரை யும்,-சுந்தரரையும் கூட,-பரவை யாரின் பவித்திரமான காதலால் உய்ந்தவர்கள் என்று ஏன் சொல்லக்கூடாது?


## ரூபாய் மூன்று

முன் பணம் அனுப்புகிறவர்க ளுக்கு நந்தவனம் கிரீஷ் ருது மல ரும், வர்ஷ ருதுமலரும் ரிஜிஸ்டர் போஸ்டில் தபாற்செலவின்றி அனுப்பப்படும்.

ஒவ்வொன்றும் சிறந்தமுறையில் உயர்ந்த அமைப்பில், அழகிய படங் களுடன் அரிய விருந்தாயும், ஹஸ்த பூஷணமாயும் விளங்குகிறது. உடனே முந்துங்கள்.

—நந்தவனம் டிபார்ட்மெண்ட்.

வை.மு.ஸ்ரீநிவாஸன். எம்.ஏ.பி.எல்.



# இந்திரனின் புதல்வன்



“இந்திரனின் புதல்வன்” என்ற தலைப்புடன் ஒரு கழுதையின் தலையைச் சித்திரித்து இக்கட்டுரையைத் துவக்குவதன் தாத்பர்யமென்ன? வரவர மாமியார் கழுதை போலானாள் என்பதுபோல இந்திரனின் புதல்வனும் கர்த்தபமாக மாறினான் என்பது பொருளோ?” என்று கேட்கிறீர்களா? கழுதைபோல் ஆனான் என்றில்லை; கழுதையாகவே தான் ஆனான்! ஆனால் வழக்கமாகக் குறிப்பிடப்படும் மாமியாரைப் போல் மோசமாகிவிடவில்லை. தனது சிறந்த கல்வியையும் ஞானத்தையும் சிறிதும் இழக்கவில்லை: சாபத்தின் பலனாக ரூபத்தின் அழகை இழக்க நேர்ந்தது. ஸம்ஸ்க்ருத இலக்கியத்தில் பொதிந்துகிடக்கும் அனேக ரஸமான விஷயங்களுள் சிறந்து விளங்கும் விக்ரமாதித்தன் சரித்திரத்தில் ஒரு பகுதியே இந்தக் கதை: விக்ரமனின் தந்தையைக் குறித்ததே இது என்பதைக் கேட்க ஆச்சரியப் படுகிறீர்களல்லவா?

* * * *

கந்தர்வசேனன் எனும் தேவன் இந்திரனின் புதல்வன். மகாவல்லமை பொருந்திய அவ்வீரனின் பிரதாபங்களைக்குறித்துப் பல கதைகள் உலாவுகின்றன. விக்ரமாதித்தனின் தந்தையாக அமையும்படியான பெரும் பாக்கியம் பெற்றிருந்த இந்நாயகனுக்கு துரதிர்ஷ்ட வசத்தால் ஏற்பட்ட ஒரு சாபமும், அதன் பின்னர் அவனது வாழ்க்கைப் படகு சென்ற போக்கும், அவனது முடிவும் நமது உள்ளத்தைக் கவரும் வண்ணம் சம்ஸ்க்ருத இலக்கியங்களில் வர்ணிக்கப்பட்டுள்ளன.

ஒரு சமயம், கந்தர்வசேனன் ஒரு அப்ஸரஸ்ஸை இச்சித்ததன் பலனாக பூமண்டலத்தில் கழுதை ரூபத்துடன் உலாவவேண்டுமெனச் சபிக்கப்பட்டான்! பிறகு தேவர்கள் அவன் சார்பாக மிகவும் வேண்டிக் கொண்டதனால் இந்த சாபம் ஓரளவு மாற்றப்பட்டது: இருள் சூழ்ந்திருக்கும் நேரத்தில்—அதாவது இரவில் மட்டும்—மனித ரூபத்துடன் இருக்கும்படியும், மற்ற பொழுதெல்லாம் கழுதை ரூபத்துடனிருக்கும்படியும்!

இக் கடுஞ் சாபத்தினால் அவதியுற்றிருந்தபோது கந்தர்வசேனன் தனது கலியாண விஷயமாக தாரா தேசத்து மன்னனை சந்தித்துப் பேசினான். (மனித ரூபத்துடனிருக்கும் போது). இந்திரனின் மகனே நேரில் வந்து பெண்ணைக் கேட்டால் மாட்டேனென்று ஏன் சொல்கிறான் அம் மன்னன்? அவனுக்கு இந்தச் சாபத்தைக் குறித்து ஒன்றும் தெரிய சந்தர்ப்பமில்லையல்லவா!



தன் பெண்ணைக் கலியாணம் செய்து கொடுப்பதாக வாக்களித்தான்.

விவாக தினமும் வந்தது; ராஜ சபையில் சகல வித ஜனங்களும் திரள் திரளாக நிறைந்தனர், மாப்பிள்ளையின் வரவை ஆவலுடன் எதிர்பார்த்தவாறு. அது பகல்நேரமாகையால் கந்தர்வ சேனனால் தன்னுடைய சுய ரூபத்திலிருக்கமுடியவில்லை. கழுதை ரூபத்துடனேயே கலியாண மண்டபத்தை அடைந்தான். வாத்திய முழக்கத்தையும் கீத ஒலியையும் கேட்டுத் தனது குரலின் இனிமையையும் சபையோர்களுக்குச் சிற்று காட்டத் தீர்மானித்தான். ரூபத்தின் எழிலையும், குரலின் தன்மையையும் கண்ட சபையோர்கள் துக்க சாகரத்தில் மூழ்கினர். "அழகுப்பிம்பம்போன்றிருந்த



கன்னியை இவ்வாறு கழுதைக்கா மணம் செய்விப்பது?" என்று திகைத்துவிட்டனர்.

துக்கமும், அதனால் நிசப்தமும் நிறைந்திருந்த சபையில் தைரியமாக ஒருவர் முன்வந்து, "மகாராஜா! இவர்தான் இந்திரனின் தவப் புதல்வரோ! பேஷ்! சரியான வரனேயே தேடியிருக்கிறீர் உமது அருமைப் புதல்விக்கு! உமது உள்ளம் குளிர்ந்து நிறைந்துதானே இருக்கிறது! தாமதம் செய்யாதீர்! கலியாணம் நடக்கட்டும்! நல்ல காரியங்கள் செய்வதில் எப்போதுமே தாமதம் கூடாது! இதுவரை இவ்வளவு சிறப்பான திருமணத்தை நாங்கள் கண்டதேயில்லை.

எப்பொழுதோ ஒரு சமயம் ஒரு கழுதைக்கும் ஒட்டகத்துக்கும் கலியாணம் நடந்ததாகவும், அப்போது அக் கழுதை, நிமிர்ந்த தலையுடன் ஒட்டகத்தைப் பார்த்து "என்ன பாக்கியம்! எப்பேர்ப்பட்ட கணவன்!" என்று வியந்ததாகவும், அதன் இனிய குரலைக் கேட்ட ஒட்டகமோ "எப்பேர்ப்பட்ட மதுரமான குரல்!" என்று ஆச்சரியப்பட்டதாகவும் கேள்விப்பட்டிருக்கிறோம். அத்திருமணத்தில் இருவரும் ஒரே அந்தஸ்துடன் (மிருகங்களாகவே) இருந்தனர்; அதெல்லாம் என்ன! இந்தத் திருமணத்தின் ஜோடியே ஜோடி! இதற்கு நிகர் வேறேது?" என்றார்.

"ராஜனே! முகூர்த்த சமயத்தில் சந்தோஷத்தை வெளியிடும் பொருட்டு புனிதமான சங்கம் (சங்கு) ஊதப்படும்; இங்கு அதற்கு அவசியமேயில்லை!" என்றனர் சிலர் (கழுதை கத்துவதே சுபசகுனமாயிற்றே என்று பொருள்படும்படி!) ஸ்த்ரீகளோ கோவெனக் கதறினர்.

ஆனால் கந்தர்வசேனனே தனக்களித்த வாக்கை நிறைவேற்றும்படி வற்புறுத்தினன். ஸம்ஸ்க்ருதத்திலேயே பேசினன்!

"உண்மையைப் பேசுவதை விட உயர்ந்தது வேறெதுவுமில்லை; இம்மானிட உடல் வெறும் வெளி வேஷத்தைப் போன்றது. ஞானிகளும் அறிவாளிகளும் ஒருவனுடைய மதிப்பை அவனது அலங்

காரத்தினின்றும் உடையினின்றும் கண்டுகொள்வதில்லை''

என்றெல்லாம் தத்துவம் பேசிவிட்டு, தான் ஒரு சாபத்தின் பலனைப் பகலில் இந்த ரூபத்துடனிருப்பதாகவும் இரவில் சுய ரூபத்துடனிருப்பதாகவும் தெரிவித்தான்.

ஸம்ஸ்க்ருதத்திலேயே கழுதை பெரிய ப்ரஸங்கம் செய்ய வாரம்பித்ததென்றால்! "கண்டிப்பாக இவன் இந்திரனின் புதல்வன்தான்! இல்லாவிடில் சம்ஸ்க்ருதத்தில் கழுதை பேசுமா?" என்றனர் எல்லோரும். சிறிதும் தயக்கமின்றி அரசன் தனது மகளைக் கந்தர்வசேனனுக்குப் பாணிக்கிரகணம் செய்வித்தான்.

இத்தம்பதிகளின் புதல்வனே விக்ரமாதித்தன். "ஆயிரம் யானைகளின் பலத்தைக் கொண்டவனையிருப்பான் எனக்குப் பிறக்கப் போகும் புதல்வன்!" என்று உறுதி கூறினனும் கந்தர்வசேனன்; ஆனல் அவன் விக்ரமன் பிறக்கும்வரை உயிருடனில்லை, பாவம்! கந்தர்வசேனன் இறக்கும்போது கர்ப்பமாயிருந்த அவன் மனைவிக்குக் குழந்தை பிறக்காது தடுத்துவிட வேண்டுமென இந்திரன் தீர்மானித்தானும். காரணம் என்னவோ! அது கேட்டு, பூர்ண கர்ப்பிணியான அவள் தற்கொலைபுரிந்து கொண்டாளாம்! ஒன்பதாம் மாதத்தில் நடந்த இக்கோர சம்பவத்தின் பலன் விக்ரமனுடைய அதிசயப் பிறப்புதான்! பிறக்கும்போது தாயுமின்றித் தந்தையுமின்றி அநாதையாகவே விளங்கிய குழந்தையைக் கண்டு மனமிரங்கிய அதன் பாட்டனாகிய இந்திரனே அவனை வளர்த்து உலகம் போற்றும் விக்கிரமாதித்தனுக்கினன்!

கழுதையின் கதை முடிந்தது; அதன் பிள்ளையின் கதைதான் உங்களுக்கே தெரியுமே.

## புத்தக விமர்சனம்

எதற்கெடுத்தாலும் ரேஷனிங் நிலவியுள்ள இக்காலத்தில் நமது மதிப்புரையையும் ரேஷன் செய்யவேண்டுவது அவசிய மல்லவா? சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் என்பதே ஒரு கலையாயிற்றே! ஆகையால் இந்த அளந்த விமர்சனம் தான் வெளியிடப்படுகிறது.

### 1. ரவீந்திரநாத் டாகுர். (ப. 96. அணு 8.)

நண்பர் கி. சந்திரசேகரன் எழுதிய இப்புத்தகத்திற்கு பாரதமணி வெங்கடரமணி ஓர் அருமையான முன்னுரையை அளித்து புத்தகத்தின் மதிப்பை ரொம்பவும் பிரகாசிக்கச்செய்திருக்கிருர். முன்னுரையைப் படிப்பதற்கே இந்நூலை வாங்கலாம்: அவ்வளவு ரஸமாயிருக்கிறது. புத்தகமும் பெரியவிஷயத்தைச் சிறிய அளவில் அழகாய் வெளியிட்டிருக்கிறது. முன்னுரையில் கூறப்பட்டதுபோல், கவிதையைப் பெருக்கும் நிகழ்ச்சிகளையும், நிகழ்ச்சிகளை ஒட்டிப் பெருகிநிற்கும் டாகுரின் காவியங்களையும் ஒன்ருேடொன்றை உணர்ச்சியுடன் பொருத்திக் கதைபோல் ரஸமாக அளித்திருக்கிருர் ஆசிரியர், ஒரு கவிதா முத்துமாலையுடன்.

### 2. கைலாசம்—மானஸரோவர். (ப. 96. அணு 8.)

நம் வாழ்நாளுள் கைலாசம்-மானஸரோவர் முதலிய அற்புத அழகு வாய்ந்த இடங்களைக் காணப்போகிருேமோ இல்லையோ! அத்தகைய வசீகரமான காட்சிகளுக்கிடையே மானஸ யாத்திரையாவது செய்வதற்கு இந்நூலை ஓர் வழிகாட்டியாகப் பயன் படுத்திக் கொள்ளலாம். சமீபத்தில் ஷ இடங்களுக்கு நேரில் சென்றுவந்த நண்பர் வேதாந்தம் தனது யாத்திரானுபவங்களை டைரியைப்போல் எழுதி நம்மை மகிழ்விக்கிருர்; பல இடங்களுக்கு நம்மைக் காலணு செலவில்லாமலும் சரீர சிரமமில்லாமலும் அழைத்துச் செல்கிருர்!

ஷ 2 புத்தகங்களும் தினமணி வெளியீடுகள்

—வை. மு. ஸ்ரீ.

# ஆனந்த கீதம்

பேஹாக் ராகம் | சுத்தானந்த பாரதி | ஆதி தாளம்

ஆனந்தம் ஆனந்தம் என்போம்—பர
மானந்தமேயுல கானதென்றறிவோம்

சச்சிதானந்தவைபோகம்— இந்த
தாரணி வாழ்வு பராசக்தி யோகம்;
அச்சத்துயர் மனமோகம்—பல
வாகிய யாவும் பிரம்மத்தில் ஏகம் (ஆன)

நித்தியமாகிய பொருளை—இங்கே
நீளுயிராக நிலாவும் அருளை
சுத்த ஹ்ருதயத்திற் கூடி—ஆத்ம
சுதந்தர மான பதம்பெற வாழ்வோம் (ஆன)

உள்ளத்தில் அன்பினை நாட்டி—எல்லா
உயிர்களும் ஒன்றெனும் ஒற்றுமை காட்டி,
வெள்ளத்தில் தோணியைப்போலே—கால
வேகத்திற் செல்வோம் விவேகத்தி னாலே (ஆன)

என்றும் உயிர்க் குயிராகிப்—புவி
எங்கும் விளையாடும் ஏகரஸத்தை
ஒன்றி யுணர்வதே யோகம்—அந்த
ஒற்றுமையாலே சமத்துவம் ஆகும் (ஆன)

எண்ணித் துணிவது யோகம்—அதை
ஈசனின் பூசையாய் இயற்றலும் யோகம்
உண்ணலும் உறங்கலும் யோகம்—இந்த
உடலுயிர் வாழ்க்கையுங் கடவுளின் யோகம் (ஆன)



யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்

# ஆனந்த உணர்ச்சி

பார்க்கப்போனல் உலகம் ஒரு லீலை; அந்த லீலையை நடத்துகிற வன் பரம சக்திமானை ஒருவன்; இயற்கை அவனுக்கு உபாதான காரணம், உலகம் இயற்கையின் மூலம் இறைவன் விளையாட்டு; இந்த விளையாட்டிலிருந்து எவரும் விலகியிருக்க முடியாது. உலகம் அநித்யம், மாயை, கானல் நீர் என்று கண்ணை மூடிக்கொள்ளும் மாயாவாதிகளும், பசி கிண்டும் போது, சாப்பாட்டுவேலைநடத்தித்தா னகவேண்டும். இறைவன், ஜீவன், உலகம் ஆகிய மூன்று தத்துவங்கள், முப்பொருள்கள், என்றும் உள்ள தவை, ஒன்றையொன்று சார்ந் தவை.

ஜீவ நாடகத்திற்கு அரங்கமாக உலகை இறைவன் படைத்தான். எப்படி என்பதைத் தைத்திரிய உபநிஷத்து ஆனந்தவல்லியில் தெளிவாகச் சொல்லும். பிரம்மம் சத்தியம் ஞானம் அனந்தம்; ஆகா சம் பிரம்ம சரீரம்; அதுவே ப்ராண நிலயம். அதிலிருந்து வாயு, அக்னி, நீர், மண். அதிலிருந்து பயிர் அதை யுண்டு உயிர்கள்—எல்லாம் படிப் படியாக வருகின்றன. இந்த சிருஷ்டி லீலை எங்கும் எக்காலமும் உண்டு. எப்போதோ ஒரு காலத்தில் பிரளயம் வந்து, எல்லாம் ஆகாசத் தில் ஒடுங்கி, ஆகாசமும் பிரம்மத்தில் ஒடுங்கி எல்லாம் சூன்யமாகலாம்.

ஆனல் இது நமது காலத்தில் நடக் காது. ஆயிரம் ஆயிரம் நூற்றுண்டு களிலும் நடக்காது. ஆதலால் உல கம் மாயை அநித்யம், நாம் எங்கேயாவது தப்பிக்கொண்டு போவோம் என்று பதறவேண்டிய தில்லை. அநித்ய மாயா பாவனையை விட்டு, நித்ய விபூதி லீலாபாவனையை நாம் வளர்க்கவேண்டும். உலகம் துன்பக்கனவு, துக்கம் என்று பெருமூச்சு விட்டழுவதில், ஒரு பயனுமில்லை. புத்தர் அப்படி அழு தார்; துறந்தார், மறுபடி வந்து உயிர்கள் வாழவே வழிகாட்டினர். துக்கம், அழுகை, விசனம் எல்லாம் பேதபுத்தியின் குறைகள். உலகம் ஆனந்த நிலயமே, வாழ்க்கை ஆனந்த ஜீவநதியே; இரண்டையும் சரியாகப் பயன் படுத்தினல், மானிட வாழ்வு அமரானந்தம் பெறும். மானிடம், தன்னுள் அந்தர் யாமியாயிருக்கும் பரமாத்மனை அடைந்து வாழ்ந்தால் இன்புறும்.

இந்த இன்பத்தை நம்மாழ்வார் அநுபவித்து,

"பொலிக பொலிக போயிற்று
வல்லுயிர்ச் சாபம்"

என்று பாடினர். இந்த இன்பத்தை அப்பர் அனுபவித்து

இன்பமே எந்நாளுந்
துன்பமில்லை

என்றார். இதேஇன்பத்தை உபநிஷத் முனிவர் அனுபவித்து, ஆனந்தமே பிரம்மம், ஆனந்தமே ஜீவன், அது பிறந்து வளர்ந்து சேர்வதும் ஆனந்தமே என்று பாடினர்கள். ஆதலால் மனித சமுதாயத்திற்கு வழிகாட்டும் கவிகள் முதலில் மாயா வாதத்தை விட்டு, உடல் பொய், உலகம் பொய், வாழ்வு துன்பக் கனவு என்னும் பொய்வாதத்தை விட்டு, உலகை ஈச்வர லீலாரங்க மாகவும், உயிரை ஆனந்த ஊற்ருக வும், வாழ்வை ஆனந்த லீலையாக வும், கடவுளை சச்சிதானந்த மய மாகவும் பாடவேண்டும். அப்போது

மானிடருக்கு வாழ்க்கையில் பிரிய முண்டாகும்; நாட்டையும் வீட்டையும் பாதுகாப்பதிலும் கருத்துண்டாகும். இன்றேல் எல்லாம் அநித்தியந்தானே, இன்றைக்கிருப்பார் நாளைக்கில்லை. ஆதலால் உடலைக் கவனிப்பானேன், உலகைக் கவனிப்பானேன். வீட்டைக் கவனிப்பானேன், மாயா வடிவான பெண்களைக் கட்டிக்கொண்டு குடும்பம் வளர்ப்பானேன்; பேசாமல் காற்றுடக் காடு மலைகளில், பசு பட்சிகள் போலத் திரிவோம் என்ற மித்யா விரக்தி (பொய்த்துறவு) உண்டாகும்.

மஹாபாரதத்திற்குப் பிறகு இப்படிப்பட்ட பொய்யுணர்ச்சிகள் மலிந்து, நமது நாட்டின் பலத்தைக் குறைத்தன.

பிறகு நாட்டில் ஏகப்பட்ட போலித்துறவிகள் வலுத்தனர். அவர்கள் ஒருவேலையும் செய்யாமல், பாடுபடும் குடும்பிகளின் உணவை உண்டு, கோயில் காளைகள் போலத் திரிந்தனர். அவர்களால் தமக்கும் பயனில்லை, பிறர்க்கும் பயனில்லை; நம்மவருக்கு "உலகம் பொய்; நாடு பொய்; இந்தப் பொய்யுலகை யார் ஆண்டு எப்படிக் குட்டிச்சுவராய்ப் போனாலென்ன?" என்ற அசட்டு வைராக்கியம் வலுத்தது. உடலில் எப்போது ஜீவன் உள்ளதோ, அப்போது உலகிலும் அஃதுள்ளது; உலகை மறக்கமுடியாது. நாம் நமது வீட்டையும் நாட்டையும் கவனிக்காமல் தூங்கினால், "நன்றாகத் தூங்கு தம்பி, பங்கா வேண்டுமானாலும் போடுகிறேன்" என்று அடுத்த பேர்வழி நம்மைச் சூறையாடி நாட்டைப் பறித்துக்கொள்கிறான். இதுதான் நமது நாடு அன்னியருக்கு அடிமையான முதற் காரணம். பொன்னான நாட்டை அனுபவிக்கத் தெரியாமல், நாம பறிகொடுத்தோம்; அனுபவிக்கத் தெரிந்தவன் ஆளுகிறான். மனிதஜாதி உடல், உள்ளம், வீடு, நாடு, உலகம், தான், சமுதாயம் அனைத்தையும் ஆத்ம சமானமாகக் கருதி, முன்னேற்றும் சக்திபெற்ற ஆனந்த கீதங்கள் நமக்குத் தேவை. இராமன், கண்ணன், ஆழ்வாராதிகள், உடையவர், தேசிகர், மத்வாசாரியார், சைதன்யர், தயானந்தர், குருநாநகர் முதலிய மஹான்கள் அனைவரும் உலகை வெறுக்கவில்லை. உலகை எம்பெருமான் லீலாரங்கமாகக் கண்டு, நர நாராயண சேவை செய்தார்கள். இந்தச் சேவை இக்காலம் எல்லாரும் விரும்புவதுதான். பொதுநலம் என்ற பெயரால் இது விளங்குகிறது. தரித்திரநாராயண சேவை என்று விவேகாநந்தரும் மஹாத்மாகாந்தியும் சொல்லுகிறார்கள்.

சங்கராசாரியார் ஒரு இடத்தில் பிரம்மம் சத்தியம் ஜகம் மித்தை என்கிறார்; வாழ்வை தாமரை இலை மேல் நீர்த்துளிபோன்றது என்கிறார்.

இதுபரம ஞானம் முதிர்ந்து ஜீவ ஜகபரத்தை மிஞ்சிய துரியாதீத நிலையில் எல்லாந் தன்மயம், தானன்றி வேறில்லை என்றுணரும் ஏகரஸ சைதன்யத்தை அடைந்தவர்கள் சொல்லலாம். அவர்கள் பத்துக் கோடியில் ஒருவர் இருக்கலாம். அவர்கள் அப்படிச் சொல்வதன் பொருள் உலகையும் ஜீவனையும் விட்டுவிடவேண்டும் என்பதன்று. பஞ்சாமிருதம் உண்டவனுக்கு இலுப்பம்பூ என்ன பிரமாதம்; இதுவும் ஒரு இனிமையா என்று தோன்றும்; அதேமாதிரி பிரம்மானந்தமடைந்த யோகிக்கு உலகிலுள்ள சிற்றின்பம் அற்பமாகவே

தோன்றும். அதனால் இது பொய் என்றாகாது. அந்தப் பரம சுகத்திற்கு இது எம்மாத்திரம். பிரம்ம நிச்சயம் அறிந்தவருக்கு உலகம் ஒரு பொருட்டாகாது என்றபாவனையிலேதான் சங்கரரும் பேசியிருக்கிறார். இன்றேல் அவர் ஊர் ஊராக, காடெல்லாம் கால்நடையாகச் சென்று, ஷண்மதஸ்தாபனம் செய்திருக்கமாட்டார். உலகம் பொய்தானே நாம் பேசுவானேன், எழுதுவானேன் என்று சும்மா இருந்திருப்பார். ஆதலால் எந்த வழியாகப் பார்த்தாலும், நாம் இருக்குமட்டும், உடல், மனம், வீடு நாடு உலகு ஆகிய ஜீவ பந்தங்களை முற்றிலும் அசட்டை செய்ய முடியாது.

ஆனால் இக்காலத்தவர் உலகை அசட்டை செய்வதில்லை, பொது நலம் நிரம்பச் செய்து வருகிறார்கள்; ஆனால் வீடு நாடு உடல் உலகம் இவற்றிற்குப் பின்னால் உள்ள புருஷனையும் புருஷோத்தமனையும், அவர்கள் உணரவேயில்லை. கீதையின் தத்துவத்தை அவர்கள் அறிந்தால், செய்வதெல்லாம் பிரம்ம யக்ஞமாக, பரமாத்ம பூஜையாக, யோக சாதனமாகச் செய்வார்கள். ஊணுறக்கங்கூட யோகமாக நடக்கட்டும் என்றான் கண்ணபிரான்; உண்ணுஞ் சோறும் பருகும் நீரும் கண்ணனுணர்வில் கலந்தே உட்கொண்டார் நம்மாழ்வார். இதுதான் நமது வேதாகமங்கள் சொல்லும் கர்ம ரகசியம்.

ஈச்வரார்ப்பணமாக உசிதமான கர்மங்களைச் செய்தால், சித்த சாந்தியும் ஆத்ம சுத்தியும், ஜீவன் முக்தியும் பெறலாம்; சர்வாத்ம ஐக்கியத்தில் வாழலாம் என்பது வேதம், உபநிஷத், கீதை, ஆகிய மஹா வாக்கியங்களின் சாரமாகும். இந்த யோகமின்றி, அர்ப்பணமின்றி, நமது கர்மங்களெல்லாம், எனது யான், எனக்கு, என்னும் அகம்பாவநாடகமாக முடிகின்றன. இந்த அகம்பாவத்தினாலேதான் மேற்கிலும் கிழக்கிலும் மனித காரியங்களெல்லாம் போரும் துயருமாகப் புகைந்து போகின்றன.

சீர்திருத்தத்தின் இரண்டாவது தத்துவம் ஜீவன் சர்வாந்தர்யாமியும் சர்வ சக்திமானுமான இறைவனுடன் ஐக்கியப்பட்டே செய்வன திருந்தச்செய்யவேண்டும் என்பதே. இந்தத் தத்துவத்தையும் கவிகள் மனித சமுதாயத்திற்கு நினைப்பூட்ட வேண்டும். இதை நினைப்பூட்டும் கவிகளே கவியோகிகள், அருட்கவிகள் ஆவர். ரவீந்திரநாத்தாகூரும் கம்பரும் இந்த இரண்டு தத்துவங்களையும் நன்றாக விளக்கிப் பாடியிருக்கிறார்கள். அவர்கள் பாடிய பாட்டெல்லாம், ஈசோபநிஷத்தின் முதல் இரண்டு வரியில் அடங்கும்.

'உலகெல்லாம் இறைவன் உறையுள். இந்த உலகில் எல்லாவற்றையும் அவன் மயமாக உணர்; எவன் பொருளையும் திருடாதே; நீ உழைத்துச் சம்பாதித்ததை ஈந்தே உண்ணு. தியாகபோகியாயிரு, கர்மத்தை விடாதே. ஈசுவரார்ப்பணமாக நல்ல கர்மாக்களைச் செய்து நூறுண்டு வாழ்ந்திரு' இதுதான் உபநிஷத்தின் சாரமாகும். வால்மீகிமுதல் தாகூர் வரையில், எந்தக் கவியைப் பார்த்தாலும் இக் கருத்துடன் பாடியிருக்கிறதைக் காணலாம்.

மோகினி அன்பர்கள் மிகவும் பாக்கியசாலிகள். அதனால்தான் அவர்களுக்கு மேலே உள்ளது போன்ற அருமையான உபதேச மணிகள் கிடைக்கின்றன. -ப-ர்.

ஸ்ரீமதி. எஸ். அம்புஜம்மாள்.

# விவாகச் சீர்திருத்தங்கள்

## 4. விசேஷ விவாகச் சட்டம்—ஒரு விமர்சனம்.

'இந்த விசேஷ விவாகச் சட்டம்' விதவா விவாகச் சட்டம்போல, அவ்வளவு தெளிவாக, அவ்வளவு பூர்ணமாக, அமையவில்லை என்றே சொல்ல வேணும். இந்தச் சட்டத்தில், பல சிக்கலான பிரச்னைகள் தீர்க்கப்படாமல் விடப்பட்டிருக்கின்றன. மதாபிமானிகள், வைதிக கோஷ்டியினருடைய கொள்கைகளைப் பாதிக்காதவிதத்தில், இந்தச் சட்டத்தை அமைக்க முயன்றதால், சட்டத்தின் முழு உருவமே-அதன் சிறந்த நோக்கமே- உருக்குலைந்து போய்விட்டது.

இந்தச் சட்டத்தை ஜனங்கள் சரியாகப் புரிந்து கொண்டதாகவும் தெரியவில்லை. படிக்காத பழைய காலத்து மனைவி எங்கோ ஓர் இடத்தில் உயிருடன் கிடக்க, "நாங்கள் ரிஜிஸ்தர் விவாகம் செய்துகொண்டு விட்டோம்" என்று கூறும் நவநாகரிக தம்பதிகளை நாம் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறோம். இந்தச் சட்டம் தெரிந்த சிலரே, "அவர்களுக்கு எப்படி ரிஜிஸ்தர் விவாகம் நடைபெற முடியும்?" என்று யோசிக்கக் கூடும்.

இந்த ரிஜிஸ்தர்-விவாக மூலம் உதித்த குழந்தைகள், எந்த மதத்தைச் சேர்ந்தவராக இருப்பார் என்பதும் இதனால் தெளிவுபடவில்லை. தாயாருடைய சமயமா? தகப்பனுடையதா?

சொத்துரிமை விஷயத்திலும் சிக்கலான பிரச்னைகளைக் கிளப்புகிறது இந்தச் சட்டம். "நான் இந்து இல்லை" என்று சொல்லிக்கொண்டு விவாகம் செய்து கொள்பவருக்குச் சொத்துரிமைக்கு மட்டும் இந்துலா பழைய சட்டப்படி நடக்கிறது. "நான் இந்து இல்லை" என்று சொல்லிக்கொள்வதினால் மட்டும் ஒருவன் இந்து அல்லாமல் போய்விடமாட்டான் என்று சட்டம் அதற்குச் சமாதானம் கூறுகிறது.

"நாங்கள் இந்துக்கள்" என்று சொல்லிக்கொண்டு விவாகம்செய்து கொள்பவர்கள் விஷயத்தில், 'இந்தியர் வாரிசு உரிமைச் சட்டம்' என்ற சட்டப்படி சொத்துரிமை ஏற்படுகிறது; பழைய இந்துலாப்படி கிடையாது. இந்தமாதிரி முரண்பாடான பிரச்னைகளைக் கிளப்பிவிடுகிறது இந்தச் சட்டம்.

இந்தச் சட்டம் வந்ததின் பிறகு, விவாகச் சடங்குகள் (இந்துக்கள் சம்பந்தப்பட்ட மட்டில்) இருவிதமாக ஆகிவிட்டன. ஒன்று வைதிகமுறை, மற்றது லௌகிகமுறை. இந்தப் பிரகாரம், மதக் கோட்பாடும், லௌகிகச் சட்டமும் தனித் தனியே ஒரு மனிதனின் வாழ்க்கையில் பிரவேசித்து ஆதிக்கம் செலுத்துவதினால், பல கெடுதல்களுக்கு இடம் தருவதாகிறது.

மதக் கோட்பாடு இடம் தராத விஷயத்தில் தன் விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்ள மனிதன் சட்ட உதவியை நாடுவதும், சட்டம் இடம் தராதபோது மதத்தின் உதவியை நாடுவதும் சகஜமாகிவிட்டன.

இதற்கு ஒரு சம்பவத்தை (சமீபம் நடந்தது) அத்தாக்ஷியாக எடுத்துக் கொள்ளலாம்.

ஏற்கெனவே விவாகமாகி ஒரு புத்திரனையும் உடைய ஒரு உயர் குடும்பத்துப் பெண், வேறொரு கணவனை அடையவிரும்பினுள், முதற் கணவன் இருக்கும்போதே. இதற்கு இந்துமதக் கோட்பாடு இடம் கொடுக்குமா? அவளை மணக்க விரும்பிய கணவரோ, ஒரு பெரிய தனிகர்; சிறந்த சமஸ்தான அதிபதிகளில் ஒருவர். ஏற்கெனவே, அவருக்கு ஒரு அரசியும் பல மக்களும் உண்டு. என்ன செய்வது? ரிஜிஸ்தர்-விவாகம் என்றால், சட்டம் அனுமதிக்குமா, இவர்களுடைய முதற் கணவனும் மனைவியும் உயிருடன் இருக்கும்போது?

மதமாற்றமே சரியான முறையாகத் தோன்றிற்று. உடனே பெண் இந்துமதத்தைத் துறந்தாள். மகமதிய மதத்தைத் தழுவினுள். மகமதிய ஸ்திரீயானதும் இந்துக் கணவனிடமிருந்து விவாக ரத்து செய்து கொள்ளும் உரிமை கிடைத்தது. பீபி ஆகிப் பழைய கணவனைத் தள்ளிவிட்டாள். ஆனால் அந்தப் புருஷனுக்கு ஒரு மனைவி இருக்கும்போது ரிஜிஸ்தர் விவாகமும் முடியாதல்லவா? அவனே மதம் மாறவிரும்பவில்லை. மதம் மாறினுல், அரசுரிமையே போய்விடும். பார்த்தாள் பெண். மறுபடியும் இந்துமதத்திற்கு வந்தாள், ஆரியசமாஜிகளின் கொள்கைப்படி. இப்பொழுது என்ன கஷ்டம்? பலதார விவாகத்தைத்தான் இந்துலா அனுமதிக்கிறதே! சரி: இந்துமதச் சடங்குப் பிரகாரம், அந்த மாஜி மனைவிக்கும், இந்த இந்து அதிபருக்கும் விவாகம் நடைபெற்றது. தள்ளிவிட்ட பழைய மனைவியும், புறக்கணிக்கப்பட்ட கணவனும் என்ன, செய்வார்கள்? திறு திறு என்று விழிப்பது தவிர வேறு என்ன செய்யமுடியும்! இவ்வித விவாகத்தைச் சட்டமும் அனுமதிக்கிறது; மதக்கோட்பாடும் சம்மதிக்கிறது. என்ன விந்தை, பாருங்கள்!

---

## தயாராகி வருகின்றன.

**உங்கள் பிரதிக்கு உடனே ஆர்டர் செய்யுங்கள்.**

1. **நந்தவனம். 3.** வருஷ ருதுமலர்

   வழக்கம்போல் பல அழகிய படங்களுடன் உயர்ந்த முறையில் சிறந்த பேப்பரில், முற்றிலும் புதிய எழுத்தாளிகள் திறம்பட அலங்கரிக்கிறுர்கள். விலை ரூ. 1—8—0 தான்.

2. **அமுதமொழி**—வை. மு. கோ. 65-வது நாவல்

   சுமார் 200 பக்கங்கள். 20 அழகிய படங்கள். 3. பதிப்புகள் கிளேஸ் ரூ 2—8, அன்பிளீச்ட் ரூ 2, (மஞ்சள்) பாதாமி ரூ 2.

3. **உதய சூரியன்**—வை. மு. ஸ்ரீ. முதல் நவீனம்

   கிளேஸ் பதிப்பு. 20 படங்களுக்கு மேல். ரூ. 1.

ரூபா 5. அனுப்புகிறவர்களுக்கு ஷெ 3 புத்தகங்களும் கிளேஸ் பதிப்பு ரிஜிஸ்டர் போஸ்டில் தபாற்செலவின்றி அனுப்பப்படும்.

ஸ்ரீமதி. எஸ். என். ராஜலக்ஷ்மி

# வாழ்க்கையில் ஒரு நாள்

நீலகண்டன் ஆபீசிலிருந்து வீட்டிற்குள் வந்து புகுந்தபோது நறுமணம் மிகுந்த ஊதுவத்தியின் மணம் அவன் முகத்தைத் தழுவி மோந்தது. அவனுக்கு அதிககோபம். சைகிலை ஒருபுறம் விசிறி எறிந்துவிட்டு கோட்டைக்கூட கழட்டாமல் "ஏய் ராஜம்! இதென்ன ஊதுவத்தியும் சந்தனமும் வாசனை ஊரைத் தூக்குகிறது! இதென்ன தேவடியாள் வீடா! குடும்பஸ்தன் வீடா" என்று ஒரே இறைச்சல் போட்டான். சமையலறையிலிருந்த ராஜம் வெளியே வரவேயில்லை. நீலகண்டனின் நெற்றிக்கண் திறந்துவிட்டதென்று தெரிந்துகொண்டபின் எதிரே வர தைரியமில்லை.

அவன் மறுபடி "ஏய்! உன்னைத்தானே! ஸ்ரீமதி ராஜம்! வெளியே வாருங்கள்! இதெல்லாம் என்ன நானில்லாத சமயத்தில் கொண்டாட்டம்! என்ன பதிலைக்காணோம்" என்று உறுமினான்.

இந்த டிகிரிக்குமேல் போய்விட்டால் பிறகு ஜன்னி பிறந்துவிடும் என்று ராஜம் மெதுவாய் தலையை நீட்டி "உங்கள் தம்பி ஊரிலிருந்து வந்திருக்கிறார். என்னமோ வாசனைத் திரவியங்களாம். உங்களுக்கு ரொம்ப பிடிக்குமேயென்று கொண்டு வந்ததாகச் சொன்னார்.

"எங்கே அந்த அதிகப் பிரசங்கி'!

"ஐயோ பாவம்! அவர் என்ன தப்பு செய்தார்? உங்களுக்குப் பிடித்ததைதானே கொண்டுவந்தார்! மாதிரிக்கு ஒரு வத்தியைக் கொளுத்தி வைத்து "மன்னி! எப்படியிருக்கிறது பார்த்துச் சொல்" என்று சொல்லிவிட்டுவெளியில்யாரையோ பார்த்துவிட்டு வருவதாகப் போனார்.

"ஓஹோ! நீ மஹா கெட்டிக்காரியோ. உனக்குத் தான் வாங்கி வந்தானே? மச்சினனுக்குப் பரிந்து கொண்டு பேசவந்துவிட்டாய்! போ! என் முன்னே நிற்காதே" என்று சொல்லம்புகளை அள்ளி வீசினான்.

அவன் கோபம் உச்சநிலையை அடைந்துவிட்டது. கோட்டை கழட்டிப் போட்டுவிட்டு மேலே சென்று மொட்டை மாடியில் போடப்பட்டிருந்த ஈஸிசேரில் விழுந்தான். ராஜத்தின் வாழ்க்கைக் கடலில் இதுமாதிரி அடிக்கடி சிறு புயல்கள் எழும்புவதுண்டு. அலை மோதும். புசலடிக்கும். பின் அமைதியடையும். ஆனால் இன்றுபோல தன்கணவன், சம்பந்தமில்லாத அபத்தமான வார்த்தைகளைக் கொட்டியதில்லை. எல்லாவற்றையும்விட "தேவடியாள் வீடா" என்று தன் கணவன் கேட்டது அவள் உள்ளத்தை ஈட்டிபோல் துளைத்தது. தன் சிறு மைத்துனனை சிறுபிள்ளைப் பருவத்திலிருந்து தாய்போல வளர்த்து வந்தாள். தாயற்ற அவன் தன்னைத் தாயாகவும் நீலகண்டனை தந்தையாகவும் நினைத்து வளர்ந்ததுமுற்றும் அவன் அறியாததன்று. ஆனால் கோபத்தின் வேகம் எல்லை கடந்து சென்றது.

கணவனின் சுபாவம் முற்றும் அறிந்திருந்தாலும் பெண்ணின் அணிகலனாகிய "கற்பு"க்குப் பங்கமான பேச்சை கேட்பதெனில் அவள் உள்ளம் கொதிப்படைந்தது. "நான் என்ன பிழை செய்தேன்? மச்சினனுக்குப் பரிந்து வந்தது பிசகாகுமா? என் குழந்தைபோல வளர்த்த அவனைப்பற்றி அவச்

சொல் சொல்லும்போது நான் எப்படி சகித்துக்கொண் டிருப்பது? கடவுளே! இவருடைய சந்தேகமும் முன்கோபமும் என்றுதான் தணியுமோ"? என்று குமுறிக்கொண்டு கிடந்தாள்.

அன்று ஆபீசில் மானேஜர் நீலகண்டன்மீது கோபித்து கணக்கு புஸ்தகத்தை விட்டெறிந்தார். அந்த கோபத்தையெல்லாம் யார்மீது காட்டுவது! எப்படிக் காட்டுவது! நீலகண்டன் வீடுவந்து சேரும் சமயம் ஊதுவத்தி தூபமும் அவன் கோபத்திற்குதீ தூபம் போட்டுவிட்டது. இன்னதுதான் பேசுகிறோம் என்பதில்லாமல் அவள்மீது வாரிக்கொட்டினான்.

நெடுநேரம் மாடியிலே கிடந்த பின்பு, சந்திரனின் சீதளத்தாலும் தென்றலின் குளிர்ந்த ஸ்பரிசத்தாலும் அவன் மன மயக்கம் தெளிய ஆரம்பித்தது.

"ஆமாம்! ராஜத்தின்மீது என்ன தப்பு! ஆனால்? அவள் ஏன் பதில் சொன்னாள்! என் தம்பிக்கு இவள் என்ன பரிந்து பேசுகிறது!" "சீ! பேதை மனமே! பாலுவைவிட்டு அம்மா இறந்துபோன பிறகு ராஜத்தாலும் உன்னாலும் வளர்ந்த பையனையே நீ சந்தேஹிக்கிறாயே!" என்று அவன் நெஞ்சம் இடித்துரைத்தது.

வாஸ்தவத்தில் நீலகண்டனுக்கு ஊதுவத்தி அத்தர் முதலிய வாசனைத் திரவியங்கள் என்றால் ரொம்பவும் இஷ்டம். அதை அறிந்துதான் பாலு வாங்கிவந்திருக்கிறான்." ஆனால் நமக்கேனிப்படி கோபமும் சந்தேகப் பிசாசும்கூடி நாட்டியமாடியது! சீ! இனிமேல் இப்படி ஒருக்காலும் கோபிக்கக்கூடாது. பாவம்! அவளை கண்டபடி பேசிவிட்டோமே! அவள் உள்ளம் எப்படித்துடிக்கும்! என்னை யன்றி அவளை அணைக்கவும், அடிக்கவும் யார் இருக்கிறார்கள்!

ஆனால், ஏன்? அவளாகத்தான் வந்து பேசட்டுமே" என்று மறுபடி ஆண்மைத்தனம் குறுக்கிட்டது. நெஞ்சம் நெடுநேரம் அலைமோதிக் கொண்டிருந்தது. முடிவில் மனம் குழைந்து கொடுத்தது. கீழேபோய் பார்ப்போம் என்று இறங்கி வந்தான்.

ராஜத்தின் அந்தப்புரமாகிய சமயலறை ஒரே இருட்டாக இருந்தது. நிமிஷத்திற்கு ஒருமுறை விம்மலின் சத்தம் கேட்டது. அவன் மனம் தாளவில்லை. பாய்ந்தோடி விளக்கின் ஸ்விட்சைப் போட்டான். ஒரு மூலையில் சுருண்டு கிடந்தாள் அவன் வாழ்க்கைத் துணைவி.

"ராஜம்! அழாதே! உன்னை ரொம்ப கோபித்துவிட்டேன். என்னை மன்னித்துவிடு" என்று அவளைத் தூக்கினான்.

"ஸ்வாமி!" என்று கதறி அவன் நெஞ்சில் சாய்ந்தாள்.

"ராஜம்! கோபமா! கோபத்தில் ஏதோ உளறிவிட்டேன். எழுந்திரு! பாலு எப்போ வந்தான் சாப்பிட்டானா! என்ன சமாசாரம்!"

"எனக்கென்ன கோபம்! நான்தான் உங்கள் கோபத்தணலை அதிகப்படுத்தி விட்டேன். நான் பதில் பேசி இருக்காவிட்டால், உங்கள் கோபம் அதிகப்பட்டிருக்காதல்லவா? என்மீதுதான் பிசகு! நீங்கள்தான் என்னை மன்னிக்கணும்.

இதற்குள் வாசற் கதவு தட்டப்பட்டது. புருஷனும், மனைவியும் பிரிந்தனர். நீலகண்டன் போய் வாசற் கதவைத் திறந்தான்.

"பாலு! எப்போ வந்தாய்! வருவதாய் ஏன் லெட்டர் போடவில்லை!"

"அண்ணா! நம்ம வீட்டிற்கு வருவதற்கு லெட்டர் ஏதுக்கு! திடீரென

என்னை வடக்கே மாற்றிவிட்டதால் மன்னியையும் உன்னையும் பார்த்து விட்டுப் போகவந்தேன். வீட்டில் நீ இல்லாவிட்டால் என் தாய்போன்ற மன்னி என்னை உபசரிக்கமாட்டாளா! இந்த வத்தியின் வாசனையைப் பாத்தாயா! உனக்கு ரொம்ப பிடிக்குமேயென்று, ஸ்பெஷலாய் வாங்கி வந்தேன்'' என்றான் பாலு. நீலகண்டன் முகத்தில் அசட்டுப் புன்னகை வழிந்தது.



★

**இந்த மாதம்**

என்ற தலைப்பில் சென்ற இதழில் படங்கள் வெளியிட இடமில்லாது போய்விட்டது. ஆவணி அவிட்டம், ஸ்ரீஜெயந்தி, விநாயக சதுர்த்தி முதலிய விசேஷங்களைச் சித்திரிக்கும் ஷ படங்களை இப்போது வெளியிட்டிருக்கிறோம். இம்மாதத்திய விசேஷங்களைக் குறித்த படங்களை வேறொரு பக்கத்தில் காண்க.

★





# ஸ்ரீ பாடலாத்ரி நரஸிம்ஹர் அஷ்டச்லோகி

7. சிந்தயே ஸததம் ஸுதாம்புதி மத்யகம் கமலாயுதம்
ஸத்யதீ ஸுக நுபமத்புத ஹஸ்திசைல குஹாச்ரிதம்
கோமளாவய வோஜ்வலம் கருணாகரம் ஸுரஸேவிதம்
வீரமுக்ர ந்ருஸிஹ்ம முத்த்ருத பக்த தோஷமஜேடிதம்

ஸுதாம்புதி மத்யகம்—க்ஷீரஸமுத்ரத்தின் நடுவிலிருப்பவரும்... கமலாயுதம்—ஸ்ரீ மஹாலக்ஷ்மியுடன் கூடியவரும்...ஸத்யதீ ஸுகரூபம்—ஸத்யஜ் ஞானனந்த ரூபனையும்...அத்புத ஹஸ்தி சைல குஹாச்ரிதம்—ஆச்சரியமான ஹஸ்திகிரியின் குகையிலிருப்பவரும்...கோமளாவய வொஜ்வலம்—அழகிய அங்கங்களால் பிரகாசிப்பவரும்...கருணாகரம்—தயாநிதியாயும்...ஸுரஸேவிதம்—தேவர்களால் வணங்கப்பட்டவரும்... வீரம்—வீரனையும்...உத்த்ருத பக்த தோஷம்—எடுக்கப்பட்ட தன் பக்தர்களின் தோஷத்தை உடையவரும்...அஜேடிதம்—பிரமனால் துதிக்கப்பட்டவருமான...உக்ரப்ருஸிஹ்மம்—உக்ரந்ருஸிஹ்மனை...ஸததம் சிந்தயே—எப்பொழுதும் தியானிக்கிறேன்.

திருபபாற்கடலில் ஸ்ரீ மகாலக்ஷ்மியுடன் விளங்குகிறவரும் வேதங்களில் ஸத்யம் ஞானம் என்றெல்லாம் சொல்லப்படுகிறவரும் கருணாநிதியாகையால் பக்தர்களின் குற்றத்தை நீக்குகிறவரும் தேவாதிகளால் துதிக்கப்படுகிறவருமான தேவரை எப்பொழுதும் தியானிக்கிறேன்,

8. சிந்தயே ஹமஹர்நிசம் ச்ருதி வேத்ய நுபமஹோபில
க்ஷேத்ர ஸம்ஸ்தித லாலஸம் ச்ரித காமதம் ஜகதாக்ருதிம்
மாதவம் மதுசூதநம் முரபஞ்ஜகம் ஸுகதம் ந்ருணும்
பாடலாத்ரி ந்ருஸிஹ்ம முத்தம மம்புஜே க்ஷணமீச்வரம்

ச்ருதிவேத்ய ரூபம்—வேதங்களால் அறியக்கூடிய ஸ்வரூபத்தையுடையவரும்...அஹோபில க்ஷேத்ரஸம்ஸ்தித லாலஸம்—அகோபிலமென்கிற க்ஷேத்திரத்தில் வசிப்பதில் விருப்பமுடையவரும்...ச்ரிதகாமதம்—தன்னை அடைந்தவர்கட்கு விரும்பியதைக் கொடுப்பவரும்...ஜகதாக்ருதிம் உலகத்தையே உருவமாகக் கொண்டவரும்..மாதவம்—ஸ்ரீயஃபதியாயும்... மதுஸூதனம்—மது என்கிற அசுரனைக் கொன்றவரும்...முரபஞ்ஜகம்—முரனென்பவனை நாசம் செய்தவரும்...ந்ருணும் ஸுகதம்—மனிதர்கட்கு ஸுகத்தைக் கொடுப்பவரும்...உத்தமம்—புருஷோத்தமனையும்...அம்புஜேக்ஷணம்—செந்தாமரைக் கண்ணனையும்...ஈச்வரம்—ஸர்வலோகேசுவரனுமான...பாடலாத்ரி ந்ருஸிஹ்மம்—ஸ்ரீ பாடலகிரியிலிருக்கும் ஸ்ரீ நரஸிம்மனை...அஹம்—நான்...அஹர்நிசம்—இரவும் பகலும்...சிந்தயே—தியானிக்கிறேன்.

தேவர் ஸ்வரூபத்தை வேதங்களைக் கொண்டுதான் அறியவேணும் ஆச்ரிதர்க்ட்காக தேவர் ஸ்ரீ அகோபிலத்திலும் ஸ்ரீபாடலாத்ரியிலும் ஸேவை ஸாதிக்கிறீர். ஆச்ரித விரோதிகளைப் போக்குவது தேவர் ஸ்வபாவம். ஸ்ரீ மகாலக்ஷ்மியுடன் புண்டரீகாக்ஷனாய் விளங்கும் தேவரை எப்பொழுதும் தியானிக்கிறேன்.

யஃபடேத் ப்ராதருத்தாய ந்ருஸிஹ்மாஷ்டகமுத்தமம்
ஸர்வ பந்த விநிர்முக்தஃ ஸித்தோ பவதி தத்க்ஷணத்

யஃ—எவன்...ப்ராதஃ உத்தாய—காலையில் எழுந்திருந்து...உத்தமம் சிறந்தான...ந்ருஸிஹ்மாஷ்டகம்—(இந்த) ந்ருஸிம்மனைப்பற்றிய எட்டு சுலோகத்தை.....படேத்—படிக்கிறானே...(அனுஸந்திக்கிறானே).....(ஸஃ) தத்க்ஷணத்—(அவன்) அந்த தருணத்திலேயே...ஸர்வ பந்த விநிர்முக்தஃ—எல்லாக் கட்டுகளிலிருந்தும் விடுபட்டவனாய் ஸித்தோ பவதி—ஸித்தனாக (சகல பல ஸித்தியுடையவனாக) ஆகிறான்.

---

ஸ்ரீமதி "தகப்ரியை"

# காக்கைபாடினியார்

கவிஞர் கற்பனை உலகிலேயே சஞ்சரிப்பவர்கள். காணாததை யெல்லாம் கண்டதாகக் கதைப்பர் என்று சிலர் சொல்வதுண்டு. ஆனால் கவிஞர்களுக்கு ஏன் பெருமை கொடுக்கிறோம். பாடிப் பாடிப் பார்க்கவேணும் என்று கவிதையின்பத்திலே ஈடுபட்டு மெய் மறந்துபோவது எதனால்? உள்ளவை களையே கவிதையின் மூலமாகக் கேட்கும்பொழுது, கவிஞனது திற மையினால் புகைபடிந்த ஓவியத்தைத் துடைத்துக் காட்டுவதுபோலவும், தொலைவில் இருப்பவைகளைச் சமீ பத்தில் கொணர்ந்து காட்டுவது போலவும், உண்மைகள் பின்னும் அழகும் வசீகரமும் பெற்று நம் முன்னே தோன்றுகின்றன.

பாரதியார் புதுவையிலிருந்த காலத்திலே ஒரு பாகவதர் வந்து ஹரிகதா காலக்ஷேபம் செய்தார். கூட்டமோ ஏராளம், பாகவதர் வெகு அற்புதமாய் ஒவ்வொரு கதா பாத்திரங்களின் பகுதியை நடித்து, வந்தவர்களை வியக்கச் செய்து கொண்டிருந்தார். "கதை அற்புதம்! அற்புதம்!" என்று புகழ்ந்தார்கள். கடைசியில் பாரதியாரைப் பாகவத ருக்கு அறிமுகம் செய்து வைத்தார் கள். பாகவதர் பாரதியாரிடமிருந்து மதிப்புரை எதிர்பார்த்து நின்றார். பாரதி "நீங்கள் பெண்களின் குணத்தையும் நடிப்பையும் அதி அற்புதமாய் நடித்தீர்கள். ஆனால் வீரத்தைக் காண்பிக்கும் கட்டங் களிலே மிக மிகத் தாழ்வாக நடித்து விட்டீர்கள்" என்றார். எல்லோரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்கத் தொடங்கினர்கள். சிலரது முகத்தில் ஏமாற்றம். சிலரது முகத்தில் வியப்பு. பாகவதர் மிகுந்த வணக் கத்தோடு "இத்தகைய உண்மை யான மதிப்புரையே நான் வேண்டி யது. நீங்கள் சொல்வது உண்மை தான், என் வாழ்நாளில் ஒரு வீரனை நான் கண்டதே இல்லை. ஆகவே வீரரஸம் என்பதை என்னால் நடிக் கக்கூடவில்லை" என்றார்.

அதுபோல வீரமிகுந்த கவிதை களை ஒரு சிறந்த வீரன்தான் பாட முடியும். கவிஞன் நவரஸங்களையும் கவிஞன்தான் அனுபவித்தே பாட முடியுமேயன்றி, அனுபவித்தே உண ராத பாடல்கள் வெறும் சொல் லடுக்குகளாகவும் சாரமற்ற சக்கை யாகவே இருக்கும் என்பதில் சந் தேகமென்ன?

சங்ககாலப் பெண்களிலே பலர் சிறந்த 'வீரை'களாக இருந்திருக் கிறார்கள் என்பதற்கு புறநானூறிலே

பல பாடல்கள் காணப்படுகின்றன. இவைகளுள் காக்கைபாடினியார் நச்சேள்ளையார் என்பவரது பாடலும் ஒன்று. இது பலராலும் பல முறையில் எடுத்தாளப்பட்ட சுவை மலிந்த பாடல்.

ஒரு மறக்குடிப்பெண்ணின் வீரச் செயலை விவரிக்க வேணுமென்றால், இவளும் ஒரு மறக்குல வீரப்பெண்ணாகத்தான் இருக்கவேணு மென்பதைச் சொல்லவா வேணும்? கற்றாரைக் கற்றாரே காமுறுவர். வீரையை வீரை உகப்பாள். இது அனுபவ உண்மை.

பொதுவாக, இளமையின் மிடுக்கும், உடல் வலியும் உற்சாகமும் உள்ளபொழுதே வீரம் தோன்றும். சிறந்த மகா வீரர்கள்கூட முதுமையில் மன வலிமையும், உடல் வலிமையும் குன்றும்பொழுது வீரம் குறைந்து போகிறார்கள் என்றும் சிலர் வாதிப்பதுண்டு. ஆனால் அதிலும் ஓரளவு உண்மையுண்டென்று சொல்லலாமே தவிர முற்றிலும் உண்மை என்று சொல்வதற்கில்லை. இதற்கு உதாரணம் கொடுப்பதே போன்ற ஒரு காட்சியை விவரிக்கிறார் காக்கைபாடினியார். வயது முதிர்ந்து கூனிக் குறுகி, எலும்பும் தோலுமாய் நிற்கும் ஒருபெண்மணியின் நெஞ்சிலே பீறிட்டு எழுந்த வீரத்தைப் பார்த்த உடன் கவிதா சன்னதம், கவிதைவெறி வந்துவிடுகிறது அவருக்கு. "ஆ! ஆ! இவள் வீரம்தான் என்ன?" என்று திகைக்கிறார். அந்த வேகத்திலே தோன்றிய மின்னலே, இக்கவி.

நரம்பெழுந்துலறிய நிரம்பாமென்தோள்
முளரி மருங்கின் முதியோள் சிறுவன்
படையழிந்து மாறினன்என்று பலர்கூற
பண்டமர்க் குடைந்தனனாயினுண்டா
வென் 'முலையறுத்திடுவென்'யான் எனச்
சினைஇக் கொண்டவாளொடு,படுபிணம்,
பெயராச் செங்களந் துழவுவோள்
சிதைந்து வேறாகிய
படுமகன் கிடக்கைகாணூஉ
ஈன்ற ஞான்றினும் பெரியதுவந்தனளே
திணை தும்பை, துறை உவகைக்கலுழ்ச்சி

அப்பப்பா! நினைத்தாலே குலை நடுங்கும். மிக மிகப் பயங்கரமான போர்க்களம். எதிர்க்க வருபவர்களெல்லாம் வாருங்கள் என்று அறைகூவி அழைப்பதுபோல் முழங்குகின்றன ரணபேரிகைகள். சங்குகளும் எக்காளங்களும் இடி இடிப்பதுபோல் குமுறுகின்றன. இவைகளின் பேராரவாரம் வான வீதி முழுவதுமே எதிரொலிக்கின்றது. தேர்களும், குதிரைகளும், பெரிய பெரிய யானைகளும், ஆண் சிங்கங்கள் போன்ற காலாட்படைகளும் அணி வகுத்துப் போரிடுகின்றன. அலைமேல் அலையாகப் பொங்கிப் பொங்கி எழுகின்றன இருதிறத்துச் சேனை சமுத்திரங்களும். என்ன பயங்கரம்! என்ன கொடுமை! என்று சிந்திக்கிறாள் கவியரசி.

அவள் மனக் கண்களின் முன் இன்னொரு காட்சி மெல்ல மெல்லத் தோன்றுகிறது. ஒரு சின்னஞ் சிறு குடில், அதன் அருகே தவஞ்செய்வதற்குரிய அக்னி. வயது முதிர்ந்த கிழவி அதன் ஊடே நின்று தவம் செய்கிறாள். இடையிலே, வேறு சிலர் வருகிறார்கள். வருகிறவர்கள் சும்மாயிருப்பார்களா? ஏதோ ஒரு பொருளைப்பற்றிப் பேசவேண்டுமே வேறு எதையேனும் சொல்லக் கூடாதா? அதுதான் வழக்கமில்லை, ஒன்றைப் பத்தாக விவரித்து முடிவது இப்பொழுது நமக்குமட்டுமே உரிய குணம் என்று நினைக்கவேண்டாம். அப்பொழுதும் நம் சகோதரிகளிற்சிலர் இருந்திருக்கிறார்போலும்! அவள் சொல்வது எதுவரையில் உண்மையோ? அவள் சொல்லச் சொல்லக் கிழவியின் முகம் சிவப்பானேன்? புருவத்தை நெறிக்கிறாள். தவச்சாலையினின்றும் வெளியே

வருகிறள். "தவமும் ஆயிற்று! எல்லாம் ஆயிற்று! என்மகன் போரிலே புறங்காட்டி ஓடிவிட்டான் என்றல்! ....அதைவிடத் தாழ்வு இனி என்ன இருக்கிறது. தமிழ் நாட்டு மறக்குலத்திற்கே திராப்பழி அல்லவா? மானம் அழிந்தபின் வாழ்வு எதற்கு? சுத்த வீரன் முன்வைத்த காலைப் பின்வைப்பதும் உண்டோ? இதோ போகிறேன் போர்க்களத்திற்கு. என் மகன் புறங்காட்டி முதுகிற் காயத்துடன் மடிந்திருந்தால், அவனுக்குப் பாலூட்டிய இந்த முலைகளை அந்தப் போர்க்களத்திலே அறுத்தெறிந்து உயிர்விடுகிறேன். அடாடா! எங்கள் குலத்திற்கே திராப்பழி வந்துவிட்டதே!" என்ற சொற்கள் ஆவேசத்துடன் அவள் வாயினின்றும் எழுகின்றன. தள்ளாடி மெல்ல மெல்ல எழுந்துநின்ற அந்தக் கிழவியின் நடை, நடக்கிற படி நடுங்கும்படி இருக்கிறதாம். "அடாடா! வெற்றி பெற்ற வீரன் மிடுக்குடன் நடந்து செல்வதுபோலல்லவா நடக்கிறள்! அந்த நடையின் கம்பீரம்தான் என்ன" என்று ஆச்சர்யக் கடலுள் மூழ்குகிறர் கவியரசி.

* * * *

சூரியன் மலைவாயில் விழும் தருணம். போர்க்களத்தையே பிரதிபலித்ததுபோன்ற செக்கர் வானம். அன்றைய போர் முடிந்ததற்கறிகுறியாகத் தாளங்களின் முழக்கம். எங்கு பார்த்தாலும் ஒரே பிணக் குவியல். இரத்த வெள்ளம். கழுகுகளும், காக்கைகளும், பருந்துகளும், இராஜாளிகளும் பந்தலிட்டதுபோல் வட்டமிடுகின்றன. கையிலே வாளேந்திய அந்தக்கிழவி ஒவ்வொரு சவமாய்ப் புரட்டிப் பார்க்கிறள். என்ன தைரியம் என்ன துணிச்சல்! போர்க்களத்தின் நடுவில்! அப்பிணங்களைத் தின்ன வந்த பேயோ? என்று கூடச் சந்தேகிக்கும்படி எலும்பும் தோலுமாய்த் தளர்ந்து கூனிய உடல். இந்தக் கோலத்திலே பிணங்களைப் புரட்டித் தள்ளித் தேடுகிறளே! அந்த வலிமை எங்கிருந்துதான் வந்ததோ!......என்ன ஆச்சரியம்! அவள் அலுக்கவில்லை. சலிக்கவுமில்லை. மெல்ல மெல்ல இருளும் சூழ்கின்றது. இன்னும் தேடிக்கொண்டேதானிருக்கிறள். அடாடா! அதோ ஒரு தலை உடலினின்றும் வேருகக் கிடக்கின்றதே! ...அதைப் பார்த்த உடன் இவள் முகம் மலர்கிறது. "அப்பா! என் கண்மணி! உன்னைப்பெற்ற பொழுதைவிட இப்பொழுதே நான் ஆனந்தமடைகிறேன்" என்றல்லவோ சொல்லுகிறது அந்த முகம்! என்று நம்மோடு தானும் ஆச்சர்யப்படுகிறர் காக்கைபாடினியார். இவர் கவிமட்டுமல்ல. வீரப்பெண்மணி என்பதற்கு இதைக் காட்டிலும் உதாரணம் வேண்டுமா?

---

உங்களது சந்தா நம்பர்

ஒவ்வொரு மாதமும் சஞ்சிகையனுப்பும்போது ராப்பரில் குறிக்கப்பட்டுள்ளது. நீங்கள் கடிதம் எழுதும்போதும் பணமனுப்பும்போதும் அவசியம் எழுதவும்.

விலாசம் மாறுவோர்

மாத முடிவிற்குள் தெரிவிக்காமல், சஞ்சிகை பழய விலாசத்துக்கு அனுப்பித் தவறிவிடின் அதற்கு நாம் ஜவாப்தாரியல்ல.

ஸ்ரீமதி. கீ. ல. பட்டம்மாள்

# சங்கிதக் கச்சேரியா—சந்தைக் கூட்டமா?

ஸரஸா:—அக்கா! என்ன இன்னும் கிளம்பாமல் இருக்கிறாய். மணி நாலு ஆய்விட்டதே?

மீனாக்ஷி:—ஸரஸா! நான்தான் போனவாரமே இனி வரப்போவதில்லை என்று சொல்லி விட்டேனே மறந்து விட்டாயா?

ஸ:—ஏன் வரமாட்டாய்? கச்சேரி என்றால் உனக்கு உயிர் ஆயிற்றே! எதனால் வர மறுக்கிறாய் இன்று வீட்டில் வேலை அதிகமா?

மீ:—இல்லை இல்லை. சங்கிதத்தை கேட்கப்போய் சண்டையும் சச்சரவும் அல்லவோ ஏற்படுகிறது. போனவாரம் பட்ட அவமானத்தால் இந்த வாரம் போகாமல் இருப்பதே நல்லது என்றுதான் நின்றுவிட்டேன்.

ஸ:-என்னக்கா அது! போன வாரம் என்ன நடந்தது? அதை ஏன் என்னிடம் சொல்லவில்லை?

மீ:—ஸரஸா! சங்கீதம் என்றாலே எனக்கு ரொம்ப பித்து. ஆனால் சிறுவயதில் இப்பொழுது ஆனந்திக்கும் சக்தியைக் கடவுள் எனக்குக் கொடுக்கவில்லை. நம் பெரியோர்கள் கேட்ட சங்கீதத்திற்கும் நாம் கேட்கும் சங்கீதத்திற்கும் எவ்வளவோ வித்தியாசம் இருக்கிறது. தவிர, நம் பெரியோர்கள் இந்த சங்கீதத்தைகேட்க எவ்வளவு கஷ்டப் பட்டார்கள் தெரியுமா?

பெருமாள் வரம் கொடுத்தாலும் பூசாரி வரம் கொடுக்கமாட்டான் என்று சொல்லுவது போல் வீட்டில் பெரியவர்கள் உத்திரவு கொடுத்தாலும் அக்கம் பக்கம் இருப்பவர்கள் வம்பளப்பதைக் காதுகொடுத்து கேட்க முடியாது. அப்படிப்பட்ட பெண்மணிகள்தான் இப்போது சங்கீத கச்சேரியில் முதல் சீட்டு பெறுகிறார்கள்.

அவர்கள் அந்த சங்கீதத்தை ஆனந்தத்தோடு கேட்கிறார்களா? அதுவும் இல்லை; கேட்பவர்களையும் கேட்க விடாமல் தங்கள் வீட்டு சமாசாரத்தை அங்கு பிரஸங்கம் செய்ய ஆரம்பித்துவிடுகிறார்கள். போனவாரம் நடந்த கச்சேரியில் பாடகர் வெகு அருமையாக பாடிக்கொண்டிருந்ததைக் கேட்க விடாமல் என் பக்கத்திலும் எதிரிலும் நடப்பதைக் கண்டு 'நாம் சங்கீதம் கேட்க வந்தோமா? அல்லது சினிமா காட்சியா இது!' என்று எனக்கே சந்தேகம் தோன்றிவிட்டது.

ஸ:-அப்படி என்ன நடந்தது?

மீ:—பாடகர் வெகு அருமையாக பந்துவராளி ராகத்தை பாடினதைக் கேட்க விடாமல் என் பக்கத்திலிருந்த இரு பெண்மணிகள் அந்த ராகத்தின் பெயரை சரியாகச் சொல்லாமல், ஒருத்தி பூரிகல்யாணி என்றும், மற்றொருத்தி "இல்லை; இல்லை: இது கட்டாயம் வராளி தான் பாரேன்" என்றும் போட்டியிட ஆரம்பித்துவிட்டார்கள். எனக்

கோ கோபம் கோபமாக வந்தது. நானும் வெகுநேரம் பொறுத்துப் பார்த்தேன். அவர்கள் போட்டிக்கு முடிவே ஏற்படாது போல் தோன்றியது. அதற்கு மேல் நானும் பொறுமையை இழந்து "அம்மா! ஏன் நீங்கள் வீண் வாதம் செய்கிறீர்கள்? உங்கள் இருவருடைய அபிப்பிராய ராகங்களும் அல்ல; அது பந்துவராளி என்று நான் சொல்லி முடிப்பதற்குள். நின்னு நேர நம்மினுனுரா என்னும் பாட்டை ஆரம்பித்துவிட்டார். அவர் அதை ஆரம்பித்ததும் அந்த இரு பெண்மணிகளும் தாங்கள் தப்பிதமாக ராகத்தை நினைத்ததுடன் நில்லாமல், பாடகர் ராகத்தை சுத்தமாகப் பாடவில்லை என்றும் குறைகூற ஆரம்பித்துவிட்டார்கள்: இது ஒரு காட்சி.

மற்றொன்று "அப்பப்பா! எத்தனை நாழி இப்படியே தானும் தந்தானும் என்று பாடிக் கொண்டுஇருப்பான்? நல்லதாக 2 பாட்டு பாட மாட்டானோ?" என்று சிலர் ஆரம்பித்தார்கள்.

இது தவிர, என் எதிரில் சில சிறுமிகள், நான் சின்ன வயதில் செய்த விஷமங்களைச் செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். அதில் ஒரு பெரிய அம்மாவும் கலந்து கொண்டு பாடகருக்கு அழகு காட்ட ஆரம்பித்துவிட்டாள். அதையெல்லாம் பார்க்கும்போது எனக்கு ஒரு பக்கம் சிரிப்பும் ஒருபக்கம் எரிச்சலும் வந்தது. அன்றைய தினம் கச்சேரியோ வெகு நன்றாக அமைந்திருந்தது. அதை சிறிதும் கேட்கவிடாமல் செய்வதைக்கண்டு நான் அந்த பெரியம்மாவைப் பார்த்து "அம்மா! இது சங்கீதக்கச்சேரி என்பதை மறந்துவிட்டீர்களா? உங்களுக்குப் பிடிக்காவிட்டால் கேட்பவர்களையும் கேட்கவிடாமல் ஏன் இவ்வித தொந்தரவு செய்கிறீர்கள்? உங்களுக்குப் பேசவேண்டுமானல் சற்று வெளியில் போய் பேசுகிறது தானே" என்று சொல்லி விட்டேன். அவ்வளவுதான் வந்துவிட்டது அந்த அம்மாளுக்குக் கோபம். "ஆமாம்டி அம்மா! ஆமாம். உன்னைப்போல் எனக்கு சங்கீத ஞானம் இல்லாவிட்டாலும் அதைக் கேட்கவேண்டும் என்ற ஆசை உண்டு; அதனல் தான் வந்திருக்கிறேன். உனக்கு இங்கு கேட்கப் பிடிக்காவிட்டால் தனியாக உங்க வீட்டில் கச்சேரி வைத்துக்கொள்ளுகிறது தானே! உன்னுட்டம் நானும் பணம் கொடுத்துதான் வந்திருக்கிறேன். என்னை நீ அதிகாரம் செய்யவேண்டாம்" என்று இன்னும் ஏதேதோ தனக்குத் தோன்றியபடி பிதற்ற ஆரம்பித்துவிட்டாள். அவளுக்குஎவ்வளவு சமாதானம் சென்னுலும் அவள் அடங்கும் வழியே காணவில்லை.

குழந்தைகள் அழுதாலே புருஷர்கள் 'அஸ் புஸ்' என்று சொல்ல ஆரம்பித்துவிடுவார்கள். பெரிய அம்மாளின் பிரஸங்கத்தைக் கேட்டு அவர்கள் சும்மா இருப்பார்களா? ஒரே கலாட்டாவாக ஆய்விடும் போல் இருந்தது.

ஸ்ரீமதி. ஜயலக்ஷ்மி R. ஸ்ரீநிவாஸன்

# சிக்கனம்

"சிறுகக் கட்டி பெருக வாழ்" என்னும் பழமொழியின் பொருள் தான் சிக்கனம். ஆண் பெண் அடங்கலும் அனைவரும் சிக்கன வாழ்வு வாழ்வதே முறை. அதிலும் குடித்தனப் பெண்களுக்கு இந்த குணம் மிக அவசியம்-

நம்முடைய தினப்படி வாழ்க்கையில் சிக்கனமாகவிருந்துகொண்டு நமது எதிர்கால வாழ்வை உத்தேசித்து க்ஷேமநிதியாக சிறுகச் சிறுக சேர்த்து வருவதுதான் "சிக்கனம்" எனப்படும். ஆனால் சிக்கனம் என்பதை பலர் சுக்காஞ்செட்டித்தனம் என்று எண்ணுகிறார்கள், இது தவறு. சிக்கனம் என்றால் அனாவசியமான டாம்பீக வாழ்க்கை வாழாமல் ஒவ்வொருவரும் தம் வாழ்க்கைக்கு அவசியம் தேவையானதை மட்டும் அனுபவிப்பதுதான் 'சிக்கனம்' எனப்படும். அனாவசியமான போக்கிய வஸ்துகளுக்காகப் பணம் செலவழிக்காமல் அவசியமென்று தோன்றும் பண்டங்களை மட்டும் வாங்கவேண்டியது கடமை. அவ்விதமின்றி வீண் ஆடம்பர வாழ்க்கைக்காக அவசியமில்லாத போக்கிய வஸ்துக்களை வாங்கி, வீடு முழுவதும் நிறைத்துக் கொண்டு, கையில் ஒரு தம்பிடி கூடச் சேர்க்காமல், கடன் கொடுப்பார் யாருமின்றி வாழ்வது முறையாகாது. கண்ணில் கண்டதையெல்லாம் வாங்க வேண்டுமென்று ஆசைப்படாமல் மனதை கட்டுப்படுத்தி, இருப்பதை வைத்துக் கொண்டு திருப்தியுடனிருப்பதுதான் சிக்கன முறை.

சுக்காஞ்செட்டித்தனம் அல்லது லோபித்தனமென்பது இதல்ல. லோபியானவன் தன்னிடமிருக்கும் திரவியத்தை தானும் உபயோகிக்க மாட்டான்; மற்றவருக்கும் உதவ மாட்டான்.

ஏழைகள் மட்டும்தான் சிக்கனமாக் விருக்கவேண்டுமென்றல்ல.

---

அதற்குமேல் எனக்கு இருக்கப் பிடிக்கவில்லை

மரியாதையாக வீட்டிற்குப் போவதுதான் நல்லது என்று வந்துவிட்டேன் இனி இவ்வித வம்புக் கூட்டத்தில்போய் கேட்பதைக் காட்டிலும் அவர்கள் சொல்வதுபோல் நம் வீட்டில் ஒரு கச்சேரி நடத்தலாம் என்றுதான் தோன்றுகிறது கடவுள் அவ்வித சக்தியைக் கொடுத்தால் ரொம்ப நன்றாக இருக்கும்.

ஸரஸா:—அக்கா! மணியைப் பார்த்தாயா? ஏகமா ஆய்விட்டதே!

மீ:—ஸரஸா! இன்றைக்கு பாடுவது யாரோ புதுபாடகராம் ஆகையால் அது எப்படி இருக்குமோ? அதைக் கேட்பதைவிட நம் லக்ஷ்மியின் பெண் நீலா வெகு நன்றாகப் பாடுகிறது அதை பாடச்சொல்லி கேட்டுவிட்டு வரலாம் வா—என்று சொல்லி, லக்ஷ்மியின் வீட்டிற்குச் சென்றார்கள். அன்று நீலாவின் பாட்டிற்கு நிகர் பெரிய வித்வான்களதுகூட ஆகாது என்று அவர்களுக்குத் தோன்றியது.

பணக்காரர்களும் சிக்கனமாக விருப்பதனல் நாளடைவில் பணம் குவிந்து, அதைக்கொண்டு பற்பல எளிய குடும்பங்களுக்கு உதவி, புண்ணியத்தையடையலாமல்லவா? குடும்பத்தை நடத்தும் பொருப்புகள் பெரும்பாலும் பெண்களைச் சேர்ந்திருப்பதால் குடும்பத்தின் நன்மையைக் கோரும் கிருஹலக்ஷ்மியானவள்தான் முக்கியமாக சிக்கனமாகவிருக்கவேண்டும்.

"அடீ! பார்வதியின் பெண்ணை பாரடி! எவ்வளவு செட்டும் சமர்த்துமாகக் குடித்தனம் செய்கிருள்! சாரதாம்பாளின் நாட்டுப் பெண்ணைப்போல் செட்டும் சமர்த்துமான பெண்ணை நான் இதுவரையிலும் கண்டதே இல்லை!" என்றெல்லாம் ஜனங்கள் வார்த்தையாடுவதை நாம் தினந்தோறும் கேள்விப்படுகிருேமல்லவா? 'ஜானகியின் மன்னியைப் போல் தூமரதண்டித்தனமாயிருந்தால் நாலு வருஷத்தில் ஓட்டாண்டியாகவேண்டியதுதான்! அந்தப் பெண்ணுக்கு அகமுடையான் ஒரு நாள் முழுவதும் நெற்றி வேர்வை நிலத்தில் சொட்ட உழைத்து சம்பாதிச்சுண்டு வருகிருனே என்று கொஞ்சமாவது சொரணை இருக்கோ! பாரடீ அநியாயத்தை! தினம் ஒரு புதுப்புடவையாம், நகையாம், டிபனுக்கு நாலுவகை பக்ஷணமாம், இப்படி குடித்தனம் சேஞ்சா குடும்பம் நாளடைவில் என்னகதிக்கு வரும் என்பதை கொஞ்சமாவது அவள் யோசித்தால்தானே" என்ற பேச்சு வார்த்தைகளுக்கும் வீண் அபவாதத்திற்கும் ஆளாகாமல் நம் நாட்டுப் பெண்மணிகள் செட்டும் சமர்த்துமாக சிக்கன வாழ்க்கையில் ஈடுபட்டு ஒரு தம்பிடியாலும் அதன் உபயோகத்தை நன்குணர்ந்து குடித்தனம் செய்வார்களாக. தம்பிடிகளை நாம் சேர்த்து வந்தால் ரூபாய்களைச் சேர்க்கும் காரியத்தை தம்பிடிகள் தன்னைப் போலவே செய்யுமல்லவா? சிக்கனமாக இருப்பவர்களின் உள்ளம் எப்பொழுதும் திருப்தியுடனும் அமைதியுடனும் இருக்கும். சுதந்திரமுடனும் இருக்கலாம். கடன், யாசனை முதலிய படுகுழிகளுக்கு இரையாகாமல் தன்னைத்தான் காப்பாற்றிக்கொள்ளலாம். சேவிங்க்ஸ் பேங்க், போஸ்ட் ஆபீஸ் ஸேவிங்க்ஸ் பேங்க், (National Savings Certificates,) லைப் இன்ஷ்யூரென்ஸ் இவைகளில் டிபாஸிட்டுகள்வைத்து பணம் சேர்ப்பதால் நாளடைவில் தனம் பெருகி, கலியாணம் கார்த்திகை முதலிய அதிகப்படி செலவுகள் ஏற்படுங்காலத்திலும், இன்னும் பல கஷ்டகாலங்களிலும் இத் தொகை நமக்குப் பேருதவியாகவிருக்குமல்லவா?

சிக்கன முறையை ஒவ்வொரு தாயானவளும் தன் குழந்தைகளுக்கும் சிறு வயதிலிருந்தே கற்பிப்பது கடமை. கிரஹலக்ஷ்மியானவள் வீட்டுக் கணக்கு வழக்குகளை முறைப்படி சரியாக எழுதி அதை அவ்வப்பொழுது கணக்கு பார்த்து வரவுக்கு மிஞ்சி செலவழியாமல் கண்காணித்து வரவேண்டும். கிரஹலக்ஷ்மிகாள்! "செய்யவேண்டியதை சீராகச்செய் !" என்ற மூதுரைப்படி குடித்தனத்தை சிக்கன முறையில் பாங்காக நடத்தி எல்லோராலும் "கிரஹலக்ஷ்மி இவளே!" என்று போற்றப்பட்டு பேரும் புகழும் அடைவீர்களாக!

போங்கும் மங்களம் எங்கும் தங்குக

# உயிர் என்றால் என்ன?

காப்டன். என். சேஷாத்ரிநாதன் M.B., B.S., D.T.M.

உயிர் என்றால் என்ன? இதை அறிவது கஷ்டமில்லை. ஆனால் இதை விவரிப்பது சுலபமன்று. ரசாயன சக்தி, உஷ்ணம், மின்சாரம், ரேடியோ இயக்கம் (Radio activity) என்னும் சக்திகளும் இவை போன்ற வேறு பல சக்திகளும் நாம் வாழும் பூமண்டலத்திலும், எண்ணத் தொலையாத ஜோதிமண்டலங்களிலும் காணப்படுகின்றன. இந்தச் சக்திகள் எல்லாவற்றையும் ஒன்றாக இசைத்து விடுவதினாலே ஏற்படுகிற சக்தியொன்றை உயிர் என்று கூறலாம். இந்தச் சக்திக்கும், மற்றெல்லா சக்திகளுக்கும் அமைந்திருப்பது போன்ற ஒரு நிலையம் தேவை. அந்த நிலையந்தான் ஆதி-உயிர்-வஸ்து. இதை ஆங்கில பாஷையில் ப்ரோட்டோப்லாஸம் என்பார்கள்.

'ப்ரோட்டோப்லாஸம்' என்ற வஸ்துவில் என்னென்ன ரசாயன மூலப் பொருள்கள் உண்டு என்பதை ஆராய்ந்து வெளியிட்டிருக்கிறார்கள். ப்ரோட்டோப்லாஸத்தை அமைக்கிற ரசாயன மூலப்பொருள்களை எப்படியெல்லாம் ஒன்று சேர்த்தாலும், பிராணிகளில் இருக்கும் ப்ரோட்டோப்லாஸமாவதில்லை. உயிரற்ற பொருள் ஒரு போதும் ப்ரோட்டோப்லாஸமாக முடியாது.

பிராணிகள் இறக்கும்பொழுது உயிர் எங்கே போகிறது? இறந்த பின் உடல், உடலாக இருப்பதில்லை என்பதைப் பிரத்யக்ஷமாகப் பார்க்கிறோம். உயிர் குடியிருக்கும் வீடாக அமைந்திருந்த சரீரம் பலவித உப்புக்களாகவும், வாயுக்களாகவும், நீராவியாகவும் பிரிந்து விடுகிறது. உயிர்மட்டும் தனிமையாக இருக்க முடியுமா? உயிர் என்பதைச் சிந்திக்கும்போது, உயிர் குடியிருக்கும் உடலையும் சிந்திக்காமல் இருக்க முடியவில்லையே. இப்படி இருந்தும், மனிதர்கள், உயிரை ஆத்மா என்கிறார்கள்; உடம்பு வேறே, ஆத்மா வேறே, உடல் அழிந்தாலும், ஆத்மா அழிவற்ற வஸ்து; சரீரத்திலிருந்து பிரிந்த பிறகு பரமபதத்திற்குச் செல்லுகிறது, அங்கே, உலகத்திலிருந்தபோது செய்த பாவ புண்ணியங்களின் பலன்களை அனுபவிக்கிறது என்றெல்லாம் நம்புகிறார்கள்.

ஆத்மாவுக்கு இந்தச் சரீரத்திலே இருப்பிடம் எங்கே? மூளைச் சோற்றியிலிருக்கிறதா! மூளைதானே சிந்திக்கும் யந்திரசாலை, அதனாலே, மூளையிலேதான் ஆத்மா இருக்கிறது என்று சிலர் கூறலாம். நாம் மனச்சாட்சியைக் குறிப்பிட்டுப் பேசும்போது, நமது மார்பைக் கையினால் தொட்டுக் காட்டிப் பேசுகிறோமே. அளவு கடந்த பயம், சந்தோஷம், அல்லது கஷ்டம் ஏற்படும்போது, நம்முடைய இருதயம் அளவுக்கு மிஞ்சியோ குறைவாகவோ படபடக்கத் தொடங்குகிறதை நாம் கவனித்திருக்கிறோம். இருதயம் திடீரென்று நின்றுவிட்டால், மனிதன் உயிர் இழந்துவிடுகிறான். 'அதனாலே சிலர், ஆத்மா இருதயத்தில் தான் இருக்கிறது' என்று சொல்லலாம்.

ஒருவன் மிகவும் உயரமான இடத்தி லிருந்து கீழே விழுந்தால், கழுத் தெலும்பு முறிந்துபோகும். இந்த இடத்திலேதான் மெடுல்லா ஆப் லாங்கேட்டா (Medulla Oblangata) என்று கூறப்படும் மூளைச் சோற்றியின் அடிபாகம் இருக்கிறது. கழுத்தெலும்பு முறிந்தால், இதற்குச் சேதம் உண்டாகும். ஒரே நிமிஷத்தில் உயிர் உடலைவிட்டு அகலும். தூக்குத் தண்டனை யிடப்பட்டவனுக்கு மரணம் ஏற்படுவதற்காகக் கழுத்தெலும்பை முறிப்பதின் காரணமும் இதுவே. ஒரே கணத்தில் நோவொன்றும் தெரியாதபடி உயிரிழக்கச் செய்யலாம். அப்படியானால், மூளைச்சோற்றியில் உள்ள இந்த அம்சத்திலேதான் உயிர் இருக்கிறது என்று வேறு சிலர் கூறலாம்.

நடு வயிற்றில் முதுகெலும்புக்கு முன்பாக நரம்பு முடிச்சு ஒன்று இருக்கிறது. இதற்கு ஸோலார்ஃப்ளெக்ஸஸ் (Solar Plexus) என்று பெயர். நடுவயிற்றில் உதை கொடுத்தால், இந்த நரம்புமுடிச்சில் பட்டு உடனேமரணமேற்படலாம். அப்படியானால், இந்த ஸோலார்ப்லெக்ஸஸை உயிரின் ஸ்தானம் என்று சொல்லலாமா! "அந்த மனிதனுக்குப் பிராணன் வதைத்துக்கொண்டிருக்கிறது" அப்போது, இருதயமும், சுவாசப் பைகளுமே வேலை செய்து கூடின மட்டும் அவனைக் காப்பாற்ற முயலுகிறது. மற்ற அங்கங்களும், அவயவங்களும் உயிரிழந்ததுபோலிருக்கும். இந்தச் சந்தர்ப்பங்களில் உயிரெங்கே இருப்பதாகச்சொல்லலாம்?

சில நோய்களினால் ஒருவனுக்குக் கைமட்டும், அல்லது கால்மட்டுமோ இரத்தோட்டமில்லாமலும் உணர்ச்சியில்லாமலும் போய்விடலாம். அந்த அங்கத்தை உயிரிழந்த அங்கமென்றே சொல்லவேண்டும். அது பின்பு அழுகிக் கீழே விழுந்துவிடும். பிறகு சரியாய்ச் சிகிச்சைசெய்தால் மனிதனுடைய உயிருக்குத் தோஷம் வராதபடி அவனைக் காப்பாற்றி விடலாம். இதன் தாத்பரியம், உயிரைப் பங்கிடலாமென்பதுதானா ?

பல்லியின் வால் துண்டிக்கப்பட்டால், வால்மட்டும் தனியே சற்று நேரம் துள்ளிக்கொண்டிருக்குமல்லவா ? உயிர் பங்கிடமுடியுமென்பதற்கு இதுவும் ஓர் உதாரணமல்லவா ?

கடலில் வாழும் சில பிராணிகளைப் பகுதியாக வெட்டினால், இரண்டு பகுதியும் முழுசாக வளர்ந்து இரண்டு பிராணிகளாகும். நட்சத்திர மீனுக்குச் சுற்றிலும் கைகள் போன்ற அங்கங்களுண்டு. ஒவ்வொன்றையும் துண்டித்தால், ஒவ்வொன்றும் மற்ற பாகங்களை வளர்த்துக்கொண்டு முழு நட்சத்திர மீனாகிவிடும்.

மனிதனுடைய உடலைத்தான் எடுத்துக்கொள்வோம்: மனித உடல் கோடிக்கணக்கான நுண்ணிய ஜீவ அணுக்களால் அமைந்திருப்பதாக விஞ்ஞானிகள் தெளிவாக்கியிருக்கிறார்கள். ஒவ்வொரு அணுவும், இரத்தத்தின் வழியாய் வரும் உணவுகளை உட்கொண்டு, வளர்ந்து தத்தமக்குரிய காரியங்களை மூளையின் கட்டளைப்படிச் செய்து, மற்ற அணுக்களுடன் ஒத்து வாழ்கிறது. காலம் செல்லச்செல்ல புதிய அணுக்களுக்கு இடம் கொடுத்து விட்டு, மாய்ந்துபோகின்றது. இந்த தர்மத்தை உடலில் ஒவ்வொரு அவயவத்திலுள்ள ஒவ்வொரு ஜீவாணுவும் செய்து வருகிறது. உணர்ச்சி நரம்புகளோ, செய்வினை நரம்புகளோ சிறிது துண்டுபட்டு விட்டால், திரும்பவும் வளரலாம் ! சர்மத்தில் காயம்பட்டால் சர்ம அணுக்கள்

பரவிக் காயத்தை நாளடைவில் மூடி விடும், எலும்புகள் முறிந்தால் எலும் பணுக்கள் வளர்ந்து ஒடிந்த எலும்பை ஒட்டிவிடும்.

மனித உடலில் அமைந்திருக்கும் ஒவ்வொரு அணுவையும் அணுதர்சி யினடியில் வைத்துப் பார்த்தோமா கில் அவற்றின் வெளியங்கமும் மூலஸ்தானமான நியுக்லியஸ்ஸை யும் (nucleus) பார்க்கலாம். இந்த மூலஸ்தானத்தில்தான் அதன் உயிர் இருப்பதாகச் சொல்லலாம். ஏனென்றால் அந்த அணுவை மனித வாழ்வுக்கு உழைக்கும்படிச் செய் யும் சக்தி இந்த மூலஸ்தானத்தில் தானிருக்கிறது, உடலில் அணுக்கள் பெருகி வளரும்போது, மூல ஸ்தானம் இரண்டாகப்பிரியும்!பின்பு வெளியங்கம் பிரிந்துவிடும், அதற்குப் பின் இரண்டு ஜீவாணுக்களாகும்.

கோழி முட்டையை கொஞ்சம் வளர்ந்ததும், குஞ்சு பொரிவதற்கு முன்பாக உடைத்து அதன் இரு தயத்திலிருந்தாவது, அல்லது வேறங்கத் திலிருந்தாவது, துளி யளவு எடுத்து ஒருவித விசேஷமான கண்ணாடிக் கருவியில் வைத்து, அசுத்தமாகாதபடி காப்பாற்றி தகுந்த உணவுநீரைக் கொடுத்தால் அந்த அம்சத்திலிருக்கும் ஜீவா ணுக்கள் வளருவதைப்பார்க்கலாம். வெகு நாட்கள்மட்டும் வளர்ந்து பெருகிக்கொண்டேயிருக்கும்.

இதையெல்லாம் பார்க்கும்போது, மனித உயிர் ஒன்றுதானா, பல உயி ரணுக்கள் சேர்ந்ததா என்ற ஸந் தேகம் உண்டாகிறது.

உயிரும் உயிரும் ஒன்றுசேருமா? சேர்ந்தால் ஒரே உயிராக இருக் குமா? பிரதம ஜீவராசிகளினது (Protozoa) வாழ்வில் உயிரும் உயி ரும் ஒன்று சேர்ந்து ஒரேஉயிராகக் கொஞ்சகாலம் இருப்பதைக் காண லாம். பின்பு பிரிந்து முன்போலவே இரண்டாகப் பிரியும். உயர்தர வகுப்புப் பிராணிகளில் இரண்டு உயிரணுக்கள்சேர்ந்து ஓர் உயிரணு வாவதுதான் கர்ப்பதான ஸம்பவத் தின் அதிசயம். இங்கு ஆண் அணு பெண் அணுவின் உள்புகுந்து அவ் விரண்டின் மூலஸ்தான பாகங்கள் ஒன்று சேர்ந்து ஒரே அணுவாகி விடுகின்றது. ஆனால் இந்த அணு ஒன்றாக இருப்பதில்லை; தாமதமில் லாமல் பல அணுக்கள் சேர்ந்த ஒரு பிராணியாகிவிடுகிறது. தாயின் கர்ப்பாசயத்திலிருந்து ஆகிருதியில் தவிர மற்றெல்லா விதத்திலும் தாயைப்போன்ற பிராணியாக வெளிவருகிறது.

உலகில் இப்படி உயிர்ப் பிரபா வங்களைப் பார்க்கும்போது, மனித உயிர் ஒன்றுதான் என்று எப்படிச் சொல்வது? உடல் இறந்து பஞ்ச பூதங்களாகப் பிரிந்துபோனாலும், ஆத்மா தனிமையாக இருக்கும், உடனேயே பரலோகத்திற்குப் போகிறதென்றோ அல்லது, மண் ணுக்கடியில் உடலுடன் தூங்கிவிட்டு கடவுள் கூப்பிடும்போது எழுந்து அவர் முன்னே போயிருப்ப தாகவோ எப்படிச் சொல்வது?

கடவுள் ஸர்வ வியாபியாயிருப் பதுபோல, உயிரும் ஒவ்வொரு ஜீவ ராசியில் ஒவ்வொரு அணுவிலும் பரவியிருப்பதாய் ஏன் சொல்லக் கூடாது? ஒவ்வொரு உயிரும் அதைப்போலவே எண்ணமற்ற உயிர்களாகப் பிரியக்கூடிய சக் தியையுடையது. உடலைவிட்டு உயிர் பிரிந்துவிட்டால், எந்த இயற்கைச் சக்திகளால் சேர்க்கப்பட்டதோ அந்தச்சக்திகளாகவும் பிரியுமென்று ஏன் சொல்லக்கூடாது?

உணர்ச்சியும் ஞாபகமும் அநேக ஸந்தர்ப்பங்களில் இல்லாமற்போ

கும். நாம் தூங்கும்போது நமது உணர்ச்சியும் ஞாபகமும் மறைந்து போகின்றன. பின்பு எப்படியோ திரும்பி வருகின்றன. குலோரோஃபாரம் முதலிய மருந்துகளினாலே உணர்ச்சியும், ஞாபகமும் இருப்பதில்லை. சில நோய்களினால் ஞாபகமும் உணர்ச்சியும் போய்விடுகின்றன. இந்த ஸ்திதியிலெல்லாம் உயிர் இருந்துகொண்டுதானிருக்கிறதென்று சொல்லுவார்கள். அப்போது ஆத்மா எங்கேயிருக்கிறது?

---

கட்டுரைப் போட்டி — பரிசுபெற்ற கட்டுரைகள்

# பணத்தினால் பெறமுடியாதவை எவை?

ஸ்ரீமதி. எஸ். ஜெயலக்ஷ்மி

“பணமென்றால் பிணமும் வாய் திறக்கும்” “பணம் பந்தியிலே” “குலம் குப்பையிலே” “பொருளிலார்க்கு இவ்வுலகமில்லை” முதலிய பழமொழிகளெல்லாம் நாம் அன்றாடம்பல இடங்களிலும் பலசந்தர்ப்பங்களிலும் நம்மையறியாமலும்கூட கூறிக்கொண்டு வருகிறோம். ஆனால் நான் கண்டமட்டிலோ கேட்டமட்டிலோ ஒரு பிணமாவது பணத்தைக்கண்டு வாய் திறந்ததாகவோ அல்லது பணத்தின் செல்வாக்கினால் ஒரு பிணமாவது திரும்ப உயிர் பெற்று வந்ததாகவோ தெரியவில்லை. ஆகவே அது ஒரு மிகைச் சொல்லாக, பணத்திற்கு பாடப்பட்ட ஒரு சிறப்பு மொழியாகவே ஆகும். இரண்டாவது பழமொழி சம்பந்தப்பட்டமட்டில் பணம் சமூகத்தில் உயர்வைத் தேடிக்கொள்ள சாதனமாகுமென்றும் ஆகவே இந்த உலகத்தில் பொருளீட்டினால் தான் பயன்படுமென்றும் கடைசி பழமொழி அறிவிக்கிறது.

பணத்தினால் பெறமுடியாதவை எவை? என்பதை ஆராயும் பொழுது அந்த சொல்லளவிலேயே பணத்தினால் (வாங்கவோ) அடையவோ முடியும் பொருள்களுக்கோ மற்றவைகளுக்கோ ஒரு அளவு இருந்தே தீருமென்றும், பணத்தினால் அடையமுடியாததும், பணத்திற்கு மேம்பட்டதுமான பொருள்கள் இருந்தே தீரவேண்டும் என்றே புலப்படுமென்பதை எல்லாரும் ஒத்துக்கொள்ளவேண்டி வருகிறது. மக்கள் நாள்தோறும் கஷ்டப்பட்டு உழைத்து பணம் சம்பாதிப்பது முக்கியமாக வயிறு வளர்க்கவும் மானத்தைக் காப்பாற்றுவதற்கும்தான். அதற்குமேற்பட்ட பணம், ஆடம்பரம், அலங்காரம், சுயநலம் முதலிய காரியங்களுக்கு உபயோகப் படுத்தப்படுகின்றது.

பணம் ஆகவே, இகலோக சாதனங்களை அடையக் கருவியாகிறது. அது பூரா செல்வமாகாது. மக்கட் செல்வம் பணத்தினால் அடையக் கூடியதல்ல. வடமொழியில் கூறுவதுபோல புத்திர சம்பத்து கடவுளருளினால் ஏற்படுவதல்லாமல் அது மனித யத்தனத்திற்கு புறம்பானது. பணத்தினால் ஒரு பொம்மையைப் போல வேறு யாருடையவாவது குழந்தையை வாங்கலாம். ஆனால் அது ஒருநாளும் தன்னுடைய குழந்தையாய்விடாது.

பணத்தினால் கெடுவதற்கு வழிகளனேகம் இருக்கின்றனவேயல்லாது பக்திக்கோ முக்திக்கோ வழி

காட்டியாகாது. இவை இரண்டும் பணத்தினல் ஆவதல்ல. பணம் இவைகளுக்கு சத்துரு என்றுகூடக் கூறலாம். பணக்காரன் டம்பமாக மேளதாளத்துடன் கோவில்களில் பூஜை, அபிஷேகம் நடத்தலாம். ஆனல் ஏழை ஒருவனுக்கிருக்கும் அந்தரங்க சுத்தி இருக்குமா என்பது சந்தேகம். அப்படி இருப்பதும் துர்லபம். ஆகவே தூய மனமில்லாமல் கடவுளை ஏமாற்றி வைகுண்டக் கதவைத் தாண்டமுடியாது.

ஆகவேதான் பல வைணவ சைவப் பெரியார்களும் பணத்தை "ஆட்கோல்லி" என்று சொல்லுகின்றனர். சகோதரர்களுக்குள்கூட பணவிஷயமாய் சண்டை வந்தால் கொலைவரைக்கும் கொண்டுவந்து விடுகிறது. ஆகவே அந்த பணமில்லாதிருந்தால் ஷைசகோதரர்கள் அன்புடன் இருந்து வருவார்கள். பணவிஷயமாய் ஒருவரை ஒருவர் விஷமிட்டுக் கொன்றதாக கதைகளில் படிக்கிரும். வாழ்க்கையிலும் அறிகிருேம். ஆகவே அன்பு, பாசம், காதல் கூட பணத்தினல் பெறமுடியாததேயாகும். சூரியன் என்னும் அஸ்தமிக்காத பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் ஏக சக்ராதிபதி எட்டாவது எட்வர்டு காதலுக்காக அரசையே துறக்கவில்லையா? சிம்மாசனம் அவரின் மணவாழ்க்கைக்கு இடையூருக இருந்தது பற்றித்தான் அதை அவர் தைரியத்துடன் துறந்தார்.

ஆகவேதான் உலகப் பெரியோர்கள் கௌதமபுத்தர், ஏசுநாதர்முதல் இன்று மகாத்மா காந்தி அவர்கள் வரை "தியாகிகள்" என்று புகழப்படுகின்றனர். பணத்தைகேவலமாக மதித்து துறந்தவர்களுக்குத்தான் பரமபதம் கிட்டும். மண்ணசை, பொன்னசை, பெண்ணசை துறந்த முனிவர்களை பணம் என்ன செய்யும்! பணத்தினல் பெறமுடியாத மனச் சந்துஷ்டியையும், சாந்தியையும், அடைந்து அவர்கள் தங்களைத் தாங்களே ஆசைகளிலிருந்து சுத்தப்படுத்திக்கொண்டிருக்கின்றனர். பூததயை, அன்புக்காக புத்தர் பிரான், ராஜ்யத்தைமட்டுமல்லாமல் பெற்ருேரையும் இளம் மனைவி கைக்குழந்தை இவர்களையும் துறந்ததற்கு உலகத்தில் இணையான சம்பவம் வேறெங்காவது உண்டோ? அவர்தான் துக்கத்திற்கு மூல காரணம் பணம், பாசம்என்றறிந்து உண்மையை உண்மை சொருபத்தில் கண்டுகொள்ள போதி மரத்தடியில் யோகநிலை பெற்ருர்.

மனச்சந்துஷ்டியைப் போலவே தேக ஆரோக்கியத்தையும் பணத்தினல் பெறமுடியாது. பழமொழி சொல்லுகிறது "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்று. பணத்தினல் வைத்தியர்களுக்கு தொழில்வளரலாம். ஆனல் நோயாளிகளுக்கு என்னப்பன் வைத்திய நாதன் தயவில்லாமல் பணத்தினல் மட்டும் சீர்கெட்ட தேக ஆரோக்கியத்தை சரிக்கட்ட முடியாது.

கற்பை ஒரு ஸ்திரீ பணத்திற்கு விற்றுவிடலாம். ஆனல் அதை கோடிப்பொன் கொண்டும் ஒரு நாளும் திரும்பிப் பெறமுடியாது. சதிஅனசூயை தன்னிடம் களங்கத்தோடு நினைத்த மும்மூர்த்திகளையுமே கைக்குழந்தைகளாக மாற்றவில்லையா? சாவித்திரி பணத்தைக் கொண்டா தன்புருடனின் உயிரை மீட்டாள்? அவள் கற்பும் தேவியின் அருளுமே அவளை மேன்மைப் படுத்தியது.

ஸ்ரீ ராமபிரானுக்கு எச்சில்பட்ட பழத்தைத்தந்த சபரியும், கண்ணனுக்கு உப்பிலாக் கஞ்சிதந்த விதுர

னும், வாய் உமிழ்நீரால் அபிஷேகம் செய்து சிவனை பரவசப்படுத்திய கண்ணப்பநாயனாரும், பிள்ளைக்கறி யளித்த சிறுத்தொண்டரும் பணத்தினால் பெறமுடியாத பதவியை அடைந்தது உயர்ந்த பக்தியாலன்றோ? ஆண்டையையே தன் காலில் விழச்செய்து தில்லையம்பலத்தானோடு ஒன்றாகக்கலந்த நந்தன் பக்திக்கிடுண்டோ?

தற்கால கஷ்ட நிலைமையிலும் பணமிருந்தும் பலருக்கு கள்ள மார்க்கெட்டில்கூட பல வஸ்துக்கள் கிடைப்பதில்லை. பர்மா அகதிகள் பலருக்குப் பணமிருந்தும் ஒரு வாய் ஜலத்திற்குக்கூட பயன்படவில்லை.

ஆகவே பணத்தால் பெறக்கூடியது துக்கமும் கஷ்டமும்தான். திடீரென பணம் வந்தது என்று கேட்டு சிலர் உயிர்கூடத் துறந்திருக்கிறார்கள். ஆகவே துக்கம், கஷ்டம் இவைதவிர மற்ற சுகம், சாந்தி, முக்தி முதலியவை அடைய பணம் தேவையில்லை. பணத்தினாலும் அவை அடையமுடியா.

## 2

### ஸ்ரீமதி. மல்லிகைசுந்தரம்

"பணத்தால் பெறமுடியாதவை எவை என்றவினாவிற்கு விடையாக, நமது வாழ்க்கைத்திரையில் தினசரி நடக்கும் காட்சிகளே போதிய சான்றாகும்.

அமாவாசை இருள். ஒரே கும்மிருட்டு. அகல்விளக்கு மங்கலாக எரிகிறது. காற்றடிக்கும் வேகத்தில் ஆடிஆடி, ஊசலாடுகிறது. பணமிருக்கும்போது கஷ்டப்படுவானேன். நமது இல்லத்திற்கு, மின்சார விளக்கு போட்டால், "சுவிச்சை" தட்டிவிட்டால், ஜகஜ்ஜோதியாக ப்ரகாசிக்கிறது. பட்டப்பகல்போலே இருப்பினும் பலகோடி மின்சார விளக்குகள் எரியினும் பரிதியின் ஒளிக்கு நிகர் ஆகுமா? அதைப் பணத்தால் பெறமுடியாது.

சித்திரைமாதம். அக்கினி நக்ஷத்ர ப்ரவேசம். ஒரே புழுக்கம். தேகமே தணலாகப் பற்றுகிறது. கையில் வெண்ணை இருக்க நெய்க்கு அழுவானேன். மின்சார விசிரி இருக்கும்போது விசையை அழுத்தினால் 'விர்ர்'ரென்று வருகிறது காற்று. வஸந்த காலத்தின் காற்றுக்குச் சமானமாகுமா? அஃதை விலை கொடுத்து வாங்கமுடியுமா?

உல்லாஸமாக மனக்களிப்புடன் சினிமாவுக்குச் செல்கிறோம். காதல், சோகம், கண்ணீர், வீரம், ஹாஸ்யம், இவைகள் திரையில் நடக்கின்றன. நமது மனமும் அவ்வப்போது அத்தகைய காட்சிகளில் உணர்ச்சியூட்டுகின்றது. மனச்சாந்தியில்லை.

சாயங்காலம். கடற்கரை, இயற்கை மோஹினி பலவித வர்ணங்களால் மேற்றிசையில் அழகுபட சித்திரிக்கிறாள். சந்திரன் உதயமாகிறது. அலைகள் பேராரவாரம் செய்கின்றன. மாசற்ற ஹிருதயம் படைத்த இளங் குழந்தைகளின் குதூகலமான விளையாட்டு நம்மை உற்சாகப்படுத்துகிறது. இயற்கையின் மோஹன வடிவில் மனம் சாந்த நிலையடைகிறது. "ஜில்"லென்ற காற்று தேகத்திற்கு ஆரோக்யமாயிருக்கிறது. மனச்சாந்தியைபணத்தால் பெற முடியாது.

நமது மோஹினி ஆசிரியை அவர்களின் நவீனத்தில் ஒன்றான "படாடோபத்தின்பரிபவத்தின் கதாநாயகனை "மணி" பணப்பேயாக அலைந்தான். பணமும் சேர்ந்தது. பணமே பிரාதனமாக எண்ணி, பெற்றோர், உற்றார், அண்ணன், மனைவி, காதலி முதலிய யாவரையும் துச்சமென உதறித் தள்ளினான். எல்லாரும்

போய் தனியாக இருக்கும்போது பணத்தால் அடைந்த பலனை உணர்ந்தான். மிஞ்சியபின் உணர்ந்தென்னபயன்? தாயின் விலையிலா அன்பை, தந்தையின் ஆசியை, உடன் பிறந்த பாசத்தை, தெய்விகமான காதலை, மனைவியின் எல்லையற்ற ப்ரேமையை, தன் குழந்தையின் பிம்பத்தை, பணத்தால் பெறமுடியாது. தன் ஆஸ்தியெல்லாம் தர்மஸ்தாபனங் களுக்குச் சேர்த்தான். வாழ்க்கை வெறும்பாலைவனமாகியது. 'பணம்' பாழ்நரகாக்கியது.

சோகச்சித்திரமாகிய, "சாரு லோசனு"வின் கதாநாயகி ஜெயமணி வயோதிக பிரபு கங்காதரருக்கு, பணத்திற்காக தன் தாயாலேயே வாழ்க்கைத்துணைவியாக்கப் பட்டாள். இருவர் வாழ்க்கையும் சாரமற்று வெறும் பாலைவனமாகியது. சந்தோஷமில்லை. இளங் காளை சாருஹாசன்மீது வைத்த காதலை மறக்க தன் மனத்தை எவ்வளவோ கட்டுப்படுத்தியும், தெய்விகமான ப்ரேமையை மறக்க வியலாது, சதா வேதனைக்குள்ளாக்கியது. தன் திரண்ட ஆஸ்தி அத்தனைக்கும் கங்காதரர் ஜெயமணியையே ராணியாக்கி, அவள்மீது உயிரையே வைத்திருந்தும் அவளிடம் அவர் கடுகளவு சந்தோஷத்தைக்கூட காணவில்லை. பதிபக்தியில் சிறந்த ஜெயமணியின் வாழ்க்கை கடைசியில் தற்கொலையில் முடிந்தது. தெய்விகமான காதலை பணத்தால் பெறமுடியாது.

புத்தபகவான் ராஜபோகத்தை வெறுத்தார். ஏன்? ஓடி ஒழுகும் உதிரப்பெருக்கில், தேர்க்கால் புதைய திசைதோறுஞ் சென்று வெற்றிபெறினும், போகத்தால், இறைவனை வழிபட உள்ளம் பண்படாது. துறவறமே மேல் என்று உணர்ந்தார். தனிமையில் இன்பங் கண்டார். உள்ளம் அன்புக்கடலாடியது. சகலஜீவன்களிடம் அவன் சொரூபத்தையே அன்பு உருவாகக் கண்டார். உள்ளத்தில் கருணை ஊற்று சுரந்தது. பக்தி பயிர் தழைத்து, முக்திக்கனி கொடுத்தது. பணத்தால், பக்தியை விலை கொடுத்து வாங்க முடியாது. பட்டினத்தார், பணத்தை கேவலம் "பதர்" என உதறித் தள்ளினர். பந்தபாசங்களை வேரறக் களைந்தார். பந்தம் விலகியதும் மனம் தியானத்திலீடுபட்டது. பகவானுடன் இரண்டறக் கலந்தார். எத்தனையோ மகான்கள், மகரிஷிகள், பணத்தால் பெறமுடியாத பக்தி உள்ளத்தை, திரிலோகத்தாரையும், பஸ்மமாக எரிக்கும் சக்தியையும், நினைத்த மாத்திரத்தில் சிருஷ்டிக்கக்கூடிய சக்தியையும் உடையவர்களாய் இருந்திருக்கின்றனர்.

இவ்விருபதாம் நூற்றாண்டின் இணையிலா வீரன் வின்ஸர் கோமகன் தெய்விகமான காதலுக்காக "சூரியனே அஸ்தமிக்காத ஏகாதிபத்தியத்தை, ஏக சக்ராதிபத்தியத்தையே உதறித்தள்ளினர். ஓர் சாதாரண பிரஜைபோல, முடிதுறந்த அன்றே, வியன்னவுக்குச் சென்றார். அவர் நினைத்தால் எத்தனையோ அரசிளங் குமரிகளை மணந்து அரசுசெலுத்தலாம். காதலுக்காக ராஜபோகத்தையே தியாகஞ் செய்தார்.

நமது பாரதமாதாவின் தவப்புதல்வர் காந்திமஹான் சுதந்திரத்திற்காக தன் வாழ்க்கையையே அர்ப்பணஞ் செய்கிறார். தியாகபுத்தி' தன்னலம் கருதாமை, பணப் பேராசையின்மையே அவரை "மஹாத்மா"வாக்கின.

# கடவுளைக் குழந்தையாகக் கொண்டாடுதல்

[‘குழந்தையும் தெய்வமும் கொண்டாடுமிடத்திலே’ என்பர். கொடிய மிருகங்களிடத்திலும் நம் உள்ளத்தைக் கவருகின்ற தன்மை, அவை தம் குட்டிகளுக்காகத் தம்மை வெறுத்து வாழும் இயல்பேயாகும். ஆதலால், கடவுள் எவ்வுயிரையும் குழந்தை வடிவிலே மகிழவைக்கிறான். மனிதனுக்கும் கடவுளுக்கும் நெருங்கிய உறவை உண்டுபண்ணுவது குழந்தை வடிவமாதலின். உயிர்களுக்கு இன்பம் தர அவனே குழந்தை வடிவில் வருவதாகக் கற்பனை. ப-ர்.]

எல்லா உலகமும் எல்லா உயிர்களும்
எல்லாப் பொருள்களும் தந்தவனே,
எல்லா உயிர்களும் ஈன்ற பொழுதினில்
இன்பம் பெற வரும் குழந்தையடி

எல்லா நலங்களும் எல்லாக் குணங்களும்
எல்லாச் செயல்களும் உள்ளவனே,
எல்லாம் அடங்கிய இன்ப வடிவென
எங்கும் குழந்தையாய் வந்தானே.

அண்ட சராசரம் ஆக்கும் பராபரன்,
அன்புக் குழந்தையின் உருவமடி;
கண்டவர் ஆசையாய்க் கொண்டு குலாவிடக்
காட்டும் வடிவது குழந்தையடி.

கொஞ்சிக் குலாவிடக் கோதில் பரம்பொருள்
குன்றிக் குறுகிய உருவமடி;
அஞ்சும் அதிசய ஆற்றல் அடங்கிய
அற்ப உருவது குழந்தையடி!

## ரிஸர்வேஷன் கூபன்

கூடிய சீக்கிரத்திலேயே வெளிவரவிருக்கும் மோகினி பிரசுரங்களில் எனக்குத் தேவையானவற்றைக் கீழே குறிப்பிட்டிருக்கிறேன். ஒவ்வொன்றிலும் ஒரு பிரதி எனக்கு ரிஸர்வ் செய்துவைத்து, வெளியானவுடன் ரிஜிஸ்டர் போஸ்ட் மூலம் அனுப்பவும். அதற்குண்டான தொகையை இன்று மணியார்டர் மூலம் செலுத்தியிருக்கிறேன்.

ரூ................ரசீது நெ..................தேதி...............1944.

கையொப்பம்..........................................................

முழுவிலாஸம்.........................................................

.......................................................................

தபாலாபீஸ்............................................................

ஜில்லா................................................................

183094

# இந்த மாதம்



புரட்டாசியில் நாம் விமரிசையாகக் கொண்டாடுவது :—

(1) ஏழுமலையானுக்கு மாவு திருவிளக்கு சமர்ப்பிப்பது

(2) நவராத்திரி கொலுப் பண்டிகை.

மோகினி அன்பர்களுக்கு இவ்வருடம் புரட்டாசி மீ ஒரு விசேஷ விருந்து அளிக்கப்போகிறது. அதுதான் நந்தவனம். 3. வர்ஷ ருதுமலர். உங்கள் பிரதியை உடனே பதிவு செய்யுங்கள்.

அகிலாபாயின் முகத்தை அமராபாய் பார்த்தாள். கலவரமும் ப்ரமிப்பும் திகைப்பும் வியப்பும் ஒன்று கூடி குழம்பிக்கிடப்பதை அறிந்து மவுனமே சாதித்தாள். மீண்டும் சிலரிடம் அழைத்துச்சென்று அவர்களைக் காட்டி, 'அதோ இந்தம்மாளுக்கு 500 ரூபாய் சப்பளம். அவர் வெகு பாலியத்திலேயே விதவையாகிவிட்டார். பிறகு படித்து நல்ல பதவிக்கு வந்திருக்கிறார். அவர் பெண்ணுலகத்திற்குச் செய்துவரும் ஸேவை சொல்லிலடங்காது.

அதோ அந்தம்மாள் கன்னிப் பெண்; கல்யாணமே ஆகவில்லை. அவர்களுக்கு 350 ரூபாய் சம்பளம் தன் சம்பளத்தில் தன் செலவுபோக மிச்சத்தை அப்படியே ஏழைகளுக்குதர்மம்செய்கிறார்கள்; அதுவே அவர்களடையும்நித்யானந்தமாகும். அதோ அந்தம்மாளுக்கு உன்னைப்போல் 7 வயதிலேயே விவாகமாகியது. அடுத்த வருடமே விதவையாகிவிட்டார்கள். ஆனால் நல்ல உயர்ந்த குடும்பத்து வாலிபனை நாகரீக முறைப்படி விதவா விவாகம் செய்துகொண்டிருக்கிறார். அவர் இங்கு பாட்டு உபாத்தியாயினி. அவர் கணவர் ப்ரபல வக்கீல். இரண்டு குழந்தைகளுடன் தேனும் பாலும் போல் குடும்பம் நடத்துகிறார்கள்.

அதோ, அந்தம்மாளைப் பார்த்தாயா! எத்தனை சாதாரணமாகவிருக்கிறார்கள்? அவர்களுடைய தகப்பனார் ஹைகோர்ட்டு ஜட்ஜ். தமயன் கலெக்டர். கணவன் ப்ரமாண்டமான டாக்டர். சம்பத்துக்கும் குறைவில்லை. சந்தானத்திற்கும் குறைவில்லை. இந்தம்மாளின் மகள் இதே கலாசாலையில் படிக்கிறார்கள். இந்தம்மாள் பி. ஏ. பட்டம் பெற்றவர்கள். தாம்படித்ததை வீணக்காமல் வாரந்தோறும் தம் வீட்டுத் தோட்டத்திலேயே ஒரு சிறிய பள்ளிக்கூடம் வைத்து ஏழைப் பெண்கள் வயதானவர்கள் முதலியவர்களுக்குக் கல்வி தானம் செய்கிறார்கள். தாமே ஒரு உபாத்தியாயினியாய்க் கற்றுக் கொடுக்கிறார்கள்.

அதோ அந்தம்மாளின் பக்கத்தில் நிற்கும் பெண்ணைப் பாரு. அவளும் நம்மைப்போல் உயர்ந்த ஜாதிதான். அவள் தகப்பனார் புரோகிதம் செய்பவர்தான். புரோகிதம் செய்யும் முறையில் பல பெரியமனிதர்களின் சினேகம் எளிதில் கிடைத்திருப்பதால் அந்த நல்லஅம்சத்தின் பயனால் பிள்ளையையும் பெண்ணையும் உபகாரச்சம்பளத்தில் படிக்கவைத்து முன்னுக்குக் கொண்டுவந்துவிட்டார். இந்த பெண் இவ்வருஷம் எல். டி. பாஸ் செய்துவிட்டாள். எங்கள் தலைவியின் முயற்சியினால் கூடிய சீக்கிரமே இவள் உபாத்தியாயினியாய் தஞ்சாவூருக்குச் செல்லப் போகிறாள்.

அகிலா! உன்னைப் பார்த்தால் ஒரேயடியாக ப்ரமித்துப் போய்விட்டவளைப்போல் காணப்படுகிறாயே! உனக்கு இந்த விஷயங்களெல்லாம் மிகவும் வியப்பாக இருக்கிறதல்லவா!'' என்று நயமாகக்கேட்டாள்.

அகிலா இந்த மண்ணுலகில் பிறந்து இத்தனை வருஷங்களாகிவிட்டதேயன்றி உலகத்திலுள்ள விசித்திரங்களோ, விநோதங்களோ ஒன்றுமே கண்டறியமாட்டாள். இன்று இந்த காலேஜில் காலைவைத்ததும் ஏதோ ஒருபுதிய உலகத்திற்கு வந்திருப்பதாகத் தோன்றியதேயன்றி தான் பிறந்து வளர்ந்து காலத்தைக் கடத்தும் உலகத்தில் இருப்பதாகத் தோன்றவே இல்லை.

'பெண்களுக்குக் கூட இத்தனை சுதந்திரமும் சலுகையும் அபாரமான திறமையும் உண்டா!' என்று

நினைக்கும்போதுதான் கட்டாயம் வேறு உலகத்தில் தான் இருப்பதாக ஓர் ஊர்ஜிதமான எண்ணம் உண்டாகியது. பட்டிக்காட்டான் பட்டணம் பார்த்ததுபோல் என்று பழமொழி சொல்வதுண்டு. அகிலா நாகரீகம் நிறைந்த பட்டணத்திலேயே இருந்தும் ஒருவிதமான விசித்திரமும் அறியாது கேவலம் பட்டிக்காட்டானைப் போலவே காணப்பட்டாள்.

“அமராபாய்! கேவலம் கபோதி போல் இருந்த என்னை ஏதோ புதிய உலகிற்கு அழைத்துவந்து விசித்திர



மான சம்பவங்களையும் காக்ஷிகளையும் காட்டிக் கண்ணைத் திறக்கச் செய்தாய்! இவ்வுலகத்தில் இத்தனை சிறப்புகளும் நூதனங்களும் இருக்கின்றனவா என்று எனக்குச் சந்தேகமாகவே இருக்கிறது.”

என்று கூறி முடிப்பதற்குள் அமரா சிரித்துக்கொண்டே, “உம். பயித்தியக்காரி! ஓர் உயிர்க்குள் மற்றொரு உயிரை ச்ருஷ்டிப்பது போலவே ஒரு உலகத்திற்குள் மற்றொரு புதிய நாகரீக உலகத்தையும் பகவான் ச்ருஷ்டித்துள்ள விசித்திரத்தை மனிதப் பிறவி கொண்ட நீயும் பார்த்துமகிழ்வதற்கே உன்னை இங்கு அழைத்துவந்தேன். இதையே

கண்டு நீ ப்ரமித்துவிடுகிறாயே! இனி மேல் நடக்கப்போகும் விநோதத்தைப் பார்த்தால் நீ என்ன சொல்வாயோ! வா; மணியாகிவிட்டது. முதல் வரிசையில் உங்களை உட்கார வைத்துவிட்டு நான் உள்ளே போய் வேஷம் போட்டுக்கொள்ள வேண்டும். வாருங்கள்... ஸரஸா! இந்த அத்புத உலகத்தின் கவர்ச்சி உனக்கு எப்படி இருக்கிறது?'' என்றாள்.

இருவரும் பதிலே சொல்ல முடியாது, வியப்பே வடிவமாய் யந்திரப் பாவைகள் போல் அமராவின் பின்னாலேயே சென்றார்கள். இந்த புதிய சந்தோஷத்தில் தங்களையே மறந்தார்கள் என்றால் மிகையாகாது.

## 11

இதுகாறும் கண்ட நாகரீகக் காக்ஷிகளைக் காட்டிலும் இப்போது சபையில் அலங்காரமாக உட்கார்ந்திருக்கும் சீமாட்டிகளையும் அவர்களின் அலங்காரங்களையும் கண்டு பின்னும் பன்மடங்கான ஆச்சரியத்தையடைந்து இமை இசைக்காமல் அவர்களையே பார்த்து ப்ரமித்தார்கள். குறித்த நேரம் வந்ததும் மணியடித்துத் திரை விலகியது.



பொருக்கி எடுத்தாற்போல் அழகு மிகுந்த பெண்கள் அணிவகுத்து நிற்கவும் மத்தியில் ஒரு பெண் சாக்ஷாத் ஸரஸ்வதியின் வேஷம் போட்டு உட்கார்ந்திருப்பதுவும் மற்ற பெண்கள் மலரை ஸரஸ்வதியின் கமல பாதங்களில் தூவி ஆனந்தமாக "கலைவாணி! கழல் பணிந்தோம்'' என்கிற பாட்டை அதியத்புதமாகப் பாடவும் அந்த சமயம் மின்சார விளக்குகள் கலர் கலராக ப்ரகாசிக்கச் செய்ததும் கண்ட அகிலா திடீரென்று தன்னை ப்ரம்மலோகத்திற்கு அழைத்துச் சென்றுவிட்டதுபோன்ற ஓர் உணர்ச்சியால் தாக்கப்பட்டு ப்ரமித்துப் போனாள்.

அங்கு நடக்கும் ஒவ்வொரு காட்சியும் கூறத்திறமற்ற ஆச்சரியத்தையே விளைவித்தது. நாடகம் ஆரம்பமாகும் நேரத்தையே அகிலா எதிர்பார்த்திருந்தாள். நாடகத்தில் அமராபாயின் நடிப்பைக்கண்டு களிக்க அவள் மனது துடித்தது.

நாடகமேடையில் தோன்றியதும் அமராபாயின் அடையாளமே மாறிப்போய் "இவள் யாரோ'' என்று ப்ரமிக்கும்படியாய் அத்தனை வித்யாஸத்தைக் கண்டு தம்பித்துவிட்டாள். நாடகத்தில் ஒரு பாத்திரம் ப்ரமாதமாக ப்ரஸங்கம் செய்யும் கட்டம் வந்ததும் சபையில் எங்குமில்லாத நிச்சப்தம் குடிகொண்டது.

"ஏன்! இப் பரந்த உலகத்தில் கோடிக்கணக்கான மக்களும், மாக்

களும் ஜீவராசிகளும் பிறந்து ஸ்வதந்திரமாக வாழும்போது என் ஒரு ஆத்மாவுக்குமட்டும் வாழ இடமில்லாமலாபோய்விட்டது? தௌர்ப்பாக்ய உலகத்தில் நான் பிறந்தும் தற்கொலை புரிந்துகொண்டு சாவதற்கா விதியமைந்தது. ஏன்... விதியாவது விதி! விதியை முற்றிலும் வெல்ல மதியால் முடியாது என்றாலும் ஓரளவாவது வென்று ஏன் வாழ முடியாது. நான் எனது மாமாவிடம் திக்கற்று வந்திருப்பதனாலேயே முற்றிலும் அவர்களுக் கடிமையாகிவிட்டேனா! எனக்கென்று சொந்த மனிதர்களுக்குத்தான் பஞ்சமாகிவிட்டது. எனக்கென்று வாயிலும் கையிலும் நிறைய வித்தையாவது இருந்தால் அது என்னை காப்பாற்றுமலாபோய்விடும். அந்த கலைவாணியுமாஎன்னை உபேக்ஷை செய்து அடிமையாக்கிவிடுவாள்! இனி அரைக்கணங்கூட நான் இது பரியந்தம் இருந்தது போல் முட்டாளாக இருக்கமாட்டேன். என் வாழ்நாள் முற்றும் இப்படியே அடிமையாகவிருந்தால் என் எதிர்கால வாழ்க்கை நடப்பதெப்படி?

என்னிடமும் பிழைக்கும் வழி இருந்தால் என்னை நான்குபேர்கள் மதிப்பார்களல்லவா! இந்த வீட்டில் சொந்தக்காரர்களிடம் அடிமையாக இருந்து சாவதைவிட வீதியில் குப்பை வாரி நான்கு காசு சம்பாதித்து சந்தோஷமாக வயிறு வளர்க்கலாம். இன்று என்னை அதிகாரம் செய்து மூட்டைப்பூச்சியை நசுக்குவதுபோல் நசுக்கும் மாமனும் மாமியும் என்னை என்னுயுள் பரியந்தம் காக்கவாபோகிறார்கள். கல்யாணமாகாதிருந்தாலும் மூன்றாந்தரம் நான்காந்தரம் என்று ஒரு கிழவனுக்கு என்னைத் தள்ளிவிட்டு அவனிடம் லஞ்சத்தை வாங்கிக்கொள்ளும் ஒரு மார்க்கம் கிடைக்கும். அந்த சந்தோஷமும் இல்லை. விதவையை வைத்துக்கொண்டு வாழ்நாள் பூராவும் கஷ்டப்பட யார் முன் வருவார்கள்?'' என்று சொல்லிக்கொண்டிருக்கையில் அந்த கதா பாத்திரத்தின் மாமி இதைக் கேட்டுக்கொண்டு வந்து அப்பெண்ணை தடார் புடார் என்று நையப் புடைத்துக் கண்டவாறு திட்டி உள்ளே இழுத்துக்கொண்டு போகும் காக்ஷியைக் கண்டதும் அகிலாவின் இதயம் நெருப்பிடைப் புழுவெனத் துடித்தது.

திடீரென்று அவளையறியாத பயங்கரமும் எதிர்காலத்தின் விபரீத தோற்றங்களும் திடும் திடும் என்று தோன்றி அலறச்செய்தன. "எனது பாழ்பிறவியைப்போல் கதையிலுமா வரவேண்டும்? என்னையே குத்திக்காட்டுவது போலிருக்கிறதே. இதென்ன வேடிக்கை!'' என்று நினைக்கும்போது அவளுக்கு திடீரென்று அவளுடைய தமயனின் நினைவு வந்துவிட்டது.

அவ்வளவுதான். அகிலாவை அப்படியே ஆகாசத்தில் தூக்கிக்கொண்டுபோவதுபோலாகிவிட்டது. அதுபரியந்தம் தன் வீட்டு நினைவே இல்லாதிருந்த அவளுக்கு அந்த நினைவு வந்து மிகவும்வதைக்கவாரம்பித்தது. அண்ணன் வந்த பிறகு தங்களுடைய இச்செய்கை தெரிந்தால் என்ன ஆகும்? இப்போது நாடகத்தில் பார்த்தபடியே நடந்துவிடுமா! அவனுக்கு பகவான் நல்ல புத்தியைக் கொடுத்துக் காப்பாற்ற வேண்டுமே! "ஆண்டவனே! வீட்டிற்குச் சென்றதும் எவ்விதமான விபத்துமின்றி காக்கவேண்டும். நான் அண்ணனுக்கு விருப்பமில்லாத காரியத்தைச் செய்தது மிகவும்

பிசகுதான் என்பதை என் மன மறிந்தும் நான் ஆசையின் வசப் பட்டுத் தடுக்க முடியாத தவறுதலைச் செய்துவிட்ட பெருங் குற்றத்தை நீ தான் மன்னிக்கவேண்டும்.''

என்று பகவானை ப்ரார்த்தனை செய்தவாறு உட்கார்ந்திருப்பதால் மேலே நடக்கும் எந்த விதமான காட்சியும் அவள் கண்களில் படவே இல்லை. எழுந்து போய்விடலாமா! என்றுகூட எண்ணினாள். ஆனால் தனியாகப் போவதற்கு வழி தெரி யாதே என்ன செய்வது? வீட்டை விட்டு நகர்ந்தறியாததால் அதற்கும் தைரியம் போதவில்லை. அமராபாய் எப்போது வருவாள் என்ற எதிர் பார்ப்பில் ஸாரமற்று உப்புச் சப் பின்றி உட்கார்ந்திருந்தாள்.

ஸரஸாவுக்கும் இதேபோல் தன் கணவனுக்கு இச் செய்கை தெரிந் தால் என்ன நடக்குமோ! என்கிற பயம் உண்டாகிவிட்டதால் அவளுக் கும் இருக்கை கொள்ளாது மனது கலங்கவாரம்பித்தது. தான் தான் கவலைப்படுவதாயும் அகிலா ஆனந்த மாகப் பார்ப்பதால் அவளைத் தான் தடுக்கக் கூடாதென்றும் ஸரஸா நினைத்து வாளாவிருந்தாள்.

அதே போலத்தான் அகிலாவும் நினைத்து மவுனம் சாதித்தாள். அகத்தினழகு முகத்தில் என்கிறபடி இவர்களுடைய முக விகாரங்களின் மூலம் உள்ளத்தின் போராட்டங் களை மேடைமீதிருந்தபடியே கவ னித்த அமராபாயிக்கு கவலையாகி விட்டது. எங்கேசொல்லாது எழுந்து போய்விடுவார்களோ! என்கிற பய மும் உண்டாகியது.

''வழி துறை தெரியாமல் இந்த இருட்டு காலத்தில் இவர்கள் எங்கா வது வழி தப்பிவிட்டால் இதற்கு யார் ஜவாப்தாரி?'' என்கிறபயத்தால் தான் நடிக்காத சமயம் ஒரு மாண வியை அனுப்பி அகிலாவையும் ஸர ஸாவையும் சுட்டிக்காட்டி அவர்களை உள்ளே அழைத்து வரும்படியாகக் கூறினாள். அப்படியே மாணவி வந்து அழைத்துச் சென்றாள்.

அமராபாய் அவர்களை ஆச்வாஸப் படுத்தி விட்டு, ''வந்தவிடத்திலுமா கவலைப்பட்டுச் சாகிறாய்! இனிமேல் தான் தலைமை வகித்துள்ள ராணி யார் பேசப்போகிறார்கள். வெகு அருமையாயிருக்கும். அதைக் கேட்ட உடனே உங்களை நான் முத லில் என்காரில் அனுப்பிவிடுகிறேன். பயப்படாதீர்கள். கிணற்றுத் தவ ளைக்கு நாட்டு வளப்பமேதற்கு என் கிற பழமொழிப்படிக்கு உலக விஷேதமே அறியாது இருந்தீர்களே! இப்போது பார்த்தீர்களா! உங்களை விட உங்களை அழைத்துக்கொண்டு வந்த பொருப்பும் அதனால் உண்டா கும் சாதகபாதகங்களும் எனக்குத் தான் அதிகம். ஆகையால் நான் ஜாக்ரதையாகக் கொண்டுவிடு கிறேன். கவலை வேண்டாம்.'' என்று தேற்றினாள்.

ராணியின் தடபுடலான பேச் சைக் கேட்டு எல்லோரும் அபார மாகக் கையைத் தட்டி ஆரவாரம் செய்தார்கள்.

ராணியையும் ராணியின் பேச் சையும் மிக்க வியப்புடன் பார்த் தாலும் உள்ளுக்குள் செய்யும் வேதனையும் பயமுந்தான், முதன்மை ஸ்தானம் பெற்று பாதித்ததால் மனது நிலைகொள்ளாது தவித்தாள். ஒருவாறு கொண்டாட்டம் முடிந்த தும் ஸரஸாவையும் அகிலாவையும் ஜாக்கிரதையாகத் தனது காரில் அனுப்பிவிட்டாள்.

வரும் வழி எல்லாம் இந்த ரகஸ் யம் ஸாமிக்குத் தெரியாமலிருக்க வேண்டுமே என்று இரு பெண்மணி களும் ஜபம் செய்தவாறே சென்

ளர்கள். வீட்டை நெருங்க நெருங்க திகிலும் பயமும் அதிகரித்தன. கிடு கிடென்று நடுங்கச்செய்தது. ஒரு வேளை அவன் ஊரிலிருந்து இதற் குள் வந்திருப்பானே! என்றுகூடப் பயம் நடுங்கியது.

வீட்டு வாசலில் கார் நின்றதும் இவர்களுடைய ப்ரமையினால் வீட் டில் ஸாமி நிற்பதுபோன்று ஓர் அதிர்ச்சி உண்டாகி திடுக்கிடச் செய்தது. மெல்ல இறங்கி வீட்டிற் குள் சென்ற பிறகுதான் நிச்சயப் பட்டது. "இந்த ரகஸ்யம் அண்ணு வுக்குத் தெரியாமல் செய்து எங்களை காப்பாற்றவேண்டும்" என்று அகிலா பகவானின் படத்திற்கு முன்பு நின்று வேண்டினாள். அதே மாதிரி ஸரஸாவும் ஒரு மூலையில் வேண்டினாள். நல்ல வேளையாக அந்த வீட்டில் இவர்களைத் தவிர வேறு குடித்தனம் இல்லாததால் இந்த ரகஸ்யத்தை யாரும் அறிய முடியாது போயிற்று.

மறு தினம் காலையிலேயே ஸாமி நாதன் வந்துவிட்டான். அவனைப் பார்ப்பதற்கு முன்பு பயந்ததைவிட பார்த்தபிறகு திகில் இன்னும் அதிக மாய்விட்டது. தங்களுடைய திருட் டுச் செய்கை அவனுக்குத் தெரிந் திருக்குமோ! யாராவது சொல்லிவிடு வார்களோ! என்று நடுங்கும்போது அவன் எதிரிலேயே வருவதற்குப் பயந்தார்கள். ஆனல் ஸாமிநாத னுக்கு அவர்களிடம் சந்தேகங்கூட உண்டாகவில்லை. அதோடு அவன் முதன் முதல் சென்ற இடத்தில் வெகு நல்ல கீர்த்தியும் புகழும் அதி விரைவில் கிடைத்ததோடு ஸம்ஸ் கிருதத்தில் மிகவும் அழகாக ப்ர ஸங்கம் செய்ததற்காக அவனுக்கு அவனே எதிர்பாராவண்ணம் ப்ர மிக்கத்தக்கவிதமாக ஒரு சால்வை சன்மானம் செய்தார்கள்.

அந்த சந்தோஷ சாகரத்தில் மிதந்துகொண்டு வந்ததால் வீட்டில் எதையுமே கவனிக்கவில்லை. அவ னுக்கு வேண்டியவர்களுக்கெல்லாம் தனது சால்வையைக் காட்டியும் அங்கு மகாநாடு நடந்த விமரிசை யைச் சொல்லியும் மகிழ்வதற்கே பொழுது சரியாகவிருந்தது. அவ னுக்கு அன்று பாடசாலை விடுமுறை யாதலால் வீட்டிலேயே இருந்தான். இவனைப்போன்ற ஸஹ்ருதனிகள் பலர் ஓயாது வந்து சந்தோஷம் விசாரித் ததில் அன்றைய பொழுதே ஆனந்தமாகக் கழிந்தது.

ஊராருக்கெல்லாம் தனது சந் தோஷத்தைத் தெரிவிக்கின்றனே யன்றி தன் மனைவிக்கும் சகோதரிக் கும் அதைத் தெரிவித்து மகிழவில்லை அவனகைக் காட்டாவிடினும் ஸரஸா வும் அகிலாவும் மறைந்து பார்த்து ப்ரம்மானந்தமடைந்தார்கள்.

அகிலா முதல்நாள் தான் பார்த்த காக்ஷி அவள் மனத்தைவிட்டு அகலவே இல்லை. "உலகத்தில் பெண்கள் ஆனந்தமாக காலங் கழிக்க இத்தகைய உயர்ந்த வழியா யிருக்கிறது?" என்ற ஆச்சரியம் அவள் மனத்தில் பெருங் கிளர்ச்சி யை உண்டாக்கிவிட்டது. அதையே எண்ணி இன்புறுவதில் அவளுக் கொரு தனி இன்பமும் உணர்ச்சி யும் தோன்றின.

தனக்கும் இத்தகைய உயர்ந்த காலம் வருமா! என்றுகூட மனது ஏங்கவாரம்பித்தது. ஏன்? வயதில் இவளைவிட சிறுமியான ஸரஸாவுக் குக்கூட தனது நாத்தனரின் எதிர் கால வாழ்க்கைக்கு இத்தகைய ஒரு ஆதரவு கிடைக்குமா! என்று தோன்றியது. சிறுமிகளின் உள்ளங் களில் இதே சந்தோஷமும் ஏக்கமும் எதிர்பார்ப்புமான அலைகள் மோதிக் கொந்தளித்தன.

அந்த சம்பவத்திற்குப் பிறகு ஒரு மாதகாலம் எப்படியோ ஓடி மறைந்துவிட்டது. இந்த ஒரு மாதத்திற்குள் அகிலா மிகவும் ச்ரத்தையுடனும் ரகஸியமாயும் அமராபாயின்ஓய்வுநேரத்தைவீணுக்காமல் அவளிடம் பாடம் கற்கவாரம்பித்தாள். ஆசையின் வேகத்தில் ஒரு மாதத்திற்குள் நான்கு மாதம் படிக்கும் அளவு அவள் கற்றுக்கொண்டதைக் கண்டு அமராபாயே ப்ரமித்துப் போனுள். அமராபாய் மகா குணவதி; இளகிய மனதுடையவள்: ஆதலால் தனது பெரிய படிப்பிற்கு இடையில் இவளை மிகவும் நன்ருகக் கவனித்துவந்தாள்.

இதற்கிடையே ஸரஸாவை அவள் தாய் வீட்டினர் வந்தழைத்துக்கொண்டு போனர்கள். ஸரஸா போகும்போது அகிலாபாயை மிகவும் ஆதரவாயும் அன்பாயும் வைத்துக்கொள்ளும்படி தன் கணவனிடம் கெஞ்சிக் கூறிச் சென்ருள்.

அகிலாவுக்கு ஸரஸாவைப் பிரிய வருத்தம் இருப்பினும் அவள் நல்ல படிகையும் குழந்தையுமாக வந்து சேரவேண்டும் என்கிற ஆவலால் அவளுடைய க்ஷேமத்தைக்கோரி பகவானை வேண்டினுள். அமராபாயிடம் பிரம்பு வேலை, தையல் வேலை, பூக்கள் விதவிதமாகப் போடும் வேலைகள் முதலியன கற்றிருந்ததால் அதில் அகிலா நன்ருகத் தேர்ச்சிபெற்று ஏராளமாக அமராவுக்குப் போட்டுக்கொடுத்தாள்.

கல்வி, சங்கீதம், கைத்தொழில் ஆகிய மூன்றின் துணையால் அகிலாபாயின் துயரம் அறவே மறந்து மிக்க சந்தோஷமாகவே காணப்பட்டாள். வீட்டு வேலையைத் தவிர மற்ற நேரங்களில் அவள் பொழுது ஆனந்தமாகவே கழிந்தது.

---

## 12

அனாதைக் குழந்தைகளின் வளர்ப்புச் சங்கத்தின் நிதி வசூலுக்காக அச்சங்கத்தினர் ஒரு பொருள் காட்சி சாலையை தடபுடலாக நிறுவினர்கள், அக்காட்சிச் சாலை கமிட்டியில் அமராபாயின் தாயாரும் ஒரு மெம்பராகையால் அந்தம்மாள் தான் வெகு உத்ஸாகத்துடன் அக்கரையாகப் பாடுபடுவதால், அமராபாயுடன்கூட ஓய்ச்சலின்றி உழைக்கவாரம்பித்தார்கள்.

தினம் காலையில் ஒரு கச்சேரி; மாலையில் ஒரு கச்சேரி ஏற்பாடாகி இருந்தது. அமராபாய் ஒரு தினம் தனிக் கச்சேரி செய்வதாக ஒப்புக்கொண்டிருந்தாள். அமராபாயின் வீட்டில் ஸங்கீதம் ஓயாமல்ஒலித்துக்கொண்டிருந்ததால் அகிலாவின் கவனத்தை அந்த மதுர கீதம் கவர்ந்து இழுத்தது.

அமராபாயிக்கு இந்த பொருள் காட்சி சம்மந்தமாக அதிக வேலை இருந்ததால் அகிலாவிடம் அதிகம் வந்து பேச நேரமில்லாது போயிற்று. அகிலாபாய் மாடி வராண்டாவிலிருந்து அடுத்த வீட்டில் பாடுவதை வெகு ஆனந்தமாகக் கேட்டு இன்புற்றுவந்தாள்.

10 வயது சிறுவன், சிறுமி முதல் 80 வயது கிழவன் கிழவி வரையில் அந்த பொருள்காட்சிச்சாலையில் இனமாகப் பாடுவதற்கு இசைந்திருந்ததால் எல்லோரும் கௌரவமாக வரவேற்கப்பட்டு அமராபாயின் வீட்டிலேயே அவர்களுக்குச் சவுகரியங்கள் செய்து கொடுக்கப்பட்டதால் எல்லோரும் அங்கு தங்கினர்கள்.

தன் தமையன் வீட்டிலில்லாத சமயங்களில் அகிலாபாய் அமராவின் வீட்டிற்கே சென்று அந்த அத்புத கானத்தைக் கேட்டும், அவர்

கலைக் கண்டும் இன்புற்று மகிழ்வாள். பொருள்காட்சியைப் பார்க்க வேண்டுமென்கிற பேராவல் இருப்பினும் அண்ணனுக்குத் தெரியாது போக மிகவும் பயந்து நடுங்கினாள்.

தன்னைப்போன்ற குடும்பத்துப் பெண்மணிகள் பலர் நல்ல அருமையாகத் தனிக் கச்சேரி செய்யும் ஆனந்தத்தைக் கண்டு அகிலாவின் இதயத்தில் சொல்லவறியாத உணர்ச்சி உண்டாகியது. தானாக ஏதோ ஓர் ராகத்தை இழுத்தவாறு அகிலா தையல்வேலைசெய்துகொண்டிருக்கும்போது அமிருத தாரையே செவியில் வந்து விழுவதுபோல் ஒரு ஸங்கீத கானம் கேட்டு ப்ரமித்துப் போனாள்.

"என்ன வசீகரம்! என்ன அத்புதம்! குரல் இனிமை என்பதை இதுபரியந்தம் கேட்டிருக்கிறோம். இம்மாதிரி குரல் கேட்டதே இல்லையே! ஆஹா!... என்ன மூர்ச்சை!" என்று அகிலா பூரித்துப் புலகிதமுற்று மாடிக்கு ஓடினாள்.

பக்கத்து வீட்டில் தம்பூரா ச்ருதியைத்தானே மீட்டிக்கொண்டு சுமார் 30-வயது மதிக்கத்தக்க ஓர் கட்டழகன் மெய்மறந்து இன்பத்துளிகளை உதிர்ப்பதேபோல் பாடுவதையும் அங்கு உட்கார்ந்துள்ள எல்லோரும் சபாஷ்...பலே... ஆஹாஹா !...என்று ஒரே முகமாக ஆர்ப்பரிப்பதும் கேட்டு இன்னதென்று அறியாது அகிலாவின் உள்ளம் பூரித்து அப்படியே நின்றாள்.

பொருள் காட்சியில் கச்சேரி செய்ய வந்தவர்களில் இவனும் ஒருவன் என்பதை அகிலா அறிந்து கொண்டாள். அன்று எப்படியாவது தானும் போகவேண்டுமென்று நினைத்தாள். ஆனால் தான் ஒரு அடிமை என்கிற நினைப்பு வந்த உடனே நடுக்கலுற்றாள்.

பொருள்காட்சி ஆரம்பமாவதற்கு நான்கு தினங்களுக்கு முன்பிருந்தே அமராபாயின் வீட்டில் பாடகர்களின் கூட்டமும், மேஜிக், விகடம், விநோதம், செய்பவர்களின் கூட்டமும் பெருகிவிட்டது. பெண்களே நாயனம் வாசிப்பதற்கும், பெண்களே மிருதங்கம், பிடில் வாசித்து பெண்கள் செட்டே சேர்ந்து கச்சேரி செய்வதற்கும் ஆஜராக வந்திருப்பதைக் கண்டு அகிலாவின் உள்ளம் ஆச்சரியத்தால் மலர்ந்தது.

தினமும் அந்த சுந்தரவாலிபனின் கானம் மக்கள் மனத்தைக் கொள்ளைகொள்ளும் அபூர்வ வசீகர சக்திவாய்ந்ததாக இருந்தது. குரல் கேட்கும்போதெல்லாம் அகிலாவை அறியாமலேயே அவள் கால்கள் மாடிக்கு இழுத்துச்செல்லும். ஏதோ நிதிகண்டதுபோல் இமை இசைக்காமல்பார்த்தும்,கேட்டும் மதிமயங்கி சங்கீதத்தின் இன்னிசைக்கு அடிமையாகிவிடுவாள்.

தான் இவ்விதம் நிற்பது குற்றமா! குணமா ! என்பதை அவள் மனது சற்றும் நினைக்கவே இல்லை. அதைப் பற்றி அவள் அடியோடு மறந்து விட்டாள். என்ன காரணத்தினால் தான் இப்படி வந்து நிற்கிறோம் என்பது அவளுக்கே தெரியவில்லை. நீ ஏன் இப்படி நிற்கிறாய் என்று யாராவது கேட்டால் என்ன பதில் சொல்வாளோ ! அவளே அறியமாட்டாள்.

பொருள்காட்சி அழகைப்பற்றி புகழாதவர்கள் கிடையாது. அத்தகைய சிறப்புடன் எதிர்பார்த்ததை விட அதிகமான வரும்படியைக் கொடுப்பதால் கமிட்டியார் மிக்க மகிழ்ச்சியுடன் மேலும் மேலும் அழகுப்படுத்தி புதிய புதிய கச்சேரிகளைச்சேர்த்துப் பின்னும் சிறப்புறச் செய்தார்கள்.

ஊரில் உள்ள ஜனங்களில் அகிலாவையும் ஸாமிநாதனையும் தவிர அந்த காக்ஷியைக் கண்டு களிக்காதவர்களே இல்லை. பொருள்காக்ஷிக்குச் சென்று பார்ப்பதுகூட கேவலமானதென்கிற மனோபாவத்திலுள்ள ஸாமிநாதனுக்கு சதா அடுத்த வீட்டில் அது விஷயமாக நடக்கும் தடபுடல் சற்றும் பிடிக்கவே இல்லை. வெறுப்பே உண்டாகியது

அன்று பக்கத்துவீட்டு வாசலில் ஏகப்பட்டக் கூட்டம் கூடிவிட்டது. காரணம். நாம் முன்பு சொல்லிய வித்வான் அமுதமழை பொழிவது போல் சங்கீதத்தை கானமழையாய் வர்ஷிப்பதேயாகும்.

அச்சமயம் சாமிநாதனுக்குத் தெரிந்த ஒருவர் அங்கு வந்து அந்த சங்கிதத்தின் வசீகரத்தில் மெய் மறந்தவராய் வீதியிலேயே நின்று கேட்ட பின்னர் ஸாமிநாதனைப் பார்த்து "ஸாமிநாதா! நீ மகா பாக்ய சாலியப்பா! சதா இந்த அமுத ப்ரவாகத்தில் மிதக்கும் சந்தர்ப்பம் உண்டாகியிருக்கிறது. நானும் உன்னைப்போல் இந்த வீதியிலாவது இருந்தால்கூட இந்த அத்புத கானத்தை சதா பருகிக்கொண்டே இருப்பேன். நேற்று மாலை இதே மனிதன் பொருள்காக்ஷியில் பாடினன். அடாடா! என்னவென்றுதான் அந்த இனிமையை வர்ணிப்பது? கூட்டமோ எள்ளுபோட்டால் விழாது. அத்தனை ப்ரம்மாண்ட பந்தலே நிரம்பிவிட்டது. ஐயோ பாவம்! இத்தனை அபூர்வ ஜீவகளையுடன் பாடும் இந்த மனிதனுக்கு முக்யமானது நேத்திரமில்லையாம். கையைப் பிடித்துவந்து உட்காரச் செய்தார்கள். கையைப்பிடித்து அழைத்துச் செல்கிருர்கள். அந்த கண்ராவியைப் பார்க்கும்போது சகிக்கவே இல்லை...ஏம்பா! நீயும் நேற்று வந்திருந்தாயல்லவா?"...என்ருர்.

ஸாமி :—ஆமாம்! போங்களேன் ...குருடனும் செவிடனும் பாடுவதாம். கண் காக்ஷியாம்: மூக்குக் காக்ஷியாம். இதெல்லாம் எனக்குப் பிடிக்கவே பிடிக்காது. நிஜமாகச் சொல்கிறேன். ஒரு மாதகாலமாயிற்று; இந்த வீட்டில் நடக்கும் ரோதனையைச் சொல்லி முடியாது. எனக்கு மிக்கத் தலை வேதனையாகவே இருக்கிறது.' பொழுது போக்கற்ற அம்பட்டன் பெண்டாட்டித்தலையைச் சிறைத்தானும்' என்று ஒரு பழமொழி சொல்வதுண்டு. அதுபோல ஒரு சிலர் ஏதோ கூத்தடிக்கிருர்கள். இந்த அல்ப சமாச்சாரங்களெல்லாம் எனக்குப் பிடிக்கவே பிடிக்காது என்பதை நீங்கள் அறியமாட்டீர்களா என்ன?" என்று ஆவேசத்துடன்கூறிமுடிப்பதற்குள் இவனது பாலிய சினேகிதர்களாகிய கோபுவும் சாமாவும் அங்குவந்து "ஏண்டா! நீ பழய குடுக்கையாக இல்லாமல் புதிய உலகத்தில் திருந்திவிட்டதாகவல்லவோ எண்ணினேம். இன்னுமா அப்படியே இருக்கிருய்! பேஷ்!"

என்றதைக் கேட்டு ஸாமி, "எதைக் கண்டு என்னை அம்மாதிரி நினைத்துவிட்டீர்கள்? சால்வை பரிசு கிடைத்ததற்காகவா?" என்று படபடத்துக் கேட்டான்.

இதைக்கேட்ட கோபு "அட..சால்வைப் பரிசைப் பற்றி அப்படி நினைக்க என்ன இருக்கிறது? பொருள் காக்ஷியில் உன்னுடைய தங்கை அகிலாபாயின் அத்புதமான கைத்திறமைப் பாடமைந்த வேலைகள் ப்ரகாசிக்கின்றதே அதைக் கண்டுதானப்பா சந்தோஷப் படுகிறோம். இன்னும் கேட்டால் உன் மனைவி ஸ்ரீமதி. ஸரஸா ஸாமிநாதன் அவர்கள் கையினல் பின்னிய சில

பிரம்புச் சாமான்கள் அதி அத்புத மாகவிருக்கின்றன. அகிலாபாயின் குஷன் வேலைக்கு சங்கத்தார் மெச்சி பதக்கம் பரிசுகூட கொடுத்திருப்ப தாக அங்கு சீட்டு எழுதியிருக்கிறதே நீ பார்க்காததுபோல் பேசுகிறாயே இதுவும் ஒரு வேடிக்கையா ?''

ஸாமிநாதனின் கண்களும் முக மும் சிவந்தன. பல்லைக் கடித்தவாறு ''என்னடா குடிகாரன்போல் உளறு கிறீர்கள்? எந்த மூதேவிகளின் பெய ரையோ பார்த்து என் சகோதரி, என் மனைவி என்று சொல்கிறீர்களா! அம்மாதிரி பயித்தியக்கார உலகத் தில் உலாவும்படியாக மூளை கெட்டு விடவில்லை. ஒரே பெயர் உலகத்தில் எத்தனையோ பெயர்களுக்கு இருக் கும். உளறுதே,' என்றுகர்ஜித்தான்.

அந்த சினேகிதர்கள் சிரித்தவாறு '' ஏண்டா! ஏதோ குடி முழுகிவிட் டதுபோல் ஆடுகிறாயே! இதில் என்ன குற்றம் என்று இப்படி துள்ளிக் குதிக்கிறாய்? ஏதோ துர திருஷ்டப் பிண்டமாய்ப் பிறந்துள்ள அகிலாவுக்கு இம்மாதிரியான நல்ல பொழுதுபோக்கை யளித்ததற்கு ஊரே சந்தோஷப்படுவதை உன்னி டம் நாங்களும் ஆனந்தத்தினால் தெரி விக்கத்தான் வந்தோமேயன்றி உன் னைக் கேலிசெய்ய வரவில்லை.

ஒரே பெயர் உலகத்தில் எத்த னையோ பேர்களுக்கு உண்டு; அதை நான் இல்லை என்று சொல்லவில்லை. என் தங்கைக்குக் கூட அகிலாபாய் என்று தான் பெயர் வைத்திருக்கி றேன். உன்னைப் போலவே நானும் சந்தேகித்துத்தான் அந்த கமிட்டி யாரை விசாரித்து உன் மனைவியும் உன் சகோதரியுந்தான் என்றதை நன்றாக அறிந்துகொண்டுதான் இங்கு வந்தேன்.''

என்று கூறி முடிப்பதற்குள் உத் திரியத்தை இழுத்து வரிந்து கட்டிக் கொண்டு, '' அடேய்! இதுகண்ட நிஜமாகவிருந்தால் பிச்சிப் பிச்சி எறிந்துவிடுகிறேன். என் கண்ணால் பார்த்துவிட்டு வந்த பிறகு இதன் விபரீதம் எவ்வளவுதூரம் போகிற தென்பதைப் பார்த்துவிடுகிறேன். இது பொய்யாகவிருந்தால் உங்களை ஹதம் செய்துவிடுவேன்'' என்று கூறியவாறு கண்ணுமண்ணு தெரி யாமல் கண்காக்ஷிசாலைக்கு ஓடினான்.

இவனுடைய பதட்டத்தையும் மூர்க்க ஆவேசத்தையும் பார்த்து அந்த இருவரும் நடுநடுங்கினார்கள். ''அதனால் என்ன விபரீதம் விளை யுமோ! அந்த பேதைப் பெண்ணின் கதி என்னவாகுமோ!'' என்கிற பயத்துடன் சென்றார்கள். இந்த கோபத்தின் முடிவு எவ்வளவு தூரத்திற்குக் கொண்டுவிடுமோ யார் கண்டது?

## 13

கண்காக்ஷிச் சாலையில் டிக்கட்டு கூட வாங்க முடியாது அத்தனை கும் பல் நெருக்குகிறது. ஸாமிநாதன் முட்டியடித்து டிக்கட்டு வாங்கிக் கொண்டு உள்ளே வந்தான். கேட் டில் அமராபாயே டிக்கெட் பரிசோ தித்துக்கொண்டு நிற்பதைப் பார்த்த தும் அவன் கோபம் பன்மடங்காகப் பெருகியது. அவளிடம் டிக்கட்டைக் காட்டவும் அவனையறியாத வெறுப் பும் கோபமும் உண்டாகியது. கார ணம் அவளால்தான் தன் தங்கை யும் மனைவியும் இம்மாதிரி காரியம் செய்வதற்குத் துணிந்திருப்பார்கள். இது நிஜமாயிருந்தால்?... என்று நினைத்து வெதும்பினான்.

அமராபாய் கூட்டத்தில் முதலில் இவனை கவனிக்கவே இல்லை. அவ ளிடம் டிக்கட்டைத் தரும்போது தற் செயலாகப் பார்த்தாள். அவளுக்கே ஆச்சரியமாகிவிட்டது. ''இவன் கூட

இந்த இடத்திற்கு வந்துவிட்டானே! இனி அகிலாபாயின் கஷ்டம் விடிந்து விடும்'' என்று சந்தோஷப்பட்டாள். எனினும் அவன் முகத்தில் எவ்வித மான சந்தோஷமோ; ஆனந்தமோ இல்லாது கடுமையான கோபம் ஜ்வலிப்பதைக் கண்டதும் சற்று அச்சமடைந்தாள்.

ஸாமிநாதன் தட தடவென்று உள்ளே நுழைந்துவிட்டான். ஒவ்வொரு இடமாகப்பார்த்துக்கொண்டு வருகையில் சில ஆண்பிள்ளைகள் ஒரு இடத்தில் நின்று சில சாமான் களைக் குறித்துக்காட்டி அதைப் பற்றி மிகவும் ச்லாகித்துப் பேசு வதைக் கேட்டு உள்ளுக்குள் பற்றி எரிய அப்படியே நின்றான்.

அக்கும்பலில் நின்ற ஒரு பெண் மணி அந்த ஆடவரில் ஒருவன் தோளைப்பிடித்து ஆட்டி "நம்ப அமராபாய் இருக்கிறளே! அவளு டைய சினேகிதைதான் இந்த அகி லாபாய் என்பவள். அமராவிடம் சொல்லி அவளை நம்ப வீட்டிற்கு அழைத்துவரச் சொல்கிறேன். அவள் என்னவோ வாழாவெட்டி தான். சள்ளைகிடையாது. நம் லில்லி கல்யாணத்திற்கு இதுபோன்ற வேலைகளை நிறையசெய்து தரும்படி ஏற்பாடு செய்யலாம். அந்த பிரம்பு பெட்டியின் அழகேபோதும் அதற்கு விலை 25 ரூபாய்தான் போட்டிருக் கிறது. அதையும் யாரோ வாங்கி விட்டார்கள்.

மேல்படி சம்பாஷணை ஒன்றே கோபாக்கினியைக் கிளறி எண் ணெயை ஊற்றியதுபோலாயிற்று. கண்கள் சிவக்க அந்த ஸ்டாலுக்குள் நுழைந்தான். 'கழுதைக்குத் தெரி யுமோ கற்பூர வாஸனை?' என்பது போல் இந்த அபூர்வ வேலைப்பாடு களின் மகிமை அந்த மூர்க்கனுக்கு எப்படித் தெரியும்?

தன் மனைவியின் பெயருடன் தன்பெயரையும் சேர்த்திருப்பதைக் காண அவனல் பொறுக்க முடியாத கோபமும் ஆத்திரமும் உண்டாகி யது. கண்களில் தீப்பறக்க மற்ற இடங்களையும் சுற்றிப் பார்த்தான்.

அகிலாபாய் தைத்தது, பின்னி யது, போட்டது என்று பலவிதமான கை வேலைகளைக்கண்டதும் அதற்கு மேல் அங்கு நிற்கமுடியாமல் நேரே வீட்டிற்கு வந்தான். அவனுடைய கோபத்திற்கு அனுகூலமாய் அதை ஊர்ஜிதப்படுத்துவதுபோல் அகிலா ஒருவிதமான மரப் பலகையில்(Plywood) அத்புதமான பெட்டியொன் றைச் செய்துகொண்டிருந்தாள்.

ஒரு நாளும் சமயல் அறைக்குச் சாப்பாட்டு சமயம்தவிர வந்தறியாத சாமிநாதன் தடதடவென்று வந்து அகிலாவின் பின்புறமாக அவள் முதுகில் காலால் ஒரு உதைவிட்ட படியே தலை மயிரை கெட்டியாகப் பிடித்து இழுத்து நிறுத்தி கண்மூடித் தனமாக தாறுமாருய் அடித்தவாறு "கழுதை! வாழாவெட்டிப் பிணமே! நீ கெட்டதுமின்றி ஸபாவையும் கெடுத்துக் குட்டிச்சுவரடித்து என் மானத்தை வாங்க எத்தனைநாளாக நீ துணிந்து கங்கணங்கட்டிக்கொண் டிருந்தாய்? நீ கெட்ட கேட்டிற்கு நீலப் பட்டாடையாம் என்பதுபோல் உன்னழகிற்கு எக்ஸிபிஷன் வேறே யா! பதக்கமும் பரிசும் வேறேயா! அடுத்த வீட்டு அறுதலி மகளாலல் லவா உங்களுக்கு இத்தனை தைரிய மும் மானங்கெட்டத் தனமும் உண் டாயிற்று. உங்களை அடக்குவாரற் றுப் போய்விட்டதென்று கட்டை துளிர்த்துவிட்டதா! எந்த குண்டு தைரியத்தினல் இந்த காரியம் எனக் குப் பிடிக்காததை எனக்குத் தெரி யாமல் செய்திருக்கிறுய்?''

என்று வாயில் வந்தபடியெல்

லாம் திட்டியடித்துக் கொல்வதைக் கண்டு நெருப்பிடைப் புழுவெனத் துடிக்கும் அகிலாபாயிச்கு உண்மையில் விஷயமே தெரியாது. தன் சினேகிதையின் நன்மைக்காகவும் அவளுக்கோர் நல்ல பெயரும் பிழைக்கவழியும் தேடித் தருவதற்காகவும் அமராபாயே அகிலாபாயின் வேலைகளை வாங்கிக் கண்காட்சியில் வைத்தாளேயன்றி அது அவளுக்குத் தெரியாது. நல்லதை நினைத்துச் செய்யப்புகுந்த வேலை விபரீதத்தில் கொண்டுவிடும் என்று யாரறியக் கூடும்?

அன்று நாடகம் பார்ப்பதற்காகப் பயந்து நடுங்கியபோது காப்பாற்றி ஆதரித்த கடவுள் இப்போது தடாரென்று ஒரு காரணமின்றி இப்படிச் சோதிப்பதை எண்ணி கதிகலங்கினள். "ஐயோ! எனக்கொன்றுமே தெரியாதே! அண்ணா! கடவுள்மீது ஆணையாக எனக்கு ஒரு பாசமும் தெரியாது. வீணாக என்னைக் கொல்லாதே" என்று வலியின் பாதை தாளாமல் கதறினள்.

ஸாமிநாதனின் கோபம் உச்சத்தை எட்டியது. "என்ன! என்ன சொன்னாய்! நான் உன்னைக் கொல்கிறேனா! நீ என்னைக் கொல்வதற்கொப்ப வேலை செய்தாயா! இவ்வளவு தைரியமும் இத்தனை அகம்பாவமும் வந்துவிட்டதா! நம் பெற்றோரின் ஆசார சீலமென்ன! நீ செய்துள்ள வேலை என்ன! இன்று இதற்குத் துணிந்த நீ நாளை எவனையாவது இழுத்துக்கொண்டு ஓடவும் அஞ்சமாட்டாய்! அஹ்ஹா... உன் திமிரை இதோ ஒருநொடியில் அடக்குகிற வழியில் அடக்குகிறேன் பாரு... எந்த கை அத்தகைய துணிபுடன் செய்ததோ, அந்த கை எங்கே! எங்கே அந்த கை?

என்று முரட்டுத்தனமாக அகிலாவின் வலது கையைப் பிடித்து இழுத்து விரல்களை நன்றாக முறுக்கி நசுக்கும்போது அகிலாபாய் நோய் தாளாமல் அலறிக்கொண்டே துடிதுடித்தவாறு வெட்டிச்சாய்த்த மரம் போல் கீழே விழுந்தாள். உடன் பிறந்த பாசத்தையும் விரட்டியடித்துக் கொண்டு மூர்க்கத்தனமும் சண்டாள புத்தியுந்தான் மேல்நோக்கின.

கீழே தள்ளப்பட்ட அகிலாவுக்கு உயிர் இருக்கிறதா! இல்லையா! என்பதைக்கூட அந்தமூர்க்கன் கவனிக்காது தலைமீது மலை புரண்டுவிட்டது போன்ற நிலைமையை அடைந்து வீதித் திண்ணையில் உட்கார்ந்தான்.

அதே சமயம், "ஸார்! தந்தி! தந்தி!" என்று தந்திச் சேவகன் ஒரு தந்தியைக் கொடுத்தான். அதிகாரத்துடனேயே அதை வாங்கி தனது அரைகுறை இங்கிலீஷ்ஞானத்தில் படித்தான். "இன்று காலையில் ஆண் குழந்தை பிறந்தது, தாயும் குழந்தையும் க்ஷேமம்" என்ற விஷயமே இருந்தது கண்டு அளவற்ற சந்தோஷத்தை அடைவதற்குப் பதிலாக, "பாவி... சண்டாளி! என் பெயரைக் கெடுத்துக் குட்டிச்சுவரடித்து என் மானத்தை வாங்கிய பிறகு அந்த படுநீலிக்கும் எனக்கும் இனி சம்பந்தம் வேறு! எந்த சனியன் பிறந்தால் எனக்கென்ன!" என்று தனக்குள் முணுமுணுத்துக் கொண்டு தந்தியை வீசி எறிந்தான்.

சில தந்திச் சேவகர்கள் எப்போதுமே தந்தியைக் கொடுத்து விட்டு உடனே போகமாட்டார்கள். சந்தோஷச் செய்தியை அறிவிக்கும் தந்தியாயின் வெகு சுலபமாக அவர்களுக்கு ஒத்தை ரூபாய் பில்லையாகக் கிடைக்கும். வேறுவிதமான தந்தியாயின் ஓசைப்படாமல் போய் விடுவார்கள். அதேபோல் இங்கும் சேவகன் சற்று நின்று பார்த்தான்.

சாமிநாதனின் செய்கையாலும் முகத்தோற்றத்தாலும் தந்தி ஏதோ விகல்பமானதாக இருக்குமோ! அதான் இப்படி மாறிவிட்டான்! என்று எண்ணியவாறு மெல்ல நழுவிவிட்டான். சாமிநாதன் ஆசாரப் பித்தனுயிற்றே! பிள்ளைக் குழந்தை பிறந்தது என்றதைக் கேட்ட உடனே குளத்திற்குச் சென்று தபீரென்று குதித்து ஸ்நானம் செய்தால் பித்ருக்களுக்கு இந்த நீர்த்துளிகள் மேலே விழுந்து புத் என்னும் நகரத்தினின்றும் அவர்களைக் கரைசேர்த்துப் பேரானந்த்தை அளிக்கும் என்பது சாஸ்திரம். சாஸ்திரத்தின்படி நடப்பவர்கள்தான் அரிது. நடந்தாலும் அது கவுரவக் குறைவு என்றும் இளைப்பமென்றும் சிலருடைய நினைப்பு. ஏன்! சிலர் பரிகாஸமே செய்கிறுர்கள். சாமிநாதன் அந்த கோஷ்டியில் சேர்ந்தவனல்லவே! அதனுல் அவன் இருதலைக்கொள்ளி எறும்பெனத் துடித்தான்.

தன் தகப்பனுரும் பாட்டனுரும் புத்தென்கிற நரகத்தில் தவிக்காமல் அவர்களைக் கரை சேர்க்கும் பொருட்டுத் தான் ஸ்நானம் செய்து தான் ஆகவேண்டும் என்று தோன்றியதால் ஆற்றுக்குச் சென்று சாஸ்திரப்படி நன்ருக அளைந்துக் குளித்துவிட்டு அங்கேயே துணியை உலர்த்திக் கட்டிக்கொண்டான். குழந்தையின் க்ஷேமத்தைக் கோரவும் மனைவியின் சுகத்தைப்ரார்த்திக்கவும்அந்த மூர்க்கஇதயத்தில் தோன்றவே இல்லை.

சொல்லத் தகாத அவமானமும், தாங்கமுடியாத இழிவும் தனக்குத் தன் மனைவியும் சகோதரியும் தேடி வைத்துவிட்டதாக ஓர் எண்ணம் இதயத்தில் ஊன்றிவிட்டதால் அவன் நெஞ்சம் பதறுகிறது. லேசாக புத்திர வாத்ஸல்யமும் எட்டிப் பார்க்கலாமா! வேண்டாமா! என்கிற நிலைமையிலிருப்பதை அடியோடு கிள்ளி எறியவே துணிந்தான்.

மனைவியைத் தன் சத்ரு என்று நினைத்தானேயன்றி தனது சுகத்திற்கும் துக்கத்திற்கும் சக தர்மிணி என்று நினைக்கவே இல்லை. "அவளை இனி நான் கண்ணுலும் பார்க்கப் போவதில்லை. எனக்கு அவள் செய்த த்ரோகத்திற்கு நன்ருக அனுபவித்து அவளும் வாழாவெட்டியாய்க் காலத்தைத் தள்ளட்டும். அகிலாவைப்போலவே அவளும் அழுது சாகட்டும். எனக்கு அவள் செய்த த்ரோகத்திற்கு இதுதான் சரியான தண்டனை. நான் இந்தத் தந்திக்குப் பதில்கூட போடப்போவதில்லை. ஒரு பொம்மண்டாட்டிக்கு இத்தனை துணிச்சலும் தைரியமூம் என்ருல் ஆண்சிங்கமாகிய எனக்கு கேட்கவேண்டுமா!" என்று தனக்குள்ளேயேதான் முடிவு கட்டிக் கொண்டு பயித்தியம்போல் உட்கார்ந்திருந்தான்.

இத்தகைய மூர்க்க குணமுடைய பிசாசு ஜென்மங்களைத் திருத்தி நல்வழிப் படுத்துவதற்குப் பெரியவர்கள் யார் இருக்கிறுர்கள். தனக்கா தெரியவில்லை என்ருல் பிறரையாவது கேட்டறியவேண்டும். இரண்டுங்கெட்டான் சுபாவமுடையவர்களிடம் யார் என்னசெய்வது?

## 14

தாறுமாறுமாக அடித்துத் தள்ளப்பட்ட அகிலா சில நிமிஷங்கள் நினைவே இல்லாமல் கிடந்தாள். பூமாதேவியின் ஆதரவைத் தவிர வேறு திக்கில்லாத அம் மடந்தையை ஆற்றுவாரேது? தேற்றுவாரேது? சற்று நேரம் கழித்துத் தானகவே எழுந்து உட்கார்ந்தாள். அவளது கைவிரல்கள் கோணு

மாணலாய் வளைந்து பொறுக்க முடியாத வலி உண்டாகி அபாரமான இம்சையைக் கொடுத்ததால் அவளையும் மீறி துக்கம் பீறிக்கொண்டு வந்துவிட்டது.

கோ வெனத் தனக்குத்தானே கதறினாள். கண்ணைத்துடைக்கவோ, முகத்தைத் துடைக்கவோ கை விரல்கள் ஸ்வாதீனமற்று அசைக்கவே முடியாது வீங்கிவிட்டதைக் கண்டதும அவள் இதயமேவெடித்து விடும்போலாகிவிட்டது.

"நான் என்ன விருந்தாலும் அடிமைதானே! அண்ணனுக்கு விருப்பமில்லாத காரியங்களை நாம் செய்வது பெருங் குற்றமென்பதையறிந்தும் செய்தது கொடிய பாதகந்தானே! அதற்குச் சரியான தண்டனை இதுதான். வேண்டும். நன்ருக வேண்டும்... அகிலா! வாழாவெட்டி என்கிற பட்டப் பெயருடன் நொண்டி முடம் என்கிற பெயரும் சேரட்டும். நீ செய்த அளவற்ற பாவத்தை வெல்ல உன்னால் முடியுமா! உனக்குச் சரியான சிக்ஷை இதுதான்...

உம்... எனக்கு ஏதோ நல்ல எண்ணத்துடன் நன்மை செய்வதாகக் கருதி அமராபாய் நான் அறியாமலேயே அந்த கைவேலைகளை அங்கு வைத்ததன் பலன் இப்படியா முடிந்தது. உம். இம்மட்டுடன் இந்த அத்யாயம் முடிந்துவிட்டதாகத் தோன்றவில்லை. இன்னும் எத்தகைய ஆபத்துக்கள் இருக்கின்றதோ யார் கண்டது?"...

என்று தனக்குள் எண்ணிப் புலம்பியபடியே எழுந்திருக்க முடியாமல் எழுந்து மெல்ல வெளியே வந்தாள். தன் அண்ணனின் கோபம் தெளிந்ததா இல்லையா என்ற திகிலுடன் வீதியை எட்டிப் பார்த்தான். அண்ணனைக் காணவில்லை. வீடு பூராவும் பார்த்தாள் அண்ணனைக் காணவில்லை. அவன் மகா கொடிய மூர்க்கனென்பதை அவளறிந்திருப்பதால் இந்த அல்ப விஷயத்தை ஓர் பெரிய அவமானமாகக் கருதி எங்கேனும் சென்றுவிட்டானே! அன்றி வேறு ஏதாவது விபத்தை விளைவித்துவிடுவானே! தன்னொரு பாப ஆத்மாவின் பொருட்டுத் தன் மன்னிக்கு ஏதாவது துன்பம் வந்துவிடப்போகிறதே கடவுளே! என் அண்ணனுக்கு நல்ல புத்தியைக் கொடுத்து ரக்ஷிக்க மாட்டாயா!' என்று வேண்டியபடியே கூடத்திற்கு வந்தாள்.

ஸாமிநாதன் வீசி எறிந்த தந்தி அங்கு கிடப்பதைக் கண்டதும "ஐயோ! தந்திபோலிருக்கிறதே... என்ன செய்தி வந்ததோ தெரியவில்லையே! ஆண்டவனே! நல்ல விஷயமாக விருக்கவேண்டுமே!" என்ற ஆவலுடன் தந்தியைப் பிரித்துப் பார்த்தாள்.

அமராபாயிடம் அவள் ஆர்வத்துடன் கல்வி பயின்றதன் முதற்பலனை இப்போது கண்டாள். மெல்லத் தட்டித் தடுமாறிப் படித்து ஒருவாறு விஷயத்தை அனுபவ ஞானத்தைக்கொண்டு யூகித் தறிந்ததும் "அடாடா! இதுகாறும் அவள் நெஞ்சையழுத்தி வதைத்த ஒரு வேதனையும் துன்பமும் சற்று நீங்கி உடனே அவளது இதயமும் முகமும் அன்றுமலர்ந்த இதழ்போல் மலர்ந்து பூரித்தது.

"பிள்ளைக் குழந்தையா!...... அடாடா! என்ன சந்தோஷச்செய்தி! அண்ணா இதைப்படித்துமா நம்மிடம் சொல்லாமல் போய்விட்டான்?... போனால் போகட்டும். அவனுக்கிருந்த மகத்தான கோபத்தினால் சொல்லவில்லை. அதனால் எனக்கென்ன குறைந்துவிட்டது. என்

தந்தையின் வம்சம் விளங்க ஓர் ரத்தினம் பிறந்துவிட்டான். இந்த சந்தோஷத்தை நேரில் கண்டு அனுபவிக்க என் தாய் தந்தையர்தான் பாக்யம் செய்யவில்லை. அவனால் தானே வம்சம் விளங்கவேண்டும்'' என்றெல்லாம் தானே எண்ணமிட்ட வண்ணம் மெல்ல எழுந்தாள்.

கால் நடக்கமுடியவில்லை. கையை அசைக்க முடியவில்லை. வீக்கத்தைப் பார்த்துக் கபீரென்று நடுங்கினுள் இருப்பினும் அவைகளை லக்ஷ்யம் செய்யாமல் குழந்தை பிறந்ததற்காக வாசலில் ஜலம் தெளித்துக் கோல மிடுவதற்கு ஜலம் எடுக்கமுடியாது கை வலி அதிகமாகப் பாதித்தது. இடது கையினுலேயே ஜலத்தைத் தெளித்துக் கோலமிட்டாள்.

செய்யமுடியாது செய்ததால் தலை சுற்றித் தள்ளியது. அதையும் சமாளித்துக்கொண்டு உள்ளே இருந்த கற்கண்டை எடுத்து ஸ்வாமிக்கு நிவேதனம் செய்துப் பின் "சர்வ லோக ரக்ஷகா! இந்த கல் கண்டு இனிப்பதுபோல் அக்குழந்தையின் வாழ்க்கை இனிக்கவேண்டும். இது கரைவதுபோல் அவனுடைய துன்பங்கள் கரைந்துவிடவேண்டும். தாயும் குழந்தையும் க்ஷேமமாக விருக்கவேண்டும்'' என்று வேண்டிக்கொண்டு ஒரு கல்கண்டு துண்டத்தை எடுத்து வாயில் போட்டுக் கொண்டாள். மற்றொரு பொட்டளம் கட்டி அதை அமராபாயின் தாயாரிடம் கொடுத்து "மாமீ! ஸரஸாவுக்குப் பிள்ளை பிறந்தது. இப்போது தந்தி வந்தது. இந்தாருங்கள் கற்கண்டு'' என்று கூறித் தனது முகவாட்டத்தையே காட்டாமல் கையை மறைத்துக்கொண்டே திரும்பிவிட்டாள்.

அமராபாயின் தாயார் ஸந்தோஷம் விசாரிப்பதற்குள் அகிலாபாய் வீட்டிற்குப் போய்விட்டதால் ஏதோ முக்ய அலுவல் இருக்கும் என்று எண்ணிப் பேசாதிருந்தாள். அகிலா வீட்டிற்கு வந்ததும் தன் அண்ணனின் வரவையே ஆவலுடன் எதிர் பார்த்துக்கொண்டிருந்தாள்.

அவள் இதயத்தில் ஒருவிதமான புயல்அடிக்காமல்பலவிதமான புயல்களடித்துக் கொண்டிருப்பதை அந்த சர்வேச்வரன்தான் அறிவான். இந்த கோபத்தால் ஸாமிநாதன் எங்கேனும் ஓடிவிட்டானே! அல்லது கிணற்றில் குளத்தில் முட்டாள்தனமும் முரட்டுக்குணமும் கூடி விழுந்து விட்டானே! அவன் திரும்பி நல்ல படி வரவேண்டுமே...வந்தால் நம்மிடம் பேசுவானே!'' என்று ஏதோ எண்ணமிட்டவாறு அலைகிருள்,

கைவிரல்களின் பாதை சற்றும் சகிக்கக்கூடாமல் தத்தளிக்கச் செய்வதால் நேரம் ஆக ஆக கையை அசைக்கவே முடியவில்லை. ஒரு சிறிய கரண்டியைக்கூட எடுக்க முடியாத நிலைமை உண்டாகியதும் அவள்மனது தாமரையிலை நீர்த்துளி போல் தவித்ததால் அந்த வேதனையே அவளுக்கு மிகுந்த பயங்கரத்தையும் திகிலையும் உண்டாக்கியது.

பொழுது ஏறஏற அவள் வேதனையும் பயமும் அதிகரித்தன, வாசலுக்கும் உள்ளுக்கும் நடக்கக்கூட முடியாமல் தவித்தவாறு பகவானை வேண்டும் சமயம் ஸாமிநாதன் வாசலில் வருவதைக்கண்டாள். அபாடா! என்று ஒரு பெரிய பாரம் நெஞ்சை விட்டு இறங்கியதுபோல் ஒரு சாந்தியும் சந்தோஷமும் உண்டாகியது.

தமயனின் மூர்க்க சுபாவத்தை ஆதிமுதல் அறிந்தவளாதலால் அவனுடைய செய்கைக்கு வருந்தி தானும் பிடிவாதம் பிடிக்க மனம் வரவில்லை. அடித்தாலும் அணைத்தாலும் அண்ணனைத் தவிர திக்கில்

லாததால் அவனிடம் தான் த்வேஷித்துக் கொள்ளக் கூடாதென்றே அவள் மனது நினைத்தது. மேலும், இந்தசிறிய கோபத்தைத்தணிக்கவே குழந்தை பிறந்த சந்தோஷச் செய்தி வந்திருப்பதால் அந்த சந்தோஷத்தில் சகலத்தையும் மறந்துவிடவேண்டுமென்று எண்ணி தன் கையை மறைத்துக்கொண்டு வாசலுக்கு ஓடி வந்து "அண்ணா ! எனக்கு மருமான் பிறந்த சந்தோஷத்தைக்கூட சொல்லாது போய்விட்டாயே ! இந்தா கல்கண்டு" என்று தனது இடது கையினால் கல்கண்டை நீட்டினாள்.

ஸாமிநாதன் வீட்டிற்கு வரும்போது வாசலில் கோலம் புதிதாக விருந்ததைக் கண்டு சற்று வியப்புடன் திண்ணையில் உட்கார்ந்ததும் அகிலா வந்து கேட்டதானது அவனைத் திடுக்கிடச் செய்தது. "நாம் சொல்லாது சென்ற விஷயம் இவளுக்கு எப்படி தெரிந்திருக்கும்? யாராவது ஆள் நேரில் வந்திருப்பார்களா !" என்று வியந்தவாறு... கல்கண்டை வாங்காது முறைத்துப் பார்த்தபடியே "உனக்கு யார் சொல்லியது?" என்று கடுமையான த்வனியில் கேட்டான்.

அகிலா சற்றும் யோசனை செய்யாமல் "ஏன் அண்ணா ! தந்திதான் சொல்லியது" என்று சடக்கென்று கூறினாள்......"என்ன ! என்ன ! தந்தி சொல்லியதா ! தந்தி ஆங்கிலமல்லவா !"......என்று சுடச் சுட கேட்டபோது தான் அவளுக்குத் தனது தவறு புரிந்தது. அவனுக்குள்ள ஆத்திரத்தில்தான் இப்போது ஆங்கிலம் நன்றாகக் கற்றிருப்பதை அறிந்தால் இன்னும் ஆத்திரம் அதிகரிக்குமென்பதை அறிந்து சடக்கெனத் தனது முக வேறுபாட்டை மாற்றிக்கொண்டு "ஆம் ! ஆங்கிலந்தான். அமராபாயின் தாயார் படித்துச் சொன்னார்கள்." என்று கூறி ஒருவாறு சமாளித்துக்கொண்டாள்.

சாமிநாதன் கற்கண்டை வாங்கவே இல்லை. எனினும் அவனையறியாது அவன் கண்கள் அகிலாபாயின் கன்னங்களையும் கையையும் கவனித்தன. என்னே விபரீதம்! கன்னங்களில் தனது 5 விரல்களின் வடுக்கள் அப்படியே முத்திரை போட்டதுபோல் பதிந்து ப்ரகாசிப்பதையும் வலது கை, மணிக்கட்டிலிருந்து அப்பம்போல் வீங்கியிருப்பதையும் பார்த்து அசைந்துகொடுக்காத மலைபோன்ற அவன் மனமும் சற்று அசைந்து கொடுத்ததுபோல் துணுக்குற்றது.

---


**வை. மு. கோ.**

எழுதிய 3 நாவல்கள்

## புதிய பதிப்புகள்

62-வது நாவல்

**பிரார்த்தனை ரூ. 1**

(Calcutta glazed)

46-வது நாவல் 3-ம் பதிப்பு

**வத்ஸகுமார் ரூ. 1**

(Mysore white)

11-வது நாவல் 5-ம் பதிப்பு

**வீரவஸந்தா ரூ. 1**

(Punalur unbleached)

# கட்டுரைப் போட்டி

புது எழுத்தாளிகளின் திறமையை ப்ரகாசிக்கச் செய்வதற்கென்றே ஏற்படுத்திய இந்த அம்சம் பெரிதும் திருப்தியளித்து வருகிறது. சென்ற இதழில் குறிப்பிட்ட "பணத்தினால் பெறமுடியாதவை எவை?" என்ற விஷயத்தைக் குறித்துப் பல சகோதரிகள் அருமையாய் எழுதியுள்ளார்கள். ஸ்ரீமதிகள் எஸ். ஜெயலக்ஷ்மி, தி. கு. மல்லிகைசுந்தரம் ஆகிய இருவருடைய கட்டுரைகளைப் பிரசுரித்திருக்கிறோம். ஸ்ரீமதி. பி. எஸ். அலமேலு எழுதியுள்ள அரிய வியாசம் நந்தவனத்தை அலங்கரிக்கின்றது. ஸ்ரீமதிகள் ஆர். புண்ணியவதி, வி. ரங்கநாயகி, என். வி. மீனாக்ஷி முதலியவர்களும் குறிப்பிடத்தக்க முறையில் எழுதியிருக்கிறார்கள். இனி எல்லோருமே நன்றாக எழுதி எதைத் தேர்ந்தெடுப்பது என்ற நிலைமையை உண்டுபண்ணி மகிழ்வியுங்கள்! உள்ளே மழுங்கிக்கிடக்கும் அறிவு வெளிவந்து பிரகாசிக்கட்டும். அடுத்த கட்டுரைப் போட்டிக்கு அளிக்கப்பட்டுள்ள விஷயம்:

## "சங்கீதத்தின் வசிய சக்தி."

அரசன் முதல் ஆண்டிவரை, பசு முதல் பாம்புவரை சகல ஜீவராசிகளையும் வசீகரிக்கும் சங்கீதத்தின் அபார சக்தியைக் குறித்து தங்கள் தங்கள் அபிப்பிராயங்களை அழகாக எழுதியனுப்புங்கள். —ஆசிரியை.

## உதயசூரியன்

மோகினி அன்பர்களால் வெகு ஆவலுடன் இந்நவினம் எதிர்பார்க்கப்படுகிறதென்பது தினந்தோறும் வரும் ஆர்டர்களினின்று நன்கு விளங்குகிறது. பெரும்பாலும் அச்சாகிவிட்டது. இன்னும் சில அத்தியாயங்களும், கலர்ப்படங்களுமே பாக்கி: கூடிய சீக்கிரத்திலேயே தயாராகுமென எதிர்பார்க்கிறோம்.

ஏற்கெனவே ஆர்டர் அனுப்பாத அன்பர்கள் உடனே ஆர்டர் செய்யவும். ஏனெனில், காகிதச் சிக்கனத்தை உத்தேசித்து மிகவும் திட்டமாக அச்சிடுகிறோம்.

சுமார் 24 படங்களுடன் கிளேஸ் பதிப்பு, ரூ. 1-

## அமுதமொழி

மூன்று பதிப்புகள் ஒரே சமயத்தில் தயாராகின்றன. இம்மாத முடிவுக்குள் வெளிவரும். இதுவரை கையாளாத ஒரு புதிய முறையை ஆசிரியை கையாண்டிருக்கிறார். இது நேயர்களுக்குப் பெரும் விருந்தளிக்குமென்பது திண்ணம்.

தமிழ்ப்புத்தக உலகில் ஒரே சமயத்தில் ஒரு நவீனத்தின்மூன்று பதிப்புகள் வெளியிடுவது இதுவே முதல்தரம். தவிர. இந்த 65-வது நாவலில்தான் வழக்கத்தை விட அதிகமான படங்கள்-20 முழுபக்கப்படங்கள்-வெளியிடப்பட்டிருக்கின்றன.

உங்கள் பணத்திற்குச் சரியான மதிப்பு; ரஸனைக்கு உகந்த விருந்து; கண்களுக்கும் உள்ளத்திற்கும் மகிழ்ச்சி தரும் அழகிய அமைப்பும் அம்சங்களும் கூடிய பிரசுரம். தேவையான பதிப்பைத் தெளிவாகக் குறிப்பிடவும்.

## வர்ஷருது மலர்

முன் வெளியான இரு ருதுமலர்களைப்போலவே சிறந்த முறையில், உயர்ந்த பேப்பரில், அழகிய படங்களுடன் அச்சாகி வருகிறது. தீபாவளிக்கு முன்னர் வெளியாகும். பல ரஸமான கதைகள், கட்டுரைகள், ஹாஸ்யம், வியாசம், இலக்கியம், சரித்திரம் முதலியவற்றைத் தாங்கி வெளிவரும். முற்றிலும் ஸ்த்ரீகளால் எழுதப்பட்ட புதிய உருப்படிகளே. முன் இரண்டு மலர்களில் எழுதாதவர்களே இம்மலரை அலங்கரிக்கின்றார்கள்

ஷை மூன்று பிரசுரங்கள் சம்பந்தமான ரிஸர்வேஷன் கூப்பன் 32வது பக்கத்திற்கெதிரே வெளியாகியிருக்கிறது. உடனே அதை உபயோகித்துத் தங்கள் பிரதிகளைப் பதிவு செய்துகொள்ளுங்கள்.

## பாக்கி சந்தா 12 அணா

செலுத்த வேண்டியவர்களில் பலர் புது வருஷ சந்தாவுடன் சேர்த்து ஒரே செலவில் அனுப்புவதாக எழுதுவதால் இம்மாத சஞ்சிகையை அனுப்பியிருக்கிறோம். அடுத்த மாதத்துக்குள் அவசியம் அனுப்பவும். --மானேஜர்.

ஜகன்மோகினி

Jagan Mohini - Regd. No. M. 2210



# பெண்மணியின் பெருமையான தொழில்!

நோய்வாய்ப் பட்டோ அல்லது காயமடைந்தோ உள்ள நமது வீரர்களுக்குத் தொண்டு செய்து தேற்றுவதைவிட உயர்ந்த பணி இந்த யுத்த காலத்தில் வேறென்ன இருக்கிறது? இச்சிறந்த வீரர்கள் தேர்ச்சிபெற்ற, மென்மையான கரங்களின் பூரண உதவியையே முற்றிலும் நம்பியிருக்கிறார்கள். தேர்ச்சியடைந்த நர்ஸ்கள் இல்லையேல் நமது டாக்டர்களும் அவர்களுடைய வைத்திய சாஸ்திரமும் தங்கள் நோயாளிகளைப்போலவே தவிக்கவேண்டியதுதான்; யுத்தத்தின் போக்கு தீவிரமாகிக் கொண்டே வருகிறது. மிகவும் முக்கியமான இந்த சேவைக்கு மேலும் மேலும் மாதர்கள் தேவை. தாமதிக்காதீர்கள்! வெற்றியை உறுதியாக்கிக் கொண்டிருக்கும் வீரர்களுக்குச் சேவை புரிய முன்வாருங்கள்.

முந்திய அநுபவம் அவசியமில்லை; ஏனெனில், நர்ஸாகப்பதிவுசெய்துகொள்வதற்கு முன்பே யாவும் வெகு குறைந்த காலத்திலேயே போதிக்கப்படுகின்றது. ஏற்கனவே தேர்ச்சிபெற்ற நர்ஸ்கள் நேரிடையாக உடனே ஏற்றுக்கொள்ளப்படுவார்கள்; முந்திய அனுபவத்திற்காக சம்பள உயர்வும் உண்டு. திருப்திகரமாக சேவைசெய்து முடிந்தபின் ஒரு தனி சன்மானமும் உண்டு.

ஐ. எம். என். எஸ். பொறுப்புகளை ஏற்க சாத்தியப்படாதவர்கள் ஏ. என். எஸ். கோஷ்டியில் விசேஷ ஏற்பாட்டுடன் சேரலாம். மற்ற விவரங்களுக்கு உங்கள் பிரதேசத்திலுள்ள ஸெயின்ட் ஜான் ஆம்புலன்ஸ் ப்ரிகேடின் லேடி ஸூப்பரின்டென்டுக்கு எழுதுங்கள். அன்னாருடைய விலாசத்தை அறிவதில் உங்களுக்கு ஏதேனும் சிரமமிருந்தால் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்;-- டைரெக்டர் ஜெனரல், இந்தியன் மெடிகல் ஸர்விஸ், டில்லி,

*இந்தியாவுக்கு சேவை புரியுங்கள்!*

## ஏ. என். எஸ்.

*ஆக்ஸிலியரி நர்ஸிங் சர்விஸ்.*

AAA 992

PRINTED & PUBLISHED BY V. M. PARTHASARATHY
AT "JAGANMOHINI" PRESS, STATION ROAD, SINGAPERUMALKOIL